# தமிழருவி



கலை இலக்கிய சமூக விஞ்ஞான
சஞ்சிகை

மலை - 3

அருவி - 1

08 SEP 2015

வெளியுலகில் சிந்தனையிற் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாம் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெல்லாம் செய்து
செந்தமிழைச் செந்தமிழாய்ச் செய்திடவும் வேண்டும்
எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும். - பாரதியார்


நிர்வாக இயக்குநர்,
உதவி ஆசிரியர்:
**திரு. த. கணேசமூர்த்தி**

பிரதம ஆசிரியர் :
**திரு. ம. பா. மகாலிங்கசிவம்**

கௌரவ ஆலோசகர் :
**சிவத்தமிழ் வித்தகர்**
**திரு. சிவ. மகாலிங்கம்**

ஒப்பு நோக்கர் :
**திருமதி. உதயலதா நவதீசன்**

முகவரி:
**சிவகுல வீதி,**
**உரும்பிராய் மேற்கு,**
**உரும்பிராய்.**

தொலைபேசி :
**077 7743055**
**077 4736459**

அலுவலக முகவரி
**தமிழருவி, பலாலி வீதி,**
**டிப்போ முன்பாகக்**
**கலைவாணி வீதி.**

E.mail :
tkm.tamilaruvi@gmail.com


## ஆசிரியரின் உள்ளத்திலிருந்து.....

மீண்டுமொரு தமிழருவி சஞ்சிகையில் உங்களுடன் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். ஒரு சஞ்சிகையைத் தொடர்ச்சியாக வெளியிடுவதென்பது மிகவும் கடினமான விடயமாக இருந்தாலும் இன்றைய சந்ததி வாசிப்புப் பழக்கத்தை மேலும் விருத்தி செய்ய உதவ வேண்டும். அவர்களின் மனதிலே நல்ல சிந்தனைகளை விதைக்க வேண்டும் என்னும் ஆசையினால் தொடர்ந்தும் வெளியிட முயற்சிக்கின்றோம்.

காகிதாதிகள், அச்சிடுவதற்கான கூலி என்பவற்றின் அதிகரிப்புக்கள் காரணமாகக் கடந்த இதழின் விலையை நாம் உயர்த்தியிருந்தோம். எனினும் எம் தமிழருவியின் வாசகர்களிற் பெரும் பகுதியினராக இருக்கின்ற மாணவர்கள் இவ்வளவு பணத்தைக் கொடுத்துச் சஞ்சிகையை வாங்குவது கடினம் எனக் கடித மூலம் வேண்டியிருந்தார்கள். அவர்களின் வேண்டுகோளை ஏற்றுப் பழைய விலையான 50/= விலையிலேயே உங்களுக்குத் தருகின்றோம்.

நூற்றுக்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட சஞ்சிகை ஒன்றை 50/= விலையிற் கொடுப்பதென்பது கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாகும். எனினும் எமக்குத் தொடர்ந்து உதவுகின்ற நல்ல உள்ளங்களின் துணையோடும், விளம்பரதாரர்களின் துணையோடும் பொருளாதாரச் சுமையைத் தாங்கிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. இச்சஞ்சிகையை வாசித்து நீங்கள் பயன்பெற்றால் அதுவே எமக்கு உற்சாகத்தையும் மகிழ்வையும் தருவதாக அமையும்.

**நிர்வாக இயக்குநர்,**
**உதவி ஆசிரியர்.**

**பிரதம ஆசிரியர்**

# இந்த இதழில்.....


| | பக்கம் |
|---|---|
| 01. அறிவுப்பசி தோன்றினால் அகக்கண் திறந்துவிடும் | 03 - 09 |
| 02. அறநெறிப்பாடசாலைகள் | 10 - 13 |
| 03. தாயன்பு தனியன்பு | 14 - 16 |
| 04. மலர்கள் | 16 |
| 05. இலங்கையில் குடும்ப வன்முறை.... | 17 - 22 |
| 06. தவறா? தப்பா? | 23 - 25 |
| 07. நெருஞ்சிமுள் | 26 - 31 |
| 08. தமிழறிவு வினா - விடைகள் | 32 - 34 |
| 09. தமிழ்ச் சமூகத்தில் அருகிவரும் .... | 35 - 40 |
| 10. புதிய வேதம் | 41 - 53 |
| 11. மாணவர் வலுவூட்டற் பகுதி | 54 - 56 |
| 12. ரகசிய முத்திரைகள் | 56 |
| 13. அளவான பணமும் அளவான பணக்காரரும் | 57 - 61 |
| 14. ஓவியமும் சிற்பமும் ஒன்றிணைந்த அம்மணமும் | 62 - 67 |
| 15. எங்கெங்கு காணினும்...... | 68 - 70 |
| 16. படித்ததிற் பிடித்தது | 71 - 72 |
| 17. உணவு கூடினும் குறையினும் நோய் செய்யும் | 73 - 75 |
| 18. சிந்தியுங்கள் செயற்படுங்கள்.... | 76 - 78 |
| 19. பேராசிரியர் மா. சின்னத்தம்பி | 79 - 85 |
| 20. பயணங்கள் முடிவதில்லை.... | 86 - 89 |
| 21. விவசாயமும் நாமும் | 90 - 96 |
| 22. பனையோலை ராமன் காதைகள் | 97 - 99 |
| 23. சாதனையாளர் கௌரவிப்பு | 100 - 106 |
| 24. மீளாது தவிக்கிறது | 107 |



# அறிவுப் பசி தோன்றினால் அகக் கண் (ஞானக்கண்) திறந்து விடும்!

சிவத்தமிழ் வித்தகர்
சிவ. மகாலிங்கம்

உலகில் வாழும் மனிதர்களுக்குப் பல வகையான பசிகள் ஏற்படுவதுண்டு. பசிகளில் வயிற்றுப் பசி மிகவும் மோசமானது. பசி ஏற்பட்டால் பெருமை, குடும்பச் சிறப்பு, கல்வி, அழகு, அறிவு, ஈகை, நோன்பு, உயர்வு, முயற்சி, பெண்பாலாரிடம் ஆசை கொள்ளுதல் ஆகிய பத்தும் பறந்து ஓடி விடும் என்பதைத் தமிழ் மூதாட்டி ஔவையார் தாம் அருளிய நல்வழிப்பாடலில் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.

> மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
> தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்
> கசி வந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்
> பசி வந்திடப் பறந்து போம். - (நல்வழி - 26)

வயிற்றுப்பசியைத் தீர்ப்பதற்காக நாம் நாளொன்றுக்குக் குறைந்தது மூன்று தரம் விதம் விதமான உணவுகளை உண்கின்றோம். பொதுவாக மூன்று நேரம் உண்பவர்களே அதிகமாக உள்ளார்கள். சில ஆலயங்களில் ஆறுகாலப் பூசை நடைபெறுவது போலச் சிலர் அடிக்கடி வயிறாகிய ஓம குண்டத்திற்குத் தீனி போட்டுக் கொண்டே இருப்பார்கள். வயிற்றுப்பசி, உடற்பசி என்பவற்றைப் போக்குவதில் அக்கறை கொண்டு செயற்படுபவர்கள் இளம் வயதிலேயே நோயாளிகள் ஆகி விடுகின்றார்கள். போகி மிகவிரைவில் ரோகி ஆகி விடுவான் என்று கண்ணதாசனும் தனது பட்டறிவை ஆதாரமாகக் கொண்டு, தான் எழுதிய நூலில் குறிப்பிட்டுள்ளார்.



வயிற்றுப்பசி ஏற்படுவது போல ஒவ்வொரு மாணவனிடமும் அறிவுப் பசியும் ஏற்படல் வேண்டும். அறிவுப் பசி ஏற்பட்டு விட்டால் பல நூல்களைத் தேடிப் படிக்கும் ஆர்வம் ஏற்பட்டு வரும். இந்த அறிவுப் பசி சிறிய வயதிலேயே மாணவனிடம் ஏற்படுவதற்குக் குடும்பம், பாடசாலை, சனசமூக நிலையங்கள் போன்ற சமுதாய நிறுவனங்கள் துணையாக அமைதல் வேண்டும்.

மாணவனின் மனதைப் பண்படுத்துவதோடு அறிவையும் கூர்மையாக்கக் கூடிய தரமான நூல்களைத் தேர்ந்தெடுத்து வாசிக்கும் பழக்கத்தைச் சிறிய வயதிலேயே பெற்றோர் பிள்ளைகளிடம் ஏற்படுத்துதல் வேண்டும். நல்ல நூல்களைத் தேடி வாசிப்பதில் பெற்றோருக்கு ஈடுபாடு இருந்தால்தான் பிள்ளைகளிடமும் அந்த ஆர்வம் ஏற்படும். வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் அறிவை வளர்ப்பதற்குத் துணை செய்வது போல புலன் இன்பங்களுக்குத் தீனி போட்டு வாழ்வைச் சீரழிக்கவும் வழி காட்டுகின்றன. பெற்றோர் தொலைக் காட்சியில் தொடர் நாடகங்களைப் பார்ப்பதில் ஆர்வம் காட்டினால் வீட்டில் வளரும் சிறுவர்களும் அதில் தம்மை அறியாமல் ஈடுபாடு கொள்வார்கள். இத்தகைய கவனக் கலைப்பான்களால் மாணவன் தனது சுய அறிவை வளர்க்கும் ஆற்றலை இழந்து விடுகின்றான். "வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகின்றான்." என்பது நம்மிடம் உள்ள முதுமொழி. பாடுபட்டு உழைத்துப் பணத்தை வங்கியில் சேமிப்பது போல நல்ல நூல்களைத் தேடிப் படித்து அறிவு வங்கியில் இளம் வயதிலேயே நிறையச் சேமித்துக் கொள்ள வேண்டும்.

நல்ல நூல்களைத் தேடி வாசிப்பதால் மாணவர்களின் சொற்களஞ்சியத் தேட்டம் (Vacabulary) அதிகரிக்கும். சொற் களஞ்சியம் நிறைய உள்ள மாணவர்களால் தங்களுடைய கருத்துக்களைப் பேச்சிலும் எழுத்திலும் தெளிவாக விளக்க முடியும். சொற் களஞ்சியத்தைக் கடையில் வாங்க முடியாது. இலஞ்சம் கொடுத்தும் பெறமுடியாது. பாடசாலையில் தரமான நூல் நிலையங்கள் அமைந்திருத்தல் வேண்டும். நூல் நிலையத்தில் நல்ல நூல்கள் இருந்தால் மட்டும் போதாது. அந்த நூல்களை மாணவர்கள் பயன்படுத்துவற்கான வழிவகைகள் செய்யப்படல் வேண்டும்.

நல்ல நூல்களைத் தேடி வாசிப்பதால் மாணவர்களின் சொற்களஞ்சியத் தேட்டம் (Vacabulary) அதிகரிக்கும். சொற்களஞ்சியம் நிறைய உள்ள மாணவர்களால் தங்களுடைய கருத்துக்களைப் பேச்சிலும் எழுத்திலும் தெளிவாக விளக்க முடியும். சொற் களஞ்சியத்தைக் கடையில் வாங்க முடியாது. இலஞ்சம் கொடுத்தும் பெறமுடியாது. பாடசாலையில் தரமான நூல் நிலையங்கள் அமைந்திருத்தல் வேண்டும். நூல் நிலையத்தில் நல்ல நூல்கள் இருந்தால் மட்டும் போதாது. அந்த நூல்களை மாணவர்கள் பயன்படுத்துவற்கான வழிவகைகள் செய்யப்படல் வேண்டும்.

தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் வாரத்தில் ஒரு பாட வேளையை மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதற்காகச் செலவிடுவது நன்றாக இருக்கும். மாணவர்கள் வாசித்த புத்தகத்தில்

08 SEP 2015

உள்ள கருத்துக்களைச் சுருக்கமாக அவர்களிடம் கேட்டறிவதன் மூலம் வாசிக்கும் பழக்கத்தை மாணவன் மேற்கொள்கிறானா என்பதை ஆசிரியர் அறிந்து கொள்ளலாம். நல்ல நூல்களைத் தேடி வாசிக்கும் மாணவனைக் கண்டறிந்து அவனுக்குப் பரிசில்களை வழங்கி ஊக்குவிக்கலாம். யாழ் இந்துக் கல்லூரியில் ஆசிரியனாக இருந்த காலத்தில் வாசிப்புப் பழக்கத்தை மாணவர்களிடம் ஏற்படுத்துவதற்கான ஒரு வழிமுறையைக் கையாண்டிருந்தேன். வருட ஆரம்பத்தில் ஒவ்வொரு மாணவனும் நல்லதொரு புத்தகத்தை வாங்கி வகுப்பிற்குத் தர வேண்டும் என்று கூறினேன். வகுப்பில் படித்த முப்பத்தாறு மாணவர்களும் ஒவ்வொரு புத்தகத்தை வாங்கித் தந்தார்கள். இதனைச் சுழற்சி முறையில் மாணவர்களுக்கு வாரந்தோறும் வாசிக்கக் கொடுத்தேன். வாரத்தில் ஒரு பாடவேளை படித்த நூல்களைப் பற்றி மாணவர்கள் வகுப்பில் சக மாணவர்களுடன் கலந்துரையாடுவார்கள். வருட முடிவில் மாணவர்கள் வாங்கித் தந்த புத்தகங்களை அவர்களிடமே கொடுத்து விட்டேன். வகுப்பில் உள்ள ஒவ்வொரு மாணவர்களும் ஒரு புத்தகத்தை வாங்கிக் கொடுப்பதன் ஊடாக முப்பத்தாறு புத்தகங்களை வாசிக்கும் வாய்ப்பினைப் பெற்றார்கள். வாசிப்புப் பழக்கத்தினால் மாணவர்கள் எழுதுகின்ற மொழி நடையில் சிறப்பான மாற்றம் ஏற்பட்டதைப் பார்த்துப் பூரிப்படைந்தேன். பாடசாலை மன்றங்களில் நடைபெறும் நிகழ்வுகளில் பங்குபற்றச் செய்வதன் ஊடாக மாணவர்களுடைய பேச்சாற்றல், நடிப்பாற்றல் என்பன மிளிர்வதற்குத் துணை செய்வோம். கையெழுத்துப் பிரதிகளை வெளியிடுவதன் ஊடாகக் கட்டுரை, கவிதை, சிறுகதை எழுதும் பயிற்சிகளையும் விஞ்ஞானம், கணிதம் ஆகிய அறிவியல்துறைப் பாடங்களில் உள்ள செய்திகளை வெளிப்படுத்தும் திறனையும் மாணவர்களிடம் வளர்க்கலாம். மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்கள் வெளிப்படுத்துவதற்கு மொழியறிவே சிறந்த ஊடகமாக உள்ளது. பாடப்புத்தகங்களின் ஊடாக மாணவன் பெறும் அறிவு எல்லைப் படுத்தப்பட்டது, மட்டுப்படுத்தப்பட்டது. சுய கற்றலின் ஊடாக மாணவன் தேடும் அறிவே அவனைப் பலதுறை ஆற்றல் கொண்டவனாகப் பரிமளிக்கச் செய்கிறது.



க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்கள் பாலர் பாடசாலை ஆசிரியர்களும், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களும் வழங்கும் பாடக் குறிப்புக்களை (Notes) மட்டுமே துணையாகக் கொண்டு பாடங்களைக் கற்கின்றார்கள். பாடத்துடன் தொடர்புடைய உசாத்துணை நூல்கள் எதையுமே தேடி வாசிப்பதில்லை. நூலகங்களில் உள்ள கலைக் களஞ்சியத் தொகுப்புகளை என்றுமே கண்ணால் பார்க்காத உயர்தர வகுப்பு மாணவர்களும் இருக்கின்றார்கள். பல்கலைக்கழகங்களில் மிகப் பெரிய அறிவுக்களஞ்சியம் போல அமைந்துள்ள நூலகங்கள் உள்ளன. பல்கலைக் கழக மாணவர்களில் சிறு பகுதியினரே அந்த நூலகங்களைப் பயன்படுத்திப் பலனைப் பெறுகின்றார்கள். வாசிப்புப் பழக்கம் குறைவடைவதால் மாணவர்கள் எழுதுகின்ற மொழிநடை மிகவும் மோசமாக உள்ளது. எழுத்துப் பிழை, சொற்பிழை, வாக்கிய அமைப்பில் பிழை, இலக்கணப்பிழை, குறியீட்டுப்பிழை எனப் பல பிழைகளும் அடங்கியிருப்பதாகவே உயர்தர மாணவர்கள் கூட விடைகளை எழுதுகின்றார்கள்.


ஆரம்பக் கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்களே மாணவர்களிடம் மொழியறிவு வளர்வதற்குக் காரணகர்த்தாவாக உள்ளார்கள். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்பது நம்மிடம் உள்ள முதுமொழி. பிஞ்சு உள்ளங்களிலே எதையும் பதியச் செய்வது சுலபமாகும். இலக் கியத்தைக் கற்பதனால் மாணவனிடம் தாய்மொழிப் பற்றும் ஈடுபாடும் ஏற்படும். நாங்கள் மாணவர்களாக இருந்த காலத்தில் மூன்றாம் வகுப்பிலிருந்து க.பொ.த (சாதாரண தரம்) வரை இலக்கிய மஞ்சரி என்ற புத்தகம் தமிழ்மொழியைக் கற்பதற்குத் துணை நூலாக இருந்தது. குரும்பசிட்டிக் கிராமத்தைச் சேர்ந்த பண்டிதர் வ. நடராஜனும், இரசிகமணி கனக செந்திநாதனும் இணைந்து மாணவர்களின் வகுப்பின் தரத்திற்கு ஏற்ப தமிழ் இலக்கியப் பாடங்களைத் தொகுத்து இலக்கிய மஞ்சரி என்ற நூல்களை வெளியிட்டிருந்தார்கள். மூன்றாம் வகுப்புப் புத்தகத்தில் மகாகவி பாரதியாரின் "தீராத விளையாட்டுப் பிள்ளை" பாடல் இருந்தால் நான்காம் வகுப்புப் புத்தகத்தில் நவாலியூர் சோம சுந்தரப் புலவரின் "ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை" என்ற பாடல் இருக்கும். வகுப்பின் தரம் கூடக் கூடப் பாடல்களின் தரமும் கூடியதாக அமையும்.

க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்கள் பாலர் பாடசாலை ஆசிரியர்களும், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களும் வழங்கும் பாடக் குறிப்புக்களை (Notes) மட்டுமே துணையாகக் கொண்டு பாடங்களைக் கற்கின்றார்கள். பாடத்துடன் தொடர்புடைய உசாத்துணை நூல்கள் எதையுமே தேடி வாசிப்பதில்லை. நூலகங்களில் உள்ள கலைக் களஞ்சியத் தொகுப்புகளை என்றுமே கண்ணால் பார்க்காத உயர்தர வகுப்பு மாணவர்களும் இருக்கின்றார்கள்.

ஒன்பதாம், பத்தாம் வகுப்புக்களில் நளவெண்பா, கம்பராமாயணம், பெரியபுராணம் ஆகியவற்றில் வரும் பாடல்கள் இடம்பெற்றிருக்கும். இலக்கியத்தில் ஏற்பட்ட ஆர்வத்தினால் மாணவனிடம் மொழியிலும் ஈடுபாடு ஏற்பட்டது. இலக்கியத்தைக் கற்பித்த ஆசிரியர்களும் பாடல்களை அனுபவித்துக் கற்பித்தார்கள். ஆசிரியர்களுடைய கற்பித்தல் திறமையினால் மாணவர்களிடம் தாய்மொழிப் பாடத்தில் பற்றும் ஈடுபாடும் ஏற்பட்டது.

கணிதத்திற்கு ஆதாரமான எண்ணையும் மொழிக்கு ஆதாரமான எழுத்தையும் இகழ்ந்து ஒதுக்கக் கூடாது என்பதை "எண் எழுத்து இகழேல்" என ஆத்திசூடி குறிப்பிடுகிறது. மனிதனுடைய முகத்தில் கண் முக்கியமான உறுப்பாக இருப்பதைப் போலக் கணிதமும் மொழியும் சிறப்பானவை என்பதை, "எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்" எனக் கொன்றைவேந்தன் கூறுகிறது.

அறிவுப் பசி கொண்டவர்கள் வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொண்டே இருப்பார்கள். கல்விக்கு வரம்புமில்லை, எல்லையுமில்லை. வாழ்நாட் கல்வி என்று கல்வியியலாளர்கள் இதனைக் கூறுவார்கள். "சாவின் போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும் - என்தன் சாம்பரும் தமிழ் மணக்க வேக வேண்டும்" என்று நமது நாட்டுக் கவிஞர் பண்டிதர் சச்சிதானந்தன் தனது பாடலில் குறிப்பிட்டுள்ளார். கல்வி அறிவில்லாதவன் மிருகம் (வித்தியா விஹின பசு) என்று வடமொழி சுலோகம் கூறுகிறது. அறிவு வளர்ச்சிக்கு காரணமான நூல்களைக் கற்றவரோடு கல்லாதவரை ஒப்பிட்டால், அவர்கள் மிருகத்திற்குச் சமமானவர்கள் என்பதை,



*"விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்*
*கற்றாரோடு ஏனையவர்"*

எனத் தமிழ் மறையாகிய திருக்குறள் கூறுகிறது.

ஆற்றல் ஒன்றே இன்றைய வாழ்வில் இன்றியமையாத தேவையாக உள்ளது. ஆற்றல் அறிவிலிருந்து பிறக்கிறது. அறிவைத் தருவது கல்வி. அதனால் தான் கல்வி என்ற மந்திரத்தால் தீர்க்க முடியாத பிரச்சினைகளே இல்லை என்கிறார் சுவாமி விவேகானந்தர். மனிதனை உருவாக்குகின்ற (Man Making Education) சொந்தக் காலில் நிற்கின்ற கல்வி மாணவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும் என்கிறார். 'கற்றலும் கற்பித்தலும் முக்கியம், ஏனெனில் அதுவே தவம்' எனத் தைத்தீரிய உபநிடதம் கூறுகிறது. மனிதனில் ஏற்கனவே உள்ள நிறைநிலையை வெளிப்படுத்துவது

கல்வி. மனிதனில் ஏற்கனவே உள்ள தெய்வீகத்தை வெளிப்படுத்துவது சமயம். கல்வி தன்னை வெளிப்படுத்துகிறது. சமயம் தன்னை அறியும் நிலையை ஏற்படுத்துகிறது. நல்லொழுக்க வாழ்வு வாழவும், மனித குலத்திற்குச் சேவை செய்யவும் கல்வி ஒருவனைத் தகுதி உடையவன் ஆக்க வேண்டும். மனிதனைச் சரியாகச் சிந்திக்கப் பயிற்றுவிப்பதே உண்மையான கல்வி ஆகும். இதனையே "நல்லவை எண்ணல் வேண்டும் எண்ணிய முடிதல் வேண்டும்" என்று பாரதியும் பாடுகின்றார். தன்னம்பிக்கை கொள்ளுங்கள் என்ற அறிவுரையை ஒரு தாரக மந்திரம் போல விவேகானந்தர் கூறியுள்ளார். தன்னில் நம்பிக்கையை இழப்பது படைப்பாற்றல் (Creativity) வெளிப்படுவதைத் தடுக்கிறது. "எழுந்திரு, விழித்திரு கருதிய காரியம் கைகூடும் வரை உழைத்திரு" என்பது வீரத் துறவி இளைஞர்களுக்கு வழங்கிய தாரக மந்திரமாகும். எஃகு போன்ற தசையும் இரும்பு போன்ற நரம்பும் கொண்ட இளைஞர் சமுதாயம் உருவாக வேண்டும் என்கிறார்.

> மனிதனில் ஏற்கனவே உள்ள நிறைநிலையை வெளிப்படுத்துவது கல்வி, மனிதனில் ஏற்கனவே உள்ள தெய்வீகத்தை வெளிப்படுத்துவது சமயம், கல்வி தன்னை வெளிப்படுத்துகிறது. சமயம் தன்னை அறியும் நிலையை ஏற்படுத்துகிறது. நல்லொழுக்க வாழ்வு வாழவும் மனித குலத்திற்குச் சேவை செய்யவும் கல்வி ஒருவனைத் தகுதி உடையவன் ஆக்க வேண்டும்.

"முயற்சியுள்ள மானிடரில் சிங்கம் போன்றவனையே திருமகளும் அணைவாள்" என்றே பஞ்ச தந்திரமும் குறிப்பிடுகிறது. உய்வோம், செய்வோம் என்று சிந்திப்பவர்களின் உள்ளத்தில் அவர்களின் செயற்பாடுகளுக்கு ஓர் உந்து சக்தியாக அன்னை பராசக்தி செயற்படுவாள் என்பதை,

*"உய்வம் என்ற கருத்துடையோர்கள்*
*உயிரினுக்குயிராகிய தெய்வம்*
*செய்வம் என்றொரு செய்கை எடுப்போர்*
*செம்மை நாடிப் பணிந்திடும் தெய்வம்"*

என மகாகவி பாரதியாரும் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

அன்றாட வாழ்க்கைப் போராட்டத்திற்குத் தயார் செய்யாத கல்வி, ஒழுக்க வலிமையைத் தராத கல்வி, பிறர்நலம் நாடுகின்ற உணர்வைத் தராத கல்வி, மனோபலமாகிய தைரியத்தைக் கொடுக்காத கல்வியைக்





கல்வி என்று கூற முடியாது. கல்வி என்பது புலன்களுக்குச் சுதந்திரம் கொடுப்பது அல்ல என்றும் புலன்களிடமிருந்து சுதந்திரம் அடைவதே என்றும் சுவாமி அபிராமானந்தர் கூறியுள்ளார். உண்மையான கல்வி பெற்றவரின் பண்பு, மனம் ஒரு கலங்காத சமுத்திரம் போல இருக்கும். சமுத்திரத்தில் எவ்வளவு நீரைக் கொட்டினாலும், அதிலிருந்து எவ்வளவு நீரை எடுத்தாலும் எந்தப் பாதிப்பும் இன்றி சமுத்திரம் அப்படியே இருக்கும். சமநிலை தளம்பாத மனநிலை மனிதனிடம் ஏற்படுவதற்கு அவன் கற்கும் கல்வி துணை செய்தல் வேண்டும்.

கலைமகளாகிய சரஸ்வதியை அறிவுத் தெய்வமாக சைவப் பெருமக்கள் வணங்கி வருகின்றார்கள். கலாப மயிலாகிய வாணி சரஸ்வதி நெற்றி வியர்வையை நிலத்தில் பசளையாக்கி உழுதுண்டு வாழும் உழவர் கரங்களிலும், கவிமழை பொழியும் கவிவாணர்களின் நாவிலும், கருணை உள்ளம் படைத்த அறிவாளர்களின் நெஞ்சிலும் நடமாடுகின்றாள் எனக் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை குறிப்பிடுகின்றார்.

*"நாடிப் புலங்கள் உழுவார் கரமும் - நயவுரைகள்*
*தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவும் - செழுங்கருணை*
*ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் - உவந்து நடம்*
*ஆடிக் களிக்கும் மயிலே உன்பாதம் அடைக்கலமே"*

வீணையும் நூலும் தரித்திருப்பவளே, அன்ன வாகனத்தில் வீற்றிருப்பவளே, சரஸ்வதி தேவியே உன்னை வணங்குகிறோம். எங்களுக்கு அறிவுத் தானத்தை நல்கிடு என நாள்தோறும் சரஸ்வதியை வணங்கி எமது அறிவினை வளர்ப்போமாக! சரஸ்வதி நமஸ்தே அஸ்து, வீணை புஸ்தக தாசினி ஹம்ஸ வாஹனம் ஆருடே, வித்யாதானம் குருஷ்வ ந : 1

## இயற்பெயர்

1. பாரதிதாசன் – சுப்புரத்தினம்
2. விவேகானந்தர் – நரேந்திரநாததத்தர்
3. வீரமாமுனிவர் – கான்ஸ்டன்டின் ஜோசப் பெஸ்கி
4. வள்ளல் சீதக்காதி – அப்துல் காதிரு செய்யது
5. கிங்கொல் – எமிலி ஐயா

*"அறத்தால் வருவதே இன்பம் மற்றெல்லாம்*
*புறத்த புகழும் இல"*

இக் குறள் மூலம் அறம் செய்பவரும் அறத்தின் கண் நிற்பவரும் இம்மைக்கும் மறுமைக்கும் இன்பத்தினை அடைவர் என்பது உண்மை. இவ் அறநெறியினைப் பெற்றோர்களுக்குப் போதிக்க வேண்டும். அவ் அறநெறியைப் பிள்ளைகளின் மனதில் பசுமரத்தாணி போல் எப்படி பதிய வைக்க வேண்டும் என்பதே முக்கியம் அறிந்திருக்க வேண்டும். பெரும்பாலான பெற்றோர் பிள்ளைகள் வளர வளரத் தானாகவே கற்றுக் கொள்வார்கள் என எண்ணுவதும், பிள்ளைகளைக் கண்டித்தால் தங்களுக்கு வீணான துன்பம் வந்து சேரும் என அஞ்சும் ஆசிரியரும் உள்ளவரை அறநெறி நிற்கும் சமுதாயத்தினை எக்காலமும் கட்டி எழுப்ப முடியாது போய்விடும்.



# அறநெறிப்பாடசாலைகள்

மகாபாரதத்தில் அபிமன்யு என்பது ஒரு பாத்திரம். பாண்டவர்களும், கௌரவர்களும், வீஷ்மர், துரோணாச்சாரியர் போன்றோரை குருவாக்கி முறைப்படி போர் வித்தைகளைக் கற்றுக் கொண்டவர்கள். அபிமன்யுவோ குரு எவரும் இன்றித் தாயின் வயிற்றில் உள்ளபோதே அனைத்துக் கலைகளையும் கற்றுக் கொண்ட பாத்திரம். குருசேத்திரப் போரில் துரோணாச்சாரியாரினால் அமைக்கப்பட்ட சக்கர வியூகத்தை உடைத்துக் கொண்டு உட்புகுந்த அபிமன்யுவுக்கு பின் அதை உடைத்துக் கொண்டு வெளிவர முடியாமல் வீரமரணம் எய்துகின்றான். காரணம் என்னவென்றால் சுபத்திராவின் வயிற்றில் அபிமன்யு இருக்கும் போது கிருஸ்ண பரமாத்மா போர் முறைகளைப் பற்றி அருச்சுனனுக்கு எடுத்துக் கூறுவது வழக்கம். அன்று சக்கரவியூகம் அமைப்பது அதைத் தவிர்த்து உள்ளே போகாது பின் வெளிவருவது சம்மந்தமான முறைகளை உபதேசித்த போது சுபத்திரையானவள் பாதியில் தூங்கி விடுகின்றாள். அதனால் அபிமன்யுவால் முழுமையாக அதைக் கற்றுக் கொள்ள முடியாமல் போயிற்று.

இதிலிருந்து ஒரு குழந்தையானது தாயின் கருவிலிருந்தே கற்கத் தொடங்கி விடுகின்றது என்பதை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. இதனை இன்றைய விஞ்ஞான உலகமும் பூரணமாக ஏற்றுக் கொண்டது. எனவே சிறுவயது முதல் பிள்ளைகளைப் பெற்றோரும் ஆசிரியரும் வருங்கால சமூகத்திற்கு நற்பிரஜைகளை உருவாக்குவதற்காக அவர்களை அறநெறியில் வாழக் கற்றுக் கொடுக்க வேண்டிய அவசியத்தை நாம் வலியுறுத்துகின்றோம்.

இதனால் தானோ என்னவோ 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பதும் 'ஐந்தில் வளையாதது ஐம்பத்தில் வளையுமா?' என்பதும் மிகமிக உயர்வான முதுமொழிகள் ஆகும்.

இன்றைய கால கட்டத்தில், கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று திரியும் இளைய சமுதாயம் நல்ல பயன் உள்ள சமுதாயமாக மாறி வீட்டிற்கும் நாட்டிற்கும் அறநெறி நின்று நல்லது செய்ய வேண்டும். மேற்படி கோட்பாட்டிற்குச் செயல் வடிவம் கொடுப்பதற்காக எமது இந்து கலாசாரத் திணைக்களமானது ஆலயங்கள் தோறும் அறநெறிப்பாடசாலைகளை ஸ்தாபித்து அதன் மூலமாக சின்னஞ்சிறு மழலைகளை நல்வழிப்படுத்தும் முயற்சியில் அயராது ஈடுபட்டும் உழைத்தும் வருகின்றது. அந்த வகையில் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திலும் 2001ம் ஆண்டு நவராத்திரி விஜயதசமி அன்று சமூகஜோதி கணேசதாசன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை மிகமிகச் சிறப்பாக நடந்து வருகின்றது. இதற்குச் சான்றாக 2013ம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் மிகச் சிறந்த பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டு கொழும்பு மாநகரில் வைத்து அதற்கான விருதும் வழங்கப்பட்டது.

இன்றைய கால கட்டத்தில் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று திரியும் இளைய சமுதாயம் நல்ல பயன் உள்ள சமுதாயமாக மாறி வீட்டிற்கும் நாட்டிற்கும் அறநெறி நின்று நல்லது செய்ய வேண்டும். மேற்படி கோட்பாட்டிற்கே செயல் வடிவம் கொடுப்பதற்காக எமது இந்து கலாசாரத் திணைக்களமானது ஆலயங்கள் தோறும் அறநெறிப்பாடசாலைகளை ஸ்தாபித்து அதன் மூலமாக சின்னஞ்சிறு மழலைகளை நல்வழிப் படுத்தும் முயற்சியில் அயராது ஈடுபட்டும் உழைத்தும் வருகின்றது.

அமரர் கணேசதாசன் அவர்கள் இப்பாடசாலையை இவ்வுயர் நிலைக்குக் கொண்டுவர அடித்தளம் இட்டார் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

அவருடைய காலத்தில் அறநெறிச் சிறார்களின் முற்று முழுதான ஆக்கங்களைக் கொண்டு இருமலர்கள் வெளியிடப்பட்டதோடு மட்டும் அல்லாது அநேகரின் பாராட்டினைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

அப்பெருமகனாரின் மறைவிற்குப் பின்னர் இளைப்பாறிய அதிபர் அ.மு. அருணாச்சலம் அவர்களின் நெறிப்படுத்தலிலும் இளைப்பாறிய உபஅதிபர் வே. தம்பாப்பிள்ளை அவர்களின் நெறிப்படுத்தலிலும் திறமையாக நடைபெற்று வந்தது. அதன்பின் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபையின் நேரடிக் கண்காணிப்பிலும் பொறுப்பாசிரியர் லிங்கறாஜ் அவர்களின் பொறுப்பு வாய்ந்த நடவடிக்கைகளாலும் மேற்படி பாடசாலையானது பலப்பல சாதனைகளைப் படைத்து வெற்றிநடை போட்டு வருகின்றது. இவ் எழுச்சிக்கு எமது பாடசாலையின் ஆசிரியர்களான திருமதி. க. அப்பாத்துரை, திருமதி. ச. ஜெயச்செல்வி, திருமதி. ல. டினேஜினி, செல்வி. ஏ. தமிழினி, செல்வி. ச. தமிழினி, செல்வி. நா. கார்த்திகா, செல்வி. தி. ஜெயமலர் ஆகியோரின் பணியே காரணம். இவர்கள் மாணவச் செல்வங்களின் முன்னேற்றத்திற்குப் பக்கபலமாக உழைத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ் அறநெறிப் பாடசாலையினால் மாணவச் செல்வங்களிடையே இலைமறை காயாக இருந்த அநேக திறமைகள் வெளிக்கொணரப்பட்டு வருவதோடு பெற்றோரும் ஆசிரியரும் வியக்கத்தக்க வகையிலே பலதிறமைகளை வெளிக்காட்டியும் உள்ளார்கள்.



அவ்வரிசையில் எமது பாடசாலையில் வருடாவருடம் நடைபெறுகின்ற பேச்சுப் போட்டி, பண்ணிசைப் போட்டி, மாலைகட்டுதல், கோலம் போடுதல், தோரணம் செய்யும் போட்டி, மனைப் பொருளியற் போட்டி போன்றவற்றில் மாணவர்கள் பெற்றுக் கொண்ட பரிசில்கள் இதற்குச் சான்று பகர்கின்றன. எமது மாணவர்கள் பாடசாலை மட்டத்தோடு மட்டுமல்லாது அயல் கிராமங்களில் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற போட்டிகளிலும் தமது திறமைகளை வெளிக்காட்டத் தவறியதில்லை. அந்த வகையில் எமது பாடசாலை மாணவியான செல்வி. ஜெ. ரிதுர்சிகா தொடர்ந்து நான்கு வருடங்கள் காமாட்சி அம்மன் சனசமூக நிலையத்தினால் நடாத்தப்பட்ட போட்டியில் தங்கப்பதக்கம் பெற்றுக் கொண்டார். அத்தோடு மட்டுமல்லாது தேசிய மட்டத்தில் இருதடவைகள் முதலாம் இடத்தையும் ஒருமுறை இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டார். இதே போட்டியில் தொடர்ந்து மூன்று முறை செல்வி. லோ. பிரியங்கா வெண்கலப் பதக்கமும், ஒருமுறை

வெள்ளிப்பதக்கமும் பெற்றுக் கொண்டார். சுதுமலை இந்துசமய விருத்திச் சங்கம் வாணி விழாவின் போது நடாத்திய நாவன்மை பண்ணிசைப் போட்டிகளில் நாவன்மைப் போட்டியில் கை. கலைச்செல்வி (பாலர்பிரிவு), சி. சுலக்சினி (கீழ்), கா. நந்தாயினி (மத்திய) மூவரும் தங்கப் பதக்கங்களையும் பண்ணிசைப் போட்டியில் சி. சுலக்சினி (கீழ்), இ. கௌதமி (கீழ்) முறையே வெள்ளி, வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுக் கொண்டதும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

பாடசாலையின் வரலாற்றுக் காலத்தில் மாணவர்கள் பெற்றுக் கொண்ட பரிசில்களை விபரிப்பதாயின் இச்சஞ்சிகை தாங்காது என்பதால் அவற்றை இங்கு குறிப்பிடாமல் விடுகின்றோம். மேலும் இவற்றினை நாம் இங்கு குறிப்பிட வேண்டிய அவசியம் என்னவெனில் பாடசாலைக் கல்விக்குப் புறம்பாக மேலதிகமாக மாணவர்கள் எமது அறநெறிப்பாடசாலையில் ஒழுக்க நெறியைக் கற்றுக் கொள்வது மட்டுமல்லாது பலதுறை சார்ந்த அறிவினைப் பெற்றுக் கொள்கின்றார்கள் என்பதைப் பெற்றோர்கள் அறிந்து இம்மலர் யார் யார் கைகளில் தவழ்கின்றதோ அவர்கள் காலம் தாழ்த்தாது உங்கள் உங்கள் ஊர்களில் உள்ள அறநெறிப்பாடசாலைகளில் உங்கள் பிள்ளைகளைச் சேருங்கள் என்றே கூறுகின்றோம்.

பாடசாலைக் கல்விக்குப் புறம்பாக மேலதிகமாக மாணவர்கள் எமது அறநெறிப்பாடசாலையில் ஒழுக்கநெறியைக் கற்றுக் கொள்வது மட்டுமல்லாது பலதுறை சார்ந்த அறிவினைப் பெற்றுக் கொள்கின்றார்கள் என்பதைப் பெற்றோர்கள் அறிந்து இம்மலர் யார் யார் கைகளில் தவழ்கின்றதோ அவர்கள் காலம் தாழ்த்தாது உங்கள் உங்கள் ஊர்களில் உள்ள அறநெறிப் பாடசாலைகளில் உங்கள் பிள்ளைகளைச் சேருங்கள் என்றே கூறுகின்றோம்.

ஒழுக்கம் இல்லா கல்வி, அறநெறி இல்லா வாழ்க்கை இவைகள் எல்லாம் உலகிற்குப் பயன் இல்லாதன. இவ்வறநெறிப் பாடசாலைகளைச் சீராக நடாத்தி உயர்வடையச் செய்ய வேண்டும் எனில் ஞாயிறு தோறும் தனியார் பாடசாலைகளை ஆகக் குறைந்தது நண்பகல் ஒரு மணி வரையேனும் நடாத்தாது ஆசிரியர் சமூகம் ஒத்துழைப்பு நல்கினால் உயர்ந்ததோர் சமூகத்தினை உருவாக்கியதில் ஆசிரியர்க்கும் பங்கு உண்டு என்ற மகிழ்ச்சியில் மடலை முடிக்கின்றேன்.

நன்றி

*மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய*
*தர்மகர்த்தா சபைத் தலைவர்.*

# தாயன்பு தனியன்பு



கருவுற்ற நாள் முதலாக உதிரத்தில் தாங்கி ஊனை உருக்கி உதிரத்தை உணவாக்கி சிந்தையால் தழுவி வளர்த்தெடுத்து வேதனைகள், மருத்துவ சோதனைகளைப் பொறுத்து பெற்றெடுத்து, மார்போடு அணைத்து மகிழ்வூட்டி, பாலூட்டி, மடிமீது இட்டு தாலாட்டி, உலகத்தை காட்டி ஏனைய உறவுகளை அறிவித்து, வாழ்வொன்று தந்து வாழவைக்கும் கடன் போன்ற தாயன்பின் மகத்துவத்தில் ஒருசிறு துளிதனை எழுத்தினில் வடிக்க விளைகிறேன்.

"இமயத்தின் பெருமை தனைச் சிறுகல் செப்புமா?" தாயன்பின் மகிமை சொல்லினில் சிக்குமா? தாயைப் போற்றிப்பாடாத புலவர்கள் இல்லை. தாயன்பின் தனித்துவத்தை கவியாக வடிக்காத கவிஞர்கள் இல்லை.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" எனவும் "தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை" எனவும் விளம்பியுள்ளார் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து பழந்தமிழைத் தேனாக வடித்த நம் ஔவையார். அதுமட்டுமா? உலகநீதி என்ற உயர்ந்த நீதி நூல் மூலம் உலகத்தையே அளந்த உலகநாதர் என்ற புலவரும் "மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்" என மாண்புடன் எடுத்துரைக்கிறார்.

தாயானவள் தன் பிள்ளைகள் வாழ்வில் வழிதவறும் போது ஓர் ஆசானாய் அவதாரமெடுத்து வழிமாறும் பிள்ளைக்கு மெழுகுவர்த்தியாய் தன்னை உருக்கி வழிகாட்டி, விழிநீர் துடைத்து ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறாள். தன் பிள்ளையின் இன்ப துன்பங்களில் ஒரு தோழியாகத் தோன்றி தோள் கொடுக்கிறாள். தன் பிள்ளை தவறிழைக்கும் போது குருவாக உருவெடுத்து குற்றம் களைகின்றாள். தன் மகவு தன்னைத் தூற்றினாலும் கூட அவனை ஏணியாக நின்று ஏற்றி வைக்கும் தாயன்பு – தனியன்பு.

"மாதா பிதா குரு தெய்வம்" என்கிறது சைவ சமயம். "ஒரு ஆசானை விடவும் ஈரேழு உலகையும் ஆளும் தெய்வத்தை விடவும், மேன்மையானவள் அன்னையே!" என்று ஆணித்தரமாக வலியுறுத்துகின்றது இவ்வாக்கு. இதனாலேயே தாய் தந்தையரை கண்கண்ட தெய்வம் என்று சான்றோர் கூறுகின்றனர்.

கவிஞர் வாலி,

"அம்மாவென்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காமல் உயர்வில்லையே
நேரில் நின்று காக்கும் தெய்வம் பெற்ற தாயன்றி
வேறிங்கு ஏது?"

என கவியோவியம் வரைகின்றார். இப்பாடலிற் தாயன்பின் மகத்துவத்தை புலப்படுத்த வேறேதும் உண்டோ? தாய்ப் பாசத்தின் தனித்துவத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போல புலப்படுத்துகின்றது இப்பாடல்.

தாயின் தனியன்பிற்கு பண்டைய பக்தி இலக்கியங்களிலும் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. பத்துத் திங்கள் தன் மகவை தனது வயிற்றினில் சுமந்து பெற்றெடுத்த வேளையிலிருந்தே தன் சிசுவிற்காக தன் வாழ்வைத் தியாகம் செய்யத் தயாராகின்றாள் தாய். தன் நெஞ்சிலே வேல் பாய்ந்தது போல் துடிக்கும் தாயின் இதயத்தை எப்படி வர்ணிப்பது?



தன் பிள்ளை கூனோ, குருடோ, செவிடோ இன்னும் என்னென்ன குறையோ... அழகோ, அழகில்லாப் பிண்டமோ எதுவானாலும் தன் மகவை நிறைந்த அன்புடன் பார்க்கும் ஒரே உள்ளம் தாயுள்ளம் தான். அந்த அன்பு முற்று முழுதாக தூய்மை வாய்ந்தது, சுயநலமற்றது.

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்" என்கிறது திருக்குறள்.

பெற்றெடுத்த போதிலும், தன் மகனை ஊரோர் புகழக் கேட்ட போதிலும் அகமகிழும் தாயிடம் அவனைக் கயவன் என்று கேட்டாலும் வெறுக்காத அன்புப்பிணைப்பு உள்ளது. இதனாலே தான், "பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு" என்கிறார்கள். சைவசமய குரவரான மாணிக்கவாசகர் "பால் நினைந்தூட்டும் தாயினும் சால" என தாயன்பிற்கு இலக்கணம் வகுத்துள்ளார். தன் குழந்தைக்கு எப்போது பசிக்கும் என தெரிந்து வைத்திருக்கும் அளவிற்கு தாயின் உணர்வுகள் எப்போதும் உறங்காது விழித்திருக்கும் என மாணிக்கவாசகர் கூறிச் சென்றுள்ளார்.

தாயின் தனியன்பை உணர்ந்தே பூமியை "பூமித்தாய்" என்றான். "இயற்கை அன்னை" என்று உருவகித்தான். தாய் என்ற சொல்லை முன்னிலைப்படுத்தி அமையும் "தாய்நாடு", "தாய்மொழி" என்ற சொற்கள் நம் செவிகளில் ஒலிக்கும் பொழுது எம்மை அறியாமலேயே அதன்மேல் பற்றும் பாசமும் பிறக்கின்றது அல்லவா?

எனவே, தாயானவள் தெய்வத்தின் மறு அவதாரம், அகிலத்தை ஒப்ப அவளின் அன்பு ஊற்று ஒருபோதும் வற்றாது. எதிர்கால உலகை

ஆளப்பிறந்த தன் மகவை நிகழ்கால நித்திலமாக வளர்த்தெடுக்கும் தாய் ஒரு தீர்க்கதரிசி. தாய் என்பதே இத்தரணியின் தாரக மந்திரம். கல்வெட்டில் வடிக்கப்படாவிடினும், பொற்றகட்டில் பொறிக்கப்படா விடினும்.. அதுவே என் பிரணவ மந்திரம்.



நன்றி

*கஸ்தூரி பரமானந்தன்*
*தரம் 10B*
*யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை*

---

## *மலர்கள்*

மனதை வருடும் மலர்கள்
மகிழ்ச்சி தரும் மலர்கள்
மாலை அழகாய்த் தரும் நீ
மாலையில் வாடுவதேனோ?

இறைவன் பாதம் சேரும்
ஈடிணை யில்லா மலர்கள்
மங்கை கூந்தல் மீதும்
மலர்ந் திருக்கும் மலர்கள்

செடியின் தலையில் மேலே
செழிப்பாய் இருக்கும் மலர்கள்
ஒன்றாய்ச் சேர்த்துப் பார்த்தால்,
ஒப்பிலா அழகு மலர்கள்

சின்னப் பிள்ளை மனதைச்
சிரிக்க வைக்கும் மலர்கள்
குட்டிப் பையன் பார்த்து
குதூகலிக்கும் மலர்கள்

முட்கள் சூழ்ந்த போதும்
முழு அழகு தருவாய்
பசிய இலைகள் நடுவே
பவளம் போல ஜொலிப்பாய்

ஆரபி நவதீசன்
யா/ மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம்

# இலங்கையில் குடும்ப வன்முறை தொடர்பாக
# ஒரு சமூகச் சட்டவியல் ஆய்வு

எல்லாக் குற்றங்களிற்கும் அதன் பாதகமான நேரடி விளைவுகள் சமுதாய சமூக கட்டமைப்புக்களின் எதிர்மறையான பிரதிபலிப்பை தோற்றுவிப்பதாயினும், குடும்ப வன்முறையின் வெளிப்படையற்ற போக்கில் தொடர்ச்சியாக விஸ்தீரணமாகக் கூடிய இயல்பு சமூகத்தில் தெளிவான எதிர்மறையாக அதிர்வலையினை விம்பப்படுத்துகிறது. சட்டவியலாளர் Durkheim இன் கூற்றின்படி, சமூக ஒற்றுமையும் கட்டுப்பாடும் தான் சமுதாயத்தின் அடிப்படையாகிறது. சமூக ஒற்றுமையின் அச்சாணியாக சமூக சமுதாய அடுக்கமைவின் அடிப்படை அலகாக குடும்பம் காணப்படுவதால் அதனது விழுமியத்தையும் சமுதாயம் சார் குடும்பத்தின் பெறுதிகளையும் பேண வேண்டியது தனிமனிதனின் கடப்பாடையும் தாண்டி அரசாங்கமே அதற்கான சட்டவாக்கத்தின் மூலம் சமுதாயத்தை நெறிப்படுத்த வேண்டிய தேவைப்பாடு உண்டு என்பது தர்க்கத்திற்கு அப்பாற்பட்ட நிதர்சனமாகும். இலங்கையைப் பொறுத்தவரையில் சமூக அலகு என்ற அடிப்படையில் குடும்பங்களைப் பாதுகாப்பதற்கான கடப்பாடு 1978ம் ஆண்டு அரசியலமைப்பின் அரசகொள்கையில் வழிகாட்டிக் கோட்பாடுகள் உறுப்புரை 27 (12) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு கட்டபரிணாம விருத்தி யின் பால் சட்டவாக்கத் துறையால் ஆக்கப்பட்ட சட்டம்தான் 2005ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க குடும்ப வன்முறைச் செயல் தடுப்புச் சட்டம்.



இச்சட்டத்தின் கீழ் குடும்ப வன்முறை தொடர்பாக செய்யப்படும் விண்ணப்பங்களை விசாரணை செய்வதற்கு நீதிவான் நீதிமன்றிற்கு தத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. குடும்ப வன்முறை தொடர்பாக அட்டவணை IIஇன் மாதிரி விண்ணப்பத்தை துன்புற்ற ஆளொருவரால், துன்புற்ற ஆள் குழந்தையாகக் காணப் படின் அதனது பெற்றோர்

அல்லது பாதுகாவலரால் அல்லது அக்குழந்தை யாருடன் வாழுகின்றதோ அந்த நபரால் அல்லது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையால் அங்கீகரிக்கப்பட்ட நபரால் நீதிவான் நீதிமன்றில் மேற்கொள்ள முடியும். துன்புற்ற ஆள் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் மற்றும் சத்தியக்கூற்றினை எடுத்துக் கொண்டு, குடும்ப வன்முறையைத் தடுப்பதற்கு உடனடித் தேவை ஏற்படின் 14 நாட்கள் அமுலில் இருக்கக்கூடிய இடைக்கால பாதுகாப்பு கட்டளையை நீதிமன்றம் வழங்கும். அல்லது விண்ணப்பம் தொடர்பான விசாரணையை நடத்த கட்டளையை வழங்கும். விசாரணையின் முடிவில் வன்முறையாளருக்கெதிராக அவரது வன்செயலைத் தடுக்கும்முகமாக 12 மாதங்களுக்கு மேற்படாது அமுலில் இருக்கும் நிரந்தர பாதுகாப்புக் கட்டளையை வழங்கும். அல்லது குடும்பவன்முறை மன்றுக்கு திருப்தியளிக்கக்கூடிய வகையில் நிரூபிக்கப்படவில்லை யாயின் மன்று விண்ணப்பத்தை நிராகரிக்கும்.

இச்சட்டத்தினை ஆக்குவதன் நோக்கம் (will of the Legislature) ஒரு குடும்பத்தனி அலகைப் பாதுகாப்பதற்காக குடும்ப வன்முறையால் துன்புற்ற ஆளொருவருக்கு நிவாரணம் அளிப்பதற்காகவும் மீண்டும் உயிரோட்டமான குடும்ப உறவை புதுப்பிப்பதற்காகவும் நீதிவான் நீதிமன்றங்களுக்கு தத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. "குடும்ப வன்முறை" என்ற பதத்தின் பொருள் கோடலின்படி இலங்கை தண்டனைச் சட்டக் கோவை XVI ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கொலை, கொலையாகக் குற்றமுடைய மரணம், வன்பறி செய்தல் மேலும் இவற்றின் எத்தனம் மற்றும், உளவியல் துஷ்பிரயோகம் என்பவற்றை உருவாக்கும் செயல்கள் குறிப்பிடப் பட்டள்ளன. இச்சொல் பொருள் கோடலின்படி இக்குற்றங்களால் பொதுவாக கொலை, குற்றவியல் மிரட்டல் என்பவற்றால் துன்புற்ற நபர் அச்செயற்பாடுகள் தொடர்ந்து நீடிக்கின்ற குடும்பத்தில் மீள் இணைக்கப்படுவது என்பது எவ்வளவு சாத்தியம் என்பதற்கு அப்பால் இச்சட்டத்தின் நடைமுறையின் செயல்திறன் அடை என்பதைக் கேள்விக்குள்ளாக்குகிறது. பொருள்கோடலின்படி கொலை, குற்றவியல் மிரட்டல் போன்ற பாரிய



செல்வி. நிருபா பாலசிங்கம்

குற்றங்களால் துன்புற்ற ஆளொருவருக்கு பூரண நிவாரணத்தை வழங்குமா என்ற சந்தேகத்தினையும் தாண்டி இலங்கையின் பொது திருமணப் பதிவுச் சட்டம் (Sri Lankan Marriage registration ordinance No. 19 of 1917 (General)) மற்றும் இலங்கை நீதிமன்றங்களால் தீர்க்கப்பட்ட விவாகரத்து வழக்குகளும் மறைமுகமாக குடும்பவன்முறைச் செயல் தடுப்புச் சட்டத்தையும் அதன் நோக்கத்தையும் குடும்பவன் முறையின் பொருள்கோடலையும் அதன் மட்டுப்பாடுகளையும் அடைய முடியாமல் தடுக்கிறது என்பது எடுத்தியம்பத்தக்க ஒரு விடயம் ஆகிறது. வன்ம உறவறுப்பு விவாகரத்து கோருவதற்குத் தேவைப்பாடாக இருப்பினும் நடைமுறையில் இதன் நெகிழ்வுத் தன்மை தீர்க்கப்பட்ட வழக்குகளால் குடும்ப வன்செயலால் அமைய நிலை வன்ம உறவறுப்புக்கு உள்ளாகினால் துன்புற்ற நபர் விவாகரத்துக் கோரலாம் என்ற தளர்வுநிலை நிலைப்பாடு குடும்பவன்முறைச் செயல் தடுப்புச் சட்டத்தின் நோக்கத்தினை அதாவது குடும்ப அலகினைப் பாதுகாப்பதன் தேவைப்பாடினை மறைமுகமாக செயல் இழக்கச் செய்வதாகவே உள்ளது. அதாவது குடும்ப வன்முறையால் துன்புற்ற ஒருவர் அமையநிலையாக வன்ம உறவறுக்கப்படுபவராயின், அதாவது அவரது திருமண இல்லத்தில் இருந்து வெளியேற்றப்படும் சந்தர்ப்பத்தில் அவர்களது விருப்பத் தெரிவாக விவாகரத்தையே நாடுகிறார்களே தவிர மீள் இணைவதற்கான சாத்தியக்கூறுகள் மிக அரிதாகவே உள்ளன.

எது எவ்வாறு இருப்பினும், குடும்ப வன்முறைச் செயல் தடுப்புச் சட்டம் பாதிக்கப்பட்ட அல்லது துன்புற்ற நபர் ஒருவருக்கு உடனடியாக நிவாரணத்தை செயல்படுத்தக்கூடிய தத்துவத்தை வழங்கியுள்ளது. இச்சட்டம் பால்நிலைசாராது துன்புற்ற ஆள் ஒருவர் ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ இருக்கலாம். அவர் குடும்பவன் முறையால் பாதிக்கப்பட்டிருப்பின் நீதிவான் நீதிமன்றில் விண்ணப்பிப்பதன் மூலம் வன்முறையாளருக்கெதிராக இடைக்கால மற்றும் நிரந்தர பாதுகாப்புக் கட்டளையை பெற முடியும். எனினும் இலங்கையைப் பொறுத்தவரையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தைக் கருத்திற் கொள்ளும் போது வன்செயல்களால் பாதிக்கப்படுவது பெண்களாகத் தான் இருப்பினும்



பெண்கள் தமது தவறுதான் கணவனின் வன்முறைக்கு காரணம் என்று நம்புவதும் வன்முறைக்கான குற்றப்பொறுப்பை கணவன் மீது சுமத்த இயலாமையாலும் தனது வாழ்க்கையிலும் குழந்தைகளின் வாழ்க்கையிலும் ஏதேனும் விபரீதம் ஏற்பட்டு விடும் என்ற பயத்தினாலும் இதைவிட கணவன் தான் எல்லாம் அறிந்தவர் எங்கும் நிறைந்தவர் (Omniscient & Omnipresent) என்ற விபரீத கொள்கையில் இருப்பதாலும் அவர்கள் தொடர்ச்சியாக பயங்கர விளைவினைத் தோற்றுவிக்கக் கூடிய உறவுமுறையில் இருக்கிறார்கள். மேலைத்தேய நாடுகளில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களின் உளவியல் ரீதியான மாற்றங்களை அறிகுறியாக (battered wife syndrome) இனங்கண்டு அவர்களிடம் விழிப்புணர்வை உருவாக்க செயல்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஆனால் இத்தகைய விழிப்புணர்வு செயற்பாடுகள் இலங்கையில் இல்லை என்பதே இத்தகைய குடும்ப வன்முறையால் பாதிக்கப்படுவோரின் தொகை அதிகரிக்கக் காரணமாகும்.

எது எவ்வாறு இருப்பினும், குடும்ப வன்முறைச் செயல் தடுப்புச் சட்டம் பாதிக்கப்பட்ட அல்லது துன்புற்ற நபர் ஒருவருக்கு உடனடியாக நிவாரணத்தை செயல்படுத்தக்கூடிய தத்துவத்தை வழங்கியுள்ளது. இச்சட்டம் பால்நிலைசாராது துன்புற்ற ஆள் ஒருவர் ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ இருக்கலாம். அவர் குடும்பவன்முறையால் பாதிக்கப்பட்டிருப்பின் நீதிவான் நீதிமன்றில் விண்ணப்பிப்பதன் மூலம் வன்முறையாளருக்கெதிராக இடைக்கால மற்றும் நிரந்தர பாதுகாப்புக் கட்டளையை பெறமுடியும்.

மேலும், குடும்ப வன்முறை ஒரு பாரியகுற்றம் ஆகக் காணப்படுவதால், இணக்கம் சாத்தியம் எனத் தோன்றும் இடத்து நீதிமன்றம் அதனையே மையப்படுத்தி நகர்த்த வேண்டிய தேவைப்பாடு இருக்கிறது. எனினும் நீதவான் நீதிமன்றத்தின் சூழலும் அதன் நடபடிச் செயன்முறைகளும் குற்றவியல் விசாரணைக்கு ஏற்றவையாக அமைக்கப்பட்டுள்ளதே தவிர இணக்கப்பாட்டிற்கு சாத்தியமான வகையில் இட்டுச்செல்லும் என்பதில் பெரும் ஐயப்பாடே நிலவுகிறது. குடும்பவன்முறையை அண்மிக்க வேண்டிய தேவைப்பாடு தொடர்பாக தெளிவான மட்டுப்பாடுகள் தெளிவு படுத்தப்படவில்லை. குடும்ப வன்முறை மன்றுக்கு திருப்தியளிக்கக்கூடிய வகை நிரூபிக்கப்படல் வேண்டும் என்று கூறப்பட்டிருப்பினும் எது ஏனைய குற்றங்கள் போல் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்க வேண்டுமா அல்லது நிகழ்தகவுச் சமநிலையின் பால் நிரூபிக்க வேண்டுமா என்பது பற்றி தெளிவான வரையறைகள் எடுத்தியம்பப்படவில்லை. ஒரு குடும்ப வன்முறையைச் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கும் பொருட்டு வன்முறைச் செயற்பாட்டினை மன்றின் முன் கொணரும் போது குடும்பம்

> மேலும் குடும்ப வன்முறையானது தீங்கியல் சட்டத்தின் கீழ் நட்ட ஈட்டைப் பெறக்கூடிய ஒரு வன் செயல் ஆகும். ஏனைய நாடுகளில் நட்ட ஈட்டினை குடியியல் நடபடி முறையினூடாகப் பெறக்கூடிய ஏற்பாடுகள் இருப்பினும் இலங்கை யில் அவ்வாறான சட்ட ஏற்பாடுகள் இன்னும் நடைமுறைப் படுத்தப் படவில்லை.

மீள் இணைக்க முடியாது சிதறுகிறது அல்லது மீள் இணைக்கப்படமுடியும் என்ற நிலைப்பாட்டை தளர்வுநிலைக்கு உட்படுத்துகிறது.

மேலும் குடும்பவன்முறையானது தீங்கியல் சட்டத்தின் கீழ் நட்டஈட்டைப் பெறக்கூடிய ஒரு வன்செயல் ஆகும். ஏனைய நாடுகளில் நட்ட ஈட்டினை குடியியல் நடபடி முறையினூடாகப் பெறக்கூடிய ஏற்பாடுகள் இருப்பினும் இலங்கையில் அவ்வாறான சட்ட ஏற்பாடுகள் இன்னும் நடைமுறைப் படுத்தப் படவில்லை.

சட்டம் என்பது மனிதனது தேவைகளையும் தொழிற்பாடுகளையும் ஒழுங்கமைக்கப்பட்ட செயல்பாடாக பிரதிபலிக்கச் செய்யும் சமூகப் பணியாகும். இது அடிப்படையான கோட்பாடுகளையும் சமுதாயத்தின் அடிப்படைப் பெறுதிகளையும் பேணக்கூடிய வகையில் சட்டங்களை உள்ளடக்கி இருக்க வேண்டும். ஏனைய சட்டங்கள் போலல்லாது சமூகத்தேவைகளையும் தொழிற்பாடுகளையும் வழிநடத்த தேவைப்படும் சட்டத்தின் வினைத்திறன் குடும்பவன்செயல் தடுப்புச்சட்டத்தின் பால் மிகவும் நலிவுற்று இருப்பதே கண்கூடு.

எது எவ்வாறு இருப்பினும் சமூகத்தில் பின்னிப் பிணைந்திருக்கும் குடும்ப வன்செயல்கள் ஏனைய குற்றங்கள் போலல்லாது சட்டத்தினால் முற்றாக தடுக்கமுடியாது என்பது தெட்டத்தெளிவான விடயமே. சட்டவியலாளர் Ehrlickஇன் கருத்துப்படி சட்டத்தின் வளர்ச்சியின் பரிணாமம் சட்டவாக்கம் சட்டவியல் விஞ்ஞானம் முன் தீர்க்கப்பட்ட முடிவுகள் இவற்றையும் தாண்டி சமூகத்தின் தனிப்பட்ட தொழிற்பாட்டாலேயே நிர்ணயிக்கப்படுகிறது. அதாவது சமூகத்தால் தமக்கென உருவாக்கப்படும் நியதிகளும் பெறுதிகளும் (Self – generating social rules) சமூகத்திலும் அதன் தனி அலகான குடும்பத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஒவ்வொரு மனிதனும் குடும்பம் என்ற தனி அலகினால்



அவன் சமூகத்தில் ஒன்றிணைக்கப்படுகிறான். (அவர்கள் ஆண்களாகவோ பெண்களாகவோ இருக்கலாம்.) குடும்பத்தினைப் பேணவேண்டிய தனிமனித கடப்பாட்டிற்கு உட்பட்டவர்களாக்கப்படுகிறார்கள்.




References :

1. An Introduction to the Prevention of Domestic Violence act of Sri Lanka.
   - Roase Wijeyasekera, Department of Private and Conparative Law, Faculty of Law, University of Colombo.
2. இலங்கையின் 2005ம் அண்டின் 34ம் இலக்க குடும்பவன்முறைச் செயற் தடுப்புச் சட்டத்தின் பொருத்தப்பாடு.
   - கோசலை மனோகரன், சட்டத்துறை, யாழ்ப்பாணம்.
3. Marriage Registration Ordinance.


## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

1. உங்கள் உடலிற்கோ உள்ளத்திற்கோ பலவீனத்தைத் தரும் எதனையும் நெருங்காதீர்.
2. பலவீனத்திற்கு பரிகாரம் ஓயாமல் பலவீனத்தைப்பற்றி சிந்திப்பதல்ல மாறாக வலிமையைப்பற்றி சிந்திப்பதாகும்.
3. உன்னிடம் புதைந்துள்ள ஆற்றல்களை உன்னால் வெளிக் கொண்டுவர முடியுமானால் நீயும் என்னைப்போல் ஆகலாம்.
4. தன்னம்பிக்கையும் குறிக்கோளும் இளைஞர்களின் இரு கண்களாகும். தன்னிடம் தன்னம்பிக்கையில்லாதவனே நாத்திகன்.
5. குறிக்கோள் உள்ளவன் ஆயிரம் தவறுசெய்தால் அது இல்லாதவன் ஐம்பதாயிரம் தவறுசெய்வான்.
6. கொடுப்பவன் தான் பாக்கியசாலியே தவிர பெறுபவன் அல்ல.
7. என்னால் எந்தக்குறைபாட்டையும் தாங்கிக்கொள்ள முடியும் ஆனால் கோளைத்தனத்தை மட்டும் முடியாது.
8. மனிதனுள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரண தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வி.

# தவறா தப்பா?

இத் தொடரை எழுதுவது ஒரு தனி நபரையோ அல்லது ஒரு சமூகத்தையோ புண் படுத்தும் நோக்குடையது அல்ல. தெரிந்தோ தெரியா மலோ செய்து வருகின்ற பிழைகளை இனியாவது திருத்தி வாழப் பழகிக்கொள்ள வேண்டும் என்ற நல் நோக்கத்திற்காகச் சமூகத்தின் நன்மை கருதி இதை வரைகின்றேன். இதற்கு முரணான கருத்துக்கள் கூற விரும்பின் ஆதாரபூர்வமாகத் தெரிவிப்பின் அதை முழு மனதோடு ஏற்றுக் கொள்வோம் சமூக நன்மை கருதி.

யாழ். குடாநாட்டிலே வெட்டி வீசிய தடி கூட முளைத்துத் துளிர்விட்ட ஒரு மரம் முள்முருங்கை. இது இன்று அருகி அற்றுப் போய் விட்ட நிலைக்கு வந்துவிட்டது. இதற்கு யார் காரணம்? கடந்த சில ஆண்டுகளாக முள் முருங்கையில் முடிச்சுக் குளவியின் தாக்கம் இருப்பதாகவும் அதனால் தான் அது அற்றுப்போய் விட்டதாகவும் தாவரவியல் நிபுணர்களால் கருத்துக் கூறப்பட்டு வருகின்றது. இது தெரிந்த விடயம். தெரிந்தும் தெரியாத விடயமாக ஒரு நிகழ்வு நடந்து முடிந்தேறி இப்பவும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.


இந்துக்களின் திருமணத்தில் முக்கிய இடம் வகிப்பது இந்த முள்முருங்கை மரம். தேவர்களிற்கு அதிபதி இந்திரன். அவரைப் பிரதிநிதிப்படுத்தும் வகையில் அதற்கு வஸ்திரம் கொடுத்து அரசாணி மாலை என நான்கு திக்கும் மாலை கட்டி நான்கு திசைக்கும் பூரண கும்பம் குத்துவிளக்கு ஏற்றி தேவசபை ஒன்றினை திருமண மண்ட பத்தில் உருவாக்குவது யாவரும் அறிந்த விடயம்.

இந்துக்களின் திருமணத்தில் முக்கிய இடம் வகிப்பது இந்த முள்முருங்கை மரம், தேவர்களிற்கு அதிபதி இந்திரன். அவரைப் பிரதிநிதிப்படுத்தும் வகையில் அதற்கு வஸ்திரம் கொடுத்து அரசாணி மாலை என நான்கு திக்கும் மாலை கட்டி நான்கு திசைக்கும் பூரண கும்பம் குத்துவிளக்கு ஏற்றி தேவசபை ஒன்றினை திருமண மண்டபத்தில் உருவாக்குவது யாவரும் அறிந்த விடயம்.

மணமகன் மணமகளிற்கு மங்கல நாண் பூட்டும் முன்பு அக் கிரியைகளைச் செய்யும் குருக்கள் அக்கினி சாட்சியாகத் தேவர்கள் சாட்சியாக என்று மேற்படி முருங்கை மரத்தினைக் காட்டி இந்திரனை சாட்சியாக வைத்தே திருமணம் நிகழ்ந்தேறும். வீடுகளில் மட்டும் தான் திருமணங்கள் நடந்த காலங்கள் உண்டு. இதை இன்றைய இளைய

சமூகம் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படி வீடுகளில் திருமணம் நடைபெற்ற காலங்களில் அரசாணி மண்டபம் எனக் கூறப்படுகின்ற முள்முருங்கைமரம், பூரண கும்பம், குத்துவிளக்கு போன்றவை திருமணம் நடந்து 3ஆம் நாள் அன்று தான் அவ் அரசாணி மண்டபத்தினின்றும் மிகப் பக்குவமாக எடுத்து முள்முருங்கை மரத்தினை மிக நல்ல சூழலில் நட்டு மேற்படி கும்ப நீரினை அதற்கு வார்த்து அது வளர்கின்ற சிறப்பி னைப் பார்த்து மணமக்களுடைய வருங்கால வாழ்வின் சிறப்பினைக் கண்டு மகிழ்ந்த காலம் ஒன்று இருந்தது.

இப்பொழுது மண்டபங்களிலும் சரி வீட்டிலும் சரி திருமண வைபவங்களின் போது வீடியோ கலாசாரத்திற்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டதால் திருமண வைபத்தின்போது மணமகன் மணவறையில் அமர்ந்த உடனேயே வீடியோ படப்பிடிப்பாளர்களால் அரசாணி மாலைகள் மேலே தூக்கி வீசப்படுகின்றன. அதன் பின் மங்கல நாண் பூட்டிய உடனேயே தேவர்களிற்கு அதிபதியாக இருந்த முள்முருங்கை மரம் கழுத்தில் பிடித்து எறியுமாப் போல திருமண மண்டபத்தில் மூலை ஒன்றில் போய் விழுகின்றது. இது ஒரு சரியான நிகழ்வா? இதை யார் கட்டுப்படுத்த வேண்டும்?



வீட்டின் அலுமாரியில் குடம் இருக்கின்றது. கிணற்றில் நீர் இருக்கின்றது. மாமரத்தில் மாவிலை இருக்கின்றது. தேங்காய் வளவில் இருக்கின்றது. இவை தனித்தனியே இருக்கும் போது அந்தந்த தேவைகளிற்கு மட்டுமே பாவனைக்குரிய தாகின்றன. இவற்றை எல்லாம் சேர்த்து ஓர் கும்பஸ்தாபனம் செய்தால் பின் அதைப் பிரிப்பதற்கு ஒரு முறை இருக்கின்றது. அக் கும்பத்தை அன்றோ தவறின் மூன்றாம் நாளோ பிரித்து அதனுள் உள்ள நீரினை ஒருவரினதும் கால்படாத இடமாகப் பார்த்துச் துளசிச்செடி போன்றவற்றிற்கு ஊற்றவேண்டும். வீட்டில் வைக்கின்ற சாதாரண கும்பத்திற்கே இந்நடைமுறை இருக்கும்போது முகூர்த்தம் பார்த்து நடாத்தும் திருமணத்தில் தேவப் பிரதிநிதியாக விளங்கிய முருங்கை மரத்திற்கு ஏற்பட்ட கதியைத் தற்போது எண்ணிப்பாருங்கள்.

படப்பிடிப்பினைத் தொழிலாகக் கொள்பவர்களிற்கு விதிமுறைகள் தெரிந்திருக்க நியாயமில்லை. இருப்பினும் அவர்கள் சரியான

> படப்பிடிப்பினைத் தொழிலாகக் கொள்பவர்களிற்கு விதிமுறைகள் தெரிந்திருக்க நியாயமில்லை. இருப்பினும் அவர்கள் சரியான விதிமுறைகளைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளாமல் புண்ணிய நிகழ்வுகளை நடைமுறைப்படுத்த முனைவது மிகவும் வருத்தத்திற்குரிய விடயமாகும்.

விதிமுறைகளைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளாமல் புண்ணிய நிகழ்வுகளை நடைமுறைப்படுத்த முனைவது மிகவும் வருத்தத்திற்குரிய விடயமாகும்.

இச் சரி பிழைகளைத் தெளிவு படுத்த வேண்டிய பொறுப்பு கிரியை களைச் செய்யும் குருவினுடையதே. அக்குருவானவர் வாய் மூடி மௌனமாக இருந்தால் தெரியாத பிழைகள் எல்லாம் சரியான நெறிமுறையாக மாறிவிடும் அபாயம் உண்டு. இதற்கு இந்த முள்முருங்கை மரமே உதாரணம். தட்டித் தவறி உயிருடனும் நோயுடனும் காணப்படும் இம்முருங்கை மரத்திற்கு குருஸ்தானத்தில் உள்ளவர்கள் அனைவரும் பிராயச்சித்தம் ஒன்று மேற்கொண்டு தெய்வேந்திரனிடமும் மன்னிப்புக்கோரி இப்பூவுலகில் மீண்டும் எமது முள்முருங்கை மரத்தினை நிலைபெறச் செய்வார்களா? இனியாகிலும் வேதாகமங்களை முறைப்படி கற்றுத்தேர்ந்து கிரியைகளை நடாத்தும் குருவினரின் சொல் கேட்டு ஏனையவர்களும் நடந்து எமது நெறிமுறைகளைச் சரிவரப் பேணவேண்டி நிற்கின்றேன்.

"தெரியாமல் தொட்டாலும் தீ சுட்டுவிடும், தவறுதலாக நீரினுள் விழுந்தாலும் நீர் உடம்பை நனைத்துவிடும்" தவறாகில் திருத்திக் கொள்ளுங்கள், தப்பாகில் வருந்திக்கொள்வீர்கள்.

கூழாவடியான்.

# அறிஞர்களின் பொன் மொழிகள்

- மனத்தைச் செல்வழி விடாமல், தீமையிலிருந்து அகற்றி நன்மையானவற்றில் செலவிடுவதே அறிவு - திருவள்ளுவர் -
- அன்பு உடையவர் தம் உடம்பையும் பிறருக்கு உரிமையாக்கி வாழ்வார். - திருவள்ளுவர் -
- நமது உள்ளம் நங்கூரம் பாய்ச்சிய கப்பல் போல அமைதியுடனிருக்க வேண்டும். - புத்தர் -
- வையகத்தில் இல்லற இயல்புடன் சிறந்து வாழ்பவன் கடவுள் தன்மையில் வைத்து மதிக்கப்படுவான். - திருவள்ளுவர் -
- முள் நிறைந்த செடியிலேதான் முழு அழகு வாய்ந்த ரோஜா மலர் பூக்கிறது. அது போலவே சொல்லெணாத் துன்பங்கட்கிடையிலேதான் உண்மை பூத்து மலர்கிறது. - காந்தியடிகள் -







திருமதி. உதயலதா நவதீசன்
யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை

"இன்று இந்தக் கல்லூரியானது தனது 80 ஆவது அகவையைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது என்றால், அதற்கு அதன் அபரிமிதமான வளச்சிக்கும் பெருமைக்கும் உறுதுணையாய் அமைந்தவை பற்பல. யாழ் மண்ணில் தலை நிமிர்ந்து நிற்கின்ற கல்லூரிகளில் ஒன்றாக நம் கல்லூரியும் அமைந்திருப்பதற்கு, அதன் சமூக விழுமியமும், உழைப்புமே காரணம் என்று கூறலாம். அன்று முதல் இன்று வரை இக்கல்லூரியின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும் வித்திட்டு நீரூற்றிப் பெரு விருட்சமாய் மிளிர வைத்தவர்களை நாம் மறந்திலோம். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்லூரிச் சமூகம் என்று எல்லாமே இந்தக் கல்லூரித் தீபம் சுடர்விட்டு ஒளிர்வதற்குக் காரணமாயின. இத்தகைய கல்லூரியிலே நான் படித்தவள், பழைய மாணவி என்று நினைக்கின்ற போது நான் பெருமைப்பட்டுக் கொள்கிறேன். அந்தப் பெருமையுடன் என்னைப் பிரதம விருந்தினராக அழைத்துப் பேச வைத்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்."

"தம் நற்கருத்துக்களை நமக்கு வழங்கி, இக் கல்லூரியின் பழைய மாணவியாய்ப் பெருமைப்பட்டு அமரும் நமது பிரதம விருந்தினர் பேராசிரியர் அருந்ததி கமலக்கண்ணன் அவர்களுக்கு எம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தொடர்ந்து, நமது சிறப்பு விருந்தினராக ..........." நிகழ்வு தொடர்ந்தது. கதிரையினின்றும் எழுந்து சென்ற கமலக்கண்ணன், அந்தக் காட்சியை மீண்டும் பார்ப்பதற்காக, இறுவட்டின் ஆரம்பத்திற்குக் கொண்டு வந்து, தொலைக்காட்சியின் முன் அமர்ந்தார். "நமது கல்லூரியின் 80ஆவது ஆண்டு நிறைவு விழாவிற்குப் பிரதம விருந்தினராக வந்திருக்கின்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அருந்ததி கமலக்கண்ணன் அவர்கள் இப்பொழுது உரையாற்றுவார்கள். "அனைவருக்கும் என் இனிய



வணக்கம். இன்று இந்தக் கல்லூரியானது தன்து 80ஆவது அகவையைக் கொண்டிருக்கிறது என்றால், அதற்கு......." இந்தக் காட்சியைக் கமலக்கண்ணன் எத்தனை தடவைகள் திரும்பத் திரும்பப் பார்த்தார் என்பது அவருக்கே சரியாக ஞாபகம் இல்லை.

கமலக்கண்ணன் நாற்பதுகளின் இறுதியில் இருந்தார். மனதின் வேதனை வடுக்கள், உடலிலும் தன் அழுத்தங்களைப் பிரயோகித்தால், உண்மை வயதை விட உருவ வயது சற்று அதிகமாகவே தெரிந்தது. ஆனாலும், பெயருக்கேற்றாற் போல கண்களின் கவர்ச்சிக்கு மட்டும் குறைவில்லை. கதிரையினின்றும் எழுந்தவர் தன் உள்ளத்து உஷ்ணம் தணியாது என்று தெரிந்து வெளிப்புற வெக்கையையாவது தணித்துக் கொள்ளலாம் என்று யன்னல் திரைகளை ஒரு பக்கமாய் ஒதுக்கி விட்டார். சில்லென்ற காற்றுக்காய் ஏங்கியவருக்கு ஏமாற்றமே கிடைத்தது. மின் விசிறியை இயங்க விட்டார். அந்தக் காற்று இதத்தைத் தரவில்லை ஆனாலும், தற்காலிகத் தீர்வொன்றைத் தந்தது. மின் விசிறி சுழன்றது. அவரது சிந்தனைகளையும் சுழற்றிக் கொண்டே.............

அப்போது கமலக் கண்ணன் யாழ்ப்பாணத்தின் பிரபல பாடசாலை ஒன்றில், க.பொ.த சாதாரண தரத்தில் கற்றுக் கொண்டிருந்தான். அதே வகுப்பில் தான் அருந்ததியும் படித்தாள். இருவரும் நண்பர்களாயிருந்தனர். அந்தச் சிறுவயதிலேயே பல விடயங்கள் பற்றி அவர்கள் விவாதித்துக் கொள்வார்கள். அந்தப் பேச்சு, அரசியல், பொருளாதாரம், இலக்கியம், பெண்ணியம் என்றவாறு பல்துறையாய் அமைந்திருக்கும். சாதாரண தரத்தில் நல்ல பெறுபேறு பெற்று இருவருமே உயர்தர கலைப்பிரிவில் கற்றார்கள். இவர்களுடைய நட்புறவு சிறிது சிறிதாக ஊற்றெடுத்துக் காதலாய்க் கனிந்தது. இருவருமே தமிழ் இலக்கியப் பாடல்களைச் சுவைத்துப் பாடினார்கள். அதிலும் சங்க காலக் காதல் பாடல்கள் அவர்களின் காதல் பயிருக்கு நீரூற்றி வளர்த்தன.

"யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளீர்
நானும் நீயும் எவ்வழி அறிகும்
செம்புலப் பெயர் நீர் போல்
அன்புடை நெஞ்சம் தாம் கலந்ததுவே"

என்ற குறுந்தொகைப் பாடலைப் படித்தபோது தம் நெஞ்சமும் செம்புலப் பெயர் நீர் போல் கலந்ததாய் உணர்ந்தார்கள்.

க.பொ.த உ/த பரீட்சை நெருங்கியது. நன்றாகப் படித்தார்கள். பரீட்சை எழுதினார்கள். பெறுபேறுகள் வந்தன. அருந்ததிக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. கண்ணனுக்குப் புள்ளிகள் போதாது. அன்று கமலக்கண்ணன் நெஞ்சினில் விதைக்கப்பட்டதே முதலாவது நெருஞ்சி முள். அந்த முள்ளை அப்போதே ஏன் பிடுங்கி வேரோடு அகற்றாது விட்டோம் என்று இப்போது சிந்திக்கிறார் கமலக்கண்ணன்.



அன்றே அதை அகற்றியிருந்தால், இன்று அது படர்ந்து பரவி நெருஞ்சி முட்களூடாக அவரது இதயத்தில் வலியை ஏற்படுத்தி இருக்காதே. அவருடைய மனைவி, குழந்தை, குடும்பம் என்று நல்லதொரு வாழ்க்கையை வாழ்ந்திருப்பாரே. பொது நிகழ்வுகளிலே, கௌரவ அதிதியாய் அருந்ததியை அழைக்கும் போதெல்லாம் அருந்ததி கமலக்கண்ணன் என்று சபையில் அவள் பெயர் அழைக்கப்படும் போதெல்லாம் கமலக்கண்ணனின் இதயம் ஆயிரம் உணர்ச்சிகளின் ஒட்டு மொத்தக் கலவையாகிவிடும்.

அருந்ததி கமலக்கண்ணன் இப்பொழுது பேராசிரியர். ஆனால் கமலக்கண்ணன்? கமலக்கண்ணன் பெரு மூச்சொன்றை வெளியேற்றிக் கொண்டார். மீண்டும் இமைக் கதவைச் சாத்திக் கனவுலகத்துள் தம்மைத் தாழிட்டுக் கொண்டார்.

அருந்ததி கமலக்கண்ணனின் காதல், கல்லூரியில் அனைவருக்குமே தெரிந்து விட்டது. இருவரது பெற்றோருக்கும் தெரிந்த போது வழமை போலவே அவர்களும் எதிர்த்தனர். அதிலும் அவர்களிடையே சாதிப் பிரச்சினையும் கொடி தூக்கியிருந்தது. கண்ணனின் குடும்பம் உயர்வர்க்கம். அந்த வர்க்க வேறுபாட்டால் அவர்கள் எதிர்த்தனர். ஆனபோதும் காதலர்கள் உறுதியாக

இருந்தனர். அருந்ததிக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைத்து 2 ஆம் வருடத்தில் கற்றுக் கொண்டிருந்த போது, அவளின் நல்ல பண்புகளையும், கல்வியறிவையும் பாாத்துக் கண்ணனின் பெற்றோர் திருமணத்துக்குச் சம்மதம் தெரிவித்தனர். சமூகத்தில் இன்று பெரிதாய் பேசப்படும் சாதியம் என்பதை விட்டுக் கொடுத்து கண்ணனின் பெற்றோர் தம் உயர் பண்பை நிரூபித்து விட்டனர். 2 ஆம் வருடம் படித்துக் கொண்டிருந்த போதே அவர்களின் திருமணம் நடைபெற்றது. படிப்பு முடியட்டும் என்பது அருந்ததியின் விருப்பமாக இருந்த போதும் கண்ணனின் விருப்பம் தான் நிறைவேறியது. திருமணம் முடிந்து சில நாட்கள் கழிந்த பின் அருந்ததி கம்பஸ் செல்ல ஆயத்தமானாள். "இனியும் படிக்க வேணுமா? கம்பஸ் போகப் போகிறாயா?" இரண்டாவது நெருஞ்சி முள்ளின் ஓலம் கண்ணனின் வாய் வழியாக வந்து அருந்ததியின் செவிப்பறையை அறைந்து மோதியது. அருந்ததி திடுக்குற்றாள். "என்ன கண்ணன் சொல்லுறீங்க......" "ஆமாம் அருந்ததி நீ கம்பஸ் போக வேண்டாம் என்று நான் நினைக்கிறன்" "நீங்களா கண்ணன் இப்படிச் சொல்லுறது?" அருந்ததி உடைந்து போனாள். அந் நேரம் அவர்களின் பெற்றோர் வந்து எப்படியோ சமாதானமாகி, அருந்ததி தொடர்ந்தும் கம்பஸ் சென்றாள். நெருஞ்சி சிறிது சிறிதாகத் தன் இடத்தை அகலித்துக் கொண்டது. பல் கலைக்கழகத்திலே அருந்ததி தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்றாள். ஒரு புலமைப் பரிசில் திட்டத்தில் அவளுக்கு நோர்வேயின் ஒஸ்லோப் பல்கலைக் கழகத்தில் 2 வருட இலக்கியக் கற்கைநெறி ஒன்றுக்கு அனுமதி கிடைத்தது. நெருஞ்சி பரந்தது. கணவனிடம் அனுமதி கேட்டாள். "இது நல்லதொரு சான்ஸ் முழு ஸ்கொலஷிப் கம்பசில் எனக்கு மட்டும் தான் கிடைத்தது. 2 வருடம் தானே போய்ப் படிச்சிட்டு வரட்டா?" "மூடு வாயை எங்கயும் போக வேண்டாம். இஞ்ச கம்பசில் படிச்சது காணும். ஒஸ்லோவிலயும் படிக்க வேணுமோ? ஒரு மண்ணாங் கட்டியும் வேண்டாம். படிச்சது போதும்



வீட்டில நில். புருசனுக்கு நல்ல மனைவியா அடக்க ஒடுக்கமாய் இரு. இவ்வளவு நாளா உன்னைப் படிக்க விட்டதே பிழையாய்ப் போச்சு. நான் வீட்டில சும்மா இருக்க நீ ஊரெல்லாம் சுத்திட்டு இப்ப நாடெல்லாம் சுத்திக் கொண்டு வரப்போறியோ. போ போ போய் வேறு வேலையைப் பார்."

அருந்ததி ஸ்தம்பித்துப் போய்விட்டாள். "பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்ற பாரதியைத் தலைமேல் வைத்துக் கொண் டாடிய கண்ணனா இப்படி? நேற்று பெண்ணியம் பேசியவன் இன்று...? "ஓ" எல்லா ஆண்களுமே இப்படியா? சுயநலமா? தாழ்வுச் சிக்கலா? என்னவென்று சொல்வது? நாளுக்கு நாள் பிரச்சினை. கண்ணனைத் தவிர மற்ற அனைவருக்குமே அவள் ஒஸ்லோ போவதில் விருப்பம். அவர்களின் முன் கண்ணனால் எதுவும் செய்யமுடியவில்லை. வேண்டா வெறுப்பாய்ச் சம்மதித்தான்.

கணவனின் சம்மதம் கிடைத்தாலும் அது முழு மனதாய்க் கிடைத்த சம்மதம் இல்லை என்பது அருந்ததிக்குத் தெரியும். ஆனாலும் தமிழில், தமிழ் கற்பதில், தமிழ்த்துறையில் உயர் நிலையை அடைய வேண்டும் எனும் தீராத ஆர்வத்தில் அருந்ததி நோர்வே சென்றாள்.

நெருஞ்சி வியாபித்தது. இரண்டு வருடங்களாக இதயம் மட்டுமல்ல அவன் பாதங்களும் நெருஞ்சி முட்களின் மீதே நட மாடிக் கொண்டிருந்தன. அவனைச் சார்ந்த சிலரும் அவன் மனதைக் குழப்புமாறு தூபம் போட்டார்கள். அவனுள் பல குமுறல்கள், போராட்டங்கள். கண்ணன் ஒரு முடிவுக்கு வந்தான்.

இரண்டு வருடங்கள் கழிந்தன. அருந்ததி நாடு திரும்பினாள். ஆசையாய்க் கனவுகள் சுமந்து தன் காதல் கணவனை நாடி வந்தாள். ஆனால் அவன்..... "உன்னைப் பார்க்கவோ பேசவோ உன்னு டன் வாழவோ எனக்குப் பிடிக்க வில்லை" என்று பிரிவையே அவளுக்குப் பரிசாய் அளித்தான். அருந்ததி கெஞ்சினாள். "இரண்டு வருடம் முழுசாய் நீ வெளி நாட்டில் இருந்திட்டு வந்திருக் கிறாய். உன்னை அப்படியே கை நீட்டி வரவேற்க நான் ஒன்றும் மடையனில்லை. நீ படிச்ச மேதாவி. நான் உனக்குச் சரிப் பட்டு வரமாட்டேன். எனக்கும் உனக்கும் இனி எந்த விதத்திலும் சரிப்பட்டு வராது." அருந்ததி எப்படியெல்லாமோ சொல்லிக் கெஞ்சிப் பார்த்தாள். எதுவும் அவனிடம் எடுபடவில்லை.

நெருஞ்சி வார்த்தை களால் அவளைக் குத்தியது.

அன்றிலிருந்து இன்றுவரை இருவருமே தனித்தனியாக! இரு துருவங்களாக! இதோ கண்ணன் தொலைக்காட்சியின் முன் இந்தக் கதிரையில். அருந்ததி பேராசிரியையாக தமிழ்ப் பேராசிரியையாக....! சிந்தனைச் சிறகைக் கட்டிப் போட கண்ணன் எழுந்தான்.

மீண்டும் அந்த இறு வட்டைப் போட்டார். "இப்போது நமது விழாவின் பிரதம விருந்தினரும் இக் கல்லூரியின் பழைய மாணவியும், யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ் பேராசிரியருமாகிய அருந்ததி கமலக்கண்ணன் அவர்கள் நம் முன் உரையாற்று வார்கள்."

கண்ணன் தன் மனைவியை அன்பாய், ஆசையாய் ஆவலாய்ப் பார்த்தார். பார்த்து என்ன பயன்? இத்தனை வருடங்கள் வீணாக்கியது அவர் தானே. அவள் அவருக்கு இப்போது யன்னல் நிலவாய்ப் போய் விட்டாள். திருமதி கமலக் கண்ணன் என்ற பெயரில் மட்டுமே கமலக்கண்ணன் வாழ்ந்து கொண்டிருக்கிறார். காரணம் அவர் தான். அவரின் ஆணாதிக்க நிலைப்பாடுதான். என்ன தான் சமூக முன்னேற்றம், புதுமைகள், மாறுதல்கள், நாகரிகங்கள் வந்த போதும் இந்த எண்ணக்கரு மட்டும் மாற வில்லை. தன்னை விட தன் மனைவி உயர் கல்வி, உயர் பதவி என்கின்ற போது அவரால் அதை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. அதை ஏற்றுக் கொண்டு மகிழும் ஆண்களும் இருக்கத்தானே செய்கிறார்கள். "என் மனைவியின் பெருமை எனக்குப் பெருமை என்று ஏன் என்னால் நினைக்க முடியாது போய் விட்டது? என் அடிமனதில் ஊறிக்கிடக்கின்ற இந்த ஆணாதிக்கக் கொள்கை தான் காரணம். அதை மட்டும் நான் மாற்றியிருந்தால் அவள் யன்னல் நிலவாய் இருக்க வேண்டியதில்லையே.

அவருக்குக் கண்கள் பனித்தன. இப்ப யோசிச்சு என்ன பயன்? சாதி பொருளாதாரம் என்று எல்லாவற்றையும் விட்டுக் கொடுத்து ஏற்றுக் கொண்ட கண்ணனுக்கு இதை மட்டும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இரத்தத்தோடு ஒன்றிப் போய்விட்ட ஒன்றாகிவிட்டது.

நெருஞ்சி முட்களைப் பிடுங்கி எறிய முற்படுகின்றார் கமலக்கண்ணன். முடிந்தால் தானே? அவை இதயத்திலிருந்து வரமாட்டேன் என்று அடம் பிடித்து அவர் கைகளையும் பதம் பார்க்கிறது. ஆனாலும், முயற்சி யில் சற்றும் பின் வாங்காத விக்கிரமாதித்தனின் வேதாளமாய் முயன்று கொண்டேயிருக்கிறார் கமலக்கண்ணன்.

# தமிழறிவு வினா – விடைகள்

(தொடர்)

புலோலியூர் வேல்நந்தகுமார்
(ஆசிரியர்)



(01) தொல்காப்பியத்திற்கு முன் தோன்றியதாகக் கருதப்படும் இலக்கண நூல் எது?
அகத்தியம்

(02) அணியிலக்கணம் எழுதியவர் யார்?
விசாகப் பெருமாளையர்

(03) குட்டித் தொல்காப்பியம் என அழைக்கப்படும் நூல் எது?
தொன்னூல் விளக்கம் (வீரமாமுனிவர்)

(04) வடமொழி எழுத்துக்கள் மாறுபாடின்றி தமிழில் வழங்குவது ஏவ்வாறு அழைக்கப்படும்?
தற்சமம்

(05) பிற்கால இலக்கணச் சிந்தனைகள் என்ற நூலின் ஆசிரியர் யார்?
பண்டிதர் க. வீரகத்தி

(06) சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரால் இயற்றப்பட்ட இலக்கண நூல் எது?
இலக்கண சந்திரிகை அல்லது வினைப்பகுபத விளக்கம்

(07) தமிழ்மொழி இலக்கண இயல்புகள் என்ற நூலை எழுதியவர் யார்?
பேராசிரியர் அ.சண்முகதாஸ்

(08) செந்தமிழ் இலக்கண விளக்கம் என்ற இலக்கண நூலை எழுதியவர் யார்?
பண்டிதர் அ. நாகலிங்கம்

(09) தமிழ் இலக்கணத்தில் பதவியலை வகுத்தவர் யார்?.
நன்னூலார் (பவணந்தி முனிவர்)

(10) கொடுந்தமிழ் இலக்கணம் எழுதியவர் யார்?
வீரமாமுனிவர்

(11) பெரியாழ்வாரின் இயற்பெயர் என்ன?
விஸ்ணு சித்தர்

(12) சிலப்பதிகாரத்தின் காண்டங்கள் எவை?
வஞ்சிக்காண்டம், புகார்க்காண்டம், மதுரைக்காண்டம்

(13) ஒட்டக்கூத்தரால் பாடப்பட்டு கம்பரால் தனது ராமாயணத்தில் இணைக்கப்பட்ட காண்டம் எது?
**உத்தர காண்டம்**

(14) தமிழ்த்தாய் வாழ்த்தைப் பாடியவர் யார்?
**மனோன்மணீயம் பெ. சுந்தரம்பிள்ளை**

(15) தமிழில் ஆறாந்திணை என்று அழைக்கப்படுவது எது?
**தமிழர்கள் வாழும் புலம் பெயர் தேசங்கள்**

(16) வெண்பா என்ற யாப்பு வடிவத்தை தமிழில் சிறப்பாகக் கையாண்டவர் யார்? **புகழேந்திப்புலவர்**

(17) சடகோபர் அந்தாதியை இயற்றியவர் யார்?
**கம்பர்**

(18) இரட்டையர் என அழைக்கப்படும் புலவர்களின் இயற்பெயர்கள் எவை?
**இளம்சூரியர், முதுசூரியர்**

(19) தமிழ்த்தாத்தா என அழைக்கப்படுபவர் யார்?
**உ.வே.சாமிநாதையர்**

(20) தமிழில் தோன்றிய முதல் நாவலாகக் கருதப்படுவது எது?
**பிரதாபமுதலியார் சரிதம்**

(21) தமிழ்த்தூதர் என்று போற்றப்படும் ஈழத்துத் தமிழ் அறிஞர் யார்?
**தவத்திரு தனிநாயகம் அடிகள்**

(22) ஈழத்து வாழ்வும் வளமும் என்ற நூலை எழுதியவர் யார்?
**பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை**

(23) ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளையால் நடத்தப்பட்ட பத்திரிகையின் பெயர் என்ன?
**சுதேச நாட்டியம்**

(24) "ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்..." என்ற தொடர் இடம் பெறும் சங்க இலக்கியம் எது?
**பட்டினப்பாலை**

(25) ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரத்தை எழுதியவர் யார்?
**வித்துவசிரோன்மணி கணேசையர்**

(26) முகைதீன் புராணத்தை இயற்றியவர் யார்?
**யாழ்ப்பாணம் பதுறுதீன் புலவர்**

(27) யாழ்ப்பாணக் காவியத்தைப் பாடியவர் யார்?
**பண்டிதர் க. சச்சிதானந்தன்**

(28) புதிய வண்டுவிடுதூது என்ற கவிதையை இயற்றிய ஈழத்துக் கவிஞர் யார்?
**அல்வையூர்க் கவிஞர் மு.செல்லையா**

(29) முதல் தமிழ்ப் பேரகராதியை தொகுத்த ஈழத்து அறிஞர் யார்?
**புலோலியூர் சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை**

(30) ஈழத்தின் முதல் சாதீய நாவலை எழுதியவர் யார்?
**சொக்கன்**

(31) ஈழத்தில் தொடர்ச்சியாக வெளிவந்து ஐம்பது ஆண்டை நெருங்கிக் கொண்டிருக்கும் சஞ்சிகை எது?
**மல்லிகை**

(32) 'சிற்பி' என்ற புனைபெயருடைய ஈழத்துப் படைப்பாளரால் நடத்தப்பட்ட சஞ்சிகை எது?
**கலைச்செல்வி**

(33) உ.வே.சாவிற்கு பதிப்புத்துறையில் வழிகாட்டிய ஈழத்து தமிழ் அறிஞர் யார்?
**சி.வை.தாமோதரம்பிள்ளை**

(34) "தத்தை விடு தூது" என்ற இலக்கியத்தைப் படைத்த ஈழத்துப் புலவர் யார்?
**தி.த.சரவணமுத்துப்பிள்ளை**

(35) 'நூல்த்தோட்டம் என்ற பெயரில் ஈழத்து நூல்கள், எழுதியோர் பற்றிய ஆவணத் தொகுப்புக்களை வெளியிட்டு வருபவர் யார்?
**நூலகவியலாளர் என். செல்வராசா**

(36) ஈழத்தில் தனிமனிதனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட முதற் கோவைப்பிரபந்தம் எது?
**கரவைவேலன் கோவை**

(37) திப்புசுல்தான் காவியம், பண்டாரவன்னியன் காவியம் ஆகியவற்றை இயற்றிக் காவியப்புலவர் என்று போற்றப்படும் ஈழத்து முஸ்லிம் தமிழ் அறிஞர் யார்?
**காவியப்புலவர் ஜின்னா செரிபுதீன்**

(38) யாழ்ப்பாண அகராதியை அண்மையில் மீண்டும் மீள்பதிப்புச் செய்து வெளியிட்ட பதிப்பகம் எது?
**சேமமடு பதிப்பகம்**

(39) மலையகத்திலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் 'கொழுந்து' சஞ்சிகையின் ஆசிரியர் யார்?
**அந்தனி ஜீவா**

(40) ஈழத்துத் தமிழ் உரைமரபு என்ற நூலின் ஆசிரியர் யார்?
**பேராசிரியர் சி. சிவலிங்கராசா**

மனிதனுக்கும் இசைக்குமுள்ள தொடர்பு அநாதியானது. இந்த அகிலமே இசைவசப்பட்டிருக்கிறது என்பதை "ஓம்" என்ற பிரணவ மந்திர ஒலியானது இப்பிரபஞ்சம் எங்கும் ஒலித்துக் கொண்டிருப்பதை நவீன விஞ்ஞானம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இறைவனே இசை வடிவினனாக இருக்கிறான் என்பதைச் சமயம்சார் இலக்கியங்களிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது. இந்த இசை வடிவங்களுள் நாட்டுப்புறப் பாடல் இசை தனித்துவமானது. தமிழின் பண்டைய இலக்கிய வடிவமான நாட்டார் பாடல்கள் இன்று வழக்கொழிந்து வருகின்றமை அவற்றின் மீதான நாட்டக் குறைவை எடுத்துக்காட்டுகின்றது. இன்றைய நவீன காலத்தில் சினிமா என்ற மாயைத் திரையினால் மறைக்கப்படுகின்ற தமது வாழ்க்கை முறைகள் அதன் பிடியினின்று விடுபட முடியாமல் பழமை பேணும் பண்பாடுகளை மறந்து, வாழ்வியலின் உள்ளர்த்தங்களை அறியாமல் வாழ்ந்து வருகிறோம்.

# தமிழ்ச் சமூகத்தில் அருகிவரும் நாட்டுப்புறப் பாடல்கள் மீதான பற்றும் பெருகிவரும் திரையிசை மீதான நாட்டமும்

S. நதிபரன்

பண்டைய பொழுதுகளில் நம் முன்னோர் கடைப்பிடித்து ஒழுகி வந்த பெறுமதி வாய்ந்த பல வழக்காறுகள் அழிந்தொழிந்து வருகின்றன. அவ்வழக்காறுகளில் நாட்டுப்புறப் பாடல்கள் இசைக்கும் வழக்கம் நம்மிடையே அருகி வருவதனைக் காணக் கூடியதாக இருக்கிறது. குறிப்பாகச் சொல்லப்போனால் மனிதனின் பிறப்பு முதற் கொண்டு இறப்பு வரைக்குமான காலப்பகுதியில் தாலாட்டும் ஒப்பாரியும் காத்திரமான செல்வாக்குப் பெற்றிருந்தன. தாலாட்டுப் பாடல்களும், ஒப்பாரிப் பாடல்களும் பெண்களுக்கே உரித்தான இலக்கிய வடிவங்கள் தாம். தாய்மையின் பாசமும், பரிவும் கொப்பளிக்கும் இடங்கள். அன்னை தன் மடியில் குழந்தையை அரவணைத்து பாடும் தாலாட்டு: அடுத்தது இவ் வுலகைவிட்டே நிரந்தரமாகப் பிரியும் போது பாடப்படும் ஒப்பாரிப் பாடல்கள் இந்த இருவகைப்பாடல் முறைகளையும் இசைக்கும் வழக்கம் பெண்களையே சார்ந்திருக்கும். ஆனால் இன்றோ தாலாட்டுப் பாடலிசைக்கும் பெண்களின் தொகையும், ஒப்பாரி

வைத்து அழுகின்ற பெண்களின் தொகையும் குறைந்து கொண்டே வருகிறது. நாகரிகம் வளர வளரப் பெண்களிடம் இந் நாட்டுப்புறப் பாடல்களிசைக்கும் பயன்பாடுகள் மறைந்துபோய்க் கொண்டிருக்கின்றன. திரையுலக மாயைக்குள் இன்றைய சமூகம் அமிழ்ந்து வருவதனைத் தாலாட்டு, ஒப்பாரி போன்ற நாட்டுப்புறப் பாடல்கள் மெல்ல மெல்ல மறைந்து போகின்றன. அதற்குப் புத்துயிர் ஊட்டும் சக்தி இன்றைய சமூக அமைப்பிற்கோ அல்லது இன்றைய இலக்கியத்துக்கோ இல்லை என்பதையும் ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

**முற்கால சமூகத்தினுடைய வாழ்வியல் கட்டமைப்புக்கள் அக்காலச் சூழலைப் பிரதிபலித்திருக்கின்றன. வாழ்க்கை நிகழ்ச்சியும், அவற்றினால் ஏற்படும் அனுபவங்களையும், உணர்ச்சிகளையும் நல்ல அறிவு குறைந்த பாமர மக்கள் தமக்கு இயற்கையாக அமைந்த திறமையாலும், பயிற்சியாலும், மரபார்ந்த இசையுடன் தமது பண்பாட்டுப் பேறுகளை வெளிப்படுத்தி வந்தனர்.**

முற்கால சமூகத்தினுடைய வாழ்வியல் கட்டமைப்புக் கள் அக்காலச் சூழலைப் பிரதிபலித்திருக்கின்றன. வாழ்க்கை நிகழ்ச்சியையும், அவற்றினால் ஏற்படும் அனுபவங்களையும், உணர்ச்சிகளையும் நல்ல அறிவு குறைந்த பாமர மக்கள் தமக்கு இயற்கையாக அமைந்த திறமையாலும், பயிற்சியாலும், மரபார்ந்த இசையுடன் தமது பண்பாட்டுப் பேறுகளை வெளிப்படுத்தி வந்தனர். ஆனால் தற்கால சமூகம் என்பது முற்றிலும் மாறுபட்டிருக்கிறது. நவீன தொழிநுட்ப உலகில் பிரவேசித்திருக்கும் சமூகம் காலங்காலமாக இயல்பாகப் பேணிவந்த வழக்காறுகளைப் புறமொதுக்கி அறிவியல்சார் நடவடிக்கைகளில் காலத்தைச் செலுத்தி வருகின்றமையின் காரணமாக பழைய வழக்காறுகளைப் பின்பற்றுதல் என்ற வகையானது இக்கால சூழ்நிலையில் ஒரு நிரந்தரமான வெற்றிடத்தை ஏற்படுத்திவிட்டிருக்கிறது. உலகமயமாக்கல் என்கின்ற விடயம் இன்றைய காலகட்டத்தில் செல்வாக்குப் பெற்று வருகின்ற நிலையில் அதன் செயல் ஒழுங்கிற்கேற்ப வாழ்வியல் நகரங்களையும் கட்டமைத்து வருகின்றமையின் காரணத்தினால் ஒரு தனி மனிதனின் அல்லது சமூகத்தின் அனுபவங்களையோ, விருப்பங்களையோ வெளிப்படுத்த முடியாமல் அல்லது பிரதிபலிக்க முடியாமல் ஒரு குறுகிய வாழ்க்கைச் சக்கர ஓட்டத்திற்குள் வாழ்க்கை எல்லைப்படுத்தப்பட்டிருக்கிறது.

பொதுவாக நாட்டுப்புற மக்களினால் பாடப்பட்டு வரும் நாட்டுப்புறப் பாடல்கள் மக்களின் வாழ்வியலுடன் அன்னி யோன்னியப்பட்டிருக்கின்றன. மக்களின் வாழ்க்கை தாலாட்டுப் பாடலில் தொடங்கி விளையாட்டு காதல் பாடல் என வளர்ந்து காடுகள், கடல்கள், கழனிகள் என தொழில் செய்யும் இடங்களில் தொடர்ந்து திருமணப் பாடல்களில் நிறைவெய்தி ஒப்பாரிப் பாடலில் முடிவடைகிறது. இன்ப துன்பங்கள் பற்றி மக்களே பாடுவதனால் மக்கள் இலக்கியம் எனவும் அழைப்பர். மனித உள்ளத்தின் ஆழத்தில் ஆர்த்தெழுந்து எதிரொலிக்கும் பல்வேறு உணர்வுகளையும், இன்ப துன்பங்களையும் ஆசா பாசங்களையும், வாழ்க்கைப் போராட்டங்களையும் நாட்டுப்புறப் பாடல்களில் காணலாம். எனவே தான் மக்கள் குழுமத்தின் நாகரிகத்தின் பழக்கவழக்கங்களை, உணர்வுகளைப் படம் பிடித்துக் காட்டுவன நாட்டுப்புறப் பாடல்கள் ஆகும்.



அத்தகைய நாட்டுப்புற பாடல்கள் வரிசையில் முதன்மை பெறும் தாலாட்டுப்பாடலை இங்கு காண்போம். திருமணம் முடிந்து நெடுங்காலமாகியும் பிள்ளைப் பேறின்றி அந்த குடும்பம் அவலப்பட்டது. குறிப்பாக நம் சமூகத்தில் பிள்ளைப் பாக்கியம் இல்லாத பெண்ணை மலடி என்று வெறுத்தொதுக்கும் அவலம் காணப் படுகிறது. அச் சொல் அவள் காதில் விழுந்ததும் கலங்கினாள். அவள் வேண்டாத தெய்வங்களில்லை. செல்லாத கோயில்கள் இல்லை. வைக்காத நேர்த்திகள் இல்லை. இவள் வைத்த நம்பிக்கையும் வீண்போகவில்லை. பல வருடங்களுக்குப் பிறகு ஒரு அழகான ஆண் மகனைப் பெற்றெடுக்கிறாள். அவள் மடியில் உல்லாசமாகப் படுத்திருக்கும் தன் பிள்ளை தூங்குவதற்காகப் பழைய நினைவுகளை மீட்டிப் பார்க்கின்ற பாங்கு நயக்கத்தக்கது.

"மலடி மலடி யென்று மானிலத்தோர் ஏசாமல்
மலடிக்கொரு குழந்தை மாயவனார் தந்த பிச்சை
இருளி இருளி யென்று இந்நிலத்தோர் ஏசாமல்
இருளிக் கொரு குழந்தை ஈஸ்வரனார் தந்த பிச்சை

பிள்ளை இல்லை என்று பெருந்தவங்கள் செய்தேன்
மைந்தன் இல்லை என்று மாதவங்கள் செய்தேன்
பாலில் மலரெடுத்து பகலவனைக் கைதொழுது
தும்பை மலரெடுத்து சூரியனைக் கைதொழுது

வெந்த மாத்தின்றால் விரதமழியு மென்று
பச்சை மாத்தின்று பகலவனைக் கைதொழுது
வெள்ளிக்கிழமை விரத மகத்துவத்தால்
பிள்ளைக் கலி தீர்க்க பிறந்த நவரசமே

பரமசிவன் வாசலிலே பல நாள் தவமிருந்து
பரமசிவனார் தந்த பைங்கிளியே கண் வளராய்!
ஈஸ்வரனின் வாசலிலே இரந்து தவங்கிடந்து
ஈஸ்வரியாள் தந்த இந்திரனே கண்வளராய்!

தூரத்துக் கோயிலுக்குத் தூண்டாவிளக்கேற்றுவிப்பார்
காதத்துக் கோயிலுக்கு காணிக்கை போடுவிப்பார்
மடிக் குழந்தை வேணுமென்று மாதவங்கள் செய்வாரே
கைக்குழந்தை வேணுமென்று கடுந்தவங்கள் செய்வாரே

குளிக்க குளம் வெட்டி கும்பிடக் கோயில் கட்டி
படுக்க மடங்கட்டுவிப்பார் பாக்கியவான் உங்களப்பா
பந்தம் பிடித்து பசித்தாரை ஆராய்ந்து
கூடையிலே சோறும் குடத்திலே நீர் மோரும்
ஆராய்ந்து அன்னமிடும் அருச்சுனராம் உங்களப்பா.

என்று பல வருடங்கள் பிள்ளையில்லாமல் வருந்திப் பெற்றெடுத்த பாலகனை மடியில் கிடத்தி தாலாட்டுகிறாள் அந்த அன்னை. இப்படியாகப் பல தாலாட்டுப் பாடல்கள் பெண்கள் வாயிலிருந்தும் அவ்வப் பொழுதுகளில் சொற் கோவைகளாய் சொரிந்து தாலாட்டுப் பாடல்களாக மிளிர்ந்ததைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

பொன்னும் அழிவாச்சே உன் பொன்னுயிரும் போயாச்சே
காசும் அழிவாச்சே உன் கனத்த உயிர் தீங்காச்சே
பாடித் திரிந்த படலை தெருக்களெல்லாம்
பாசிபடர்ந்து பாழடைந்து தோன்றுதெணை

ஓடித்திரிந்த ஒழுங்கை தெருக்களெல்லாம்
பாசித் தெருவும் பாழ் ஒழுங்கை ஆகுதெணை.
தோளிலே கை போட்ட உன் தோழர்மார் தேடுகினம்
மார்பில் கை போட்ட உன் மாமன்மார் தேடுகினம்
சோதித் திருமுகத்தை நான் சொப்பனத்தில்
காண்பதெப்போ?
தங்கத் திருமுகத்தை நான் தரிசனத்தில் காண்பதெப்போ?

என்று தனது துன்பம் முழுவதையும் ஒப்பாரி வடிவில் கொட்டிக் தீர்க்கிறார். இவ்வாறாகப் பலவிதமான துன்ப உணர்ச்சிப் பிரவாகத்தை கிளர்ந்தெழச் செய்ய வல்ல ஒப்பாரிப் பாடல்கள் பல்லாயிரம் காலத்துக்கு முன்னிருந்தே தோன்றி வளர்ந்து வந்தன. இத் துன்ப உணர்ச்சியைத் தூண்டும் பாடல்கள் மரண வீடுகளில் வயது முதிர்ந்த பெரியார்கள் அதற்குரிய பண்ணுடன் ஒப்பாரி வைத்து அழும்போது கூட இருப்பவர்களும் தமது துன்பங்கள் தாள முடியாமல் கூடவே சேர்ந்தழவைப்பவை. மனங்களிலிருந்தும் இழப்புத்துயர் அகலுவதற்கு இத்தகைய ஒப்பாரிப் பாடல்கள் வழிகோலும் என்கிறது உளவியல். அடுத்து வாழ்க்கையின் இறுதி முதலாகி மரணத்தின் போது பாடப்படுகின்ற ஒப்பாரிப் பாடல்களில் ஒன்றையும் இங்கு நோக்குவோம்.

ஐந்து நாட்கள் தனது மகன் நோயினால் துவண்டு வருந்திய போது ஊர்ப்பரிகாரி ஒருவரை அழைத்து வந்து அந் நோய்க்கான பரிகாரத்தைத் தேடிநின்றாள் அந்த அன்னை. ஊர்ப்பரிகாரியோ பரிசோதித்துவிட்டு மருந்தும் கொடுத்துவிட்டுச் சென்றார். அந்த மருந்தும் இறங்க முன்னே அவள் மகன் இறந்து விட்டான். இச் சம்பவம் அத்தாயின் வாயினின்று சொல்லே இல்லாமல் வருகின்றது.

பொன்னான மேனியிலே ஒரு பொல்லாத நோய்வந்ததென்ன
தங்கத் திருமேனியிலே ஒரு தகாத நோய் வந்ததென்ன
ஊர்ப்பரிகாரி 'ஒரு உள்ள கதை சொல்லவில்லை.
நாட்டுப்பரிகாரி ஒரு நல்ல கதை சொல்லவில்லை.
மலையில் மருந்தெடுத்து நாங்கள் மலையில் தேனெடுத்து
இஞ்சியரைத்து மல்லோ நாங்கள் ஏலாதி ஊற்றி நின்றோம்.
குளிகை கரைக்கும் முன்னம் உன் குணமோ திரும்பியது.
மருந்து கரைக்க முன்னம் உன் மனமோ திரும்பியது.
அரைத்த மருந்தோ இங்கே அம்மி பாள் போகுதெணை.
உரைத்த மருந்தோ இங்க உருக்குலைந்து போகுதணை.

இவ்வாறு பண்டைய நாட்டுப்புற மக்களின் உணர்வு வெளிப்படையாக அமைந்த நாட்டுப்புறப் பாடல்கள் பலதரப் பட்டன. அவற்றுக்குள்ளே முக்கியமானவையாகத் திகழும் தாலாட்டுப் பாடல் ஒன்றையும் ஒப்பாரிப் பாடல் ஒன்றையும் மேலே பர்த்தோம். ஏராளமான நாட்டுப் புறப்பாடல்கள் எழுத்துருவம் பெறாமல் காலமாற்றத்தினால் மறைந்துவிட்டன. இப்பாடல்கள் ஏடும் எழுத்துக்களும் தோன்றுவதற்கு முன்னரே மக்கள் வழக்காற்றில் இருந்ததாக பண்டைய இலக்கிய நூலான தொல்காப்பியம் கூறுகின்றது. இதிலிருந்து ஏராளமான கருத்தாழம் தெரிந்த நாட்டுப்புறப் பாடல்கள் மங்கி மறைந்து போயிருக்கும் என்பது நிச்சயம். எனினும் சில இலக்கியங்களே எழுத்து வடிவம் பெற்றிருக்கின்றன. அதிலும் ஈழத்து இலக்கியங்கள் எழுத்துருவம் பெறுதல் என்பது மிகவும் அரிதான விடயமாகவே இருந்த நிலையில் அன்றைய பொழுதுகளில் இங்கெழுந்த நாட்டுப்புறப்பாடல்கள் பல எழுத்துருவம் பெற முடியாமல் போயிருக்கலாம். எனினும் விரல் விட்டு எண்ணக் கூடிய சில பல ப்பாடல்கள் இலக்கிய கர்த்தாக்களின் முயற்சியினால் எழுத்துருவம் பெற்று இன்றும் உயர வாழ்ந்து கொண்டிருக்கின்றன. எனினும் இன்றைய நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவால் கலாசார வளர்ச்சி நம்மத்தியில் புரையோடிப் போய் இருக்கும் நிலையில் பழமை பேணுகின்ற பண்டைத்தமிழரின் வாழ்க்கையையும் பண்பாட்டையும் சாற்றுகின்ற இத்தகைய இலக்கிய வடிவங்கள் மண்மூடும் கூடுகளாக மங்கி மறைந்து போகும் அபாயம் காணப்படுகின்றது கண்கூடு. இந்த நிலையை மாற்றிட இன்றைய ஈழத்து இலக்கிய படைப்பாளிகள் தமது படைப்பு முயற்சியுடன் மட்டும் தமது பணிகளை எல்லைப்படுத்தாமல் அன்றைய கிராம மக்களின் இலக்கியங்களையும் பொறுப்பாக காப்பதற்கு முன்வர வேண்டும். இதன் மூலமே அவர்களின் பெயர் புகழ் வரலாற்றில் இடம்பிடிக்கும்.

## அறிஞர்களின் பொன் மொழிகள்

- தாய்மொழியை திறமையாகப் பயன்படுத்த அறியாத எவனும், பிற மொழியை திறமையாகப் பயன்படுத்திக்கொள்ள, கற்றுக்கொள்ளுதல் கடினம். – பெர்னாட்ஷா –
- அறிவு இல்லாத கண்ணியம் வலிமையற்றது. பயனற்றது, கண்ணியம் இல்லாத அறிவு அஞ்சத்தக்கது. – ஜேம்யல் ஜான்ஸன் –

# புதிய வேதம்

## தொடர்கதை – அத்தியாயம் 08

தமிழ் மக்களின் பண்பாட்டு விழுமியங்களைக் கட்டிக்காக்கும் பெண்களும் இன்றைய நாகரிக சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு உதாரணமாக வாழ்ந்து கொண்டிருப்பவள் சுந்தரம்பிள்ளையின் மனைவியான பார்வதி. குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பநிலையில் மகள் பக்கம் நிலையாய் இருப்பதாக புருஷனான சுந்தரம்பிள்ளையினை எதிர்த்து வாதாடினாலும் முழுமையான குற்றவாளியாக அவரை நினைக்கத் தோன்றாது அவள் சகோதரியே அவளுடைய பொருளாதாரத்தை மனதில் வைத்து அவரது புத்தியை மழுங்கடித்து விட்டதாக நினைத்து மனம் குமுறினாள். மகள் சுவேதா வீட்டிலிருந்தால், தான் இருக்க மாட்டேன் என்று கூறிச் சென்றவர் இரவு பூராக வீடு திரும்பவில்லை. அவள் மனம் நிம்மதியில்லாது அலை பாய்ந்தது.



ஆக்கம் : கே.எஸ்.ஆனந்தன்

மகளை எழுப்பி விஷயத்தைக் கூறினாள்.

"அம்மா நீங்கள் நினைப்பது போல அவர் எங்கேயும் போகமாட்டார். கோபம் தணிந்ததும் வருவார். நீங்கள் அமைதியாயிருங்கள்" எனக் கூறினாள் சுவேதா.

"சாதாரணமான சண்டையென்றால் நீ கூறுவது போல வருவார். நீ இரவு கூறியது சாதாரண விடயமல்ல. அவரின் பிடிவாத குணம்' உனக்குத் தெரியும் தானே? எனக்கு என்னவோ பயமாயிருக்குதடி சுவேதா" கண்கலங்கினாள்.

"நானும் அப்படிக் கதைத்திருக்கக்கூடாது தான். ஆனால் ஆத்திரத்தில் கதைத்து விட்டன். அப்பாவுக்குப் புத்தி ஏன் போனது"

"எல்லாம் அந்தக் குடிகாரனும் தாயும் செய்த வேலை. சிலவேளை அங்கே போயிருப்பாரோ"

08 SEP 2015

08 SEP 2015

"அங்க போகமாட்டார். எங்கே போயிருக்கலாம்? அம்மா தோட்டப்பக்கம் போய்ப் பாருங்கோ. அங்க படுக்க வசதியும் இருக்கு. போய்ப்பாருங்கள்" என்றாள்.

கலங்கிய கண்களை முன்தானைச் சேலையால் துடைத்துக் கொண்டு வீட்டிற்குப் பின்னாலுள்ள தோட்டத்தை அடைந்தாள். அங்கே வாழைத்தோட்டத்திற்கு நடுவேயுள்ள சிறு தொட்டியில் உள்ள மரப்பலகைக்கட்டிலில் மல்லாந்து படுத்திருந்தார் சுந்தரம்பிள்ளை. மனதில் திகில் தோன்ற அவருக்குச் சமீபமாகச் சென்று பார்த்த பின்புதான் நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். இரவு நேரம் விழித்திருந்தாரோ என்னமோ குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார். குனிந்து அவர் கையில் தட்டி எழுப்பினாள். கண்விழித்தவர் "நீயா" என்று கேட்டுவிட்டு எழுந்திருந்தார். சோம்பல் முறித்தபடியே, "பார்வதி இங்கேயும் நிம்மதியாயிருக்க விட மாட்டியோ?" என்றார்.

"நீங்கள் செய்த பிழையால் தான் இப்படி ஒருநிலை உங்களுக்கு. இது நீங்களே தேடிக்கொண்டது. நீங்கள் அவளிடம் கதைத்ததுக்கு அவளும் பதிலுக்குக் கதைத்து விட்டாள். அதற்காக நீங்கள் இப்படி வந்து படுத்துக் கொண்டால் எங்களைப் பற்றி சிறிதளவாவது யோசித்துப் பார்த்தீர்களா?."

"பார்வதி நீ என்ன சொன்னாலும் எனக்கு மனம் ஆறாது. அவள் பேசாதிருந்திருந்தால் நானும் பேசியது பிழை என்று பின்பு வந்திருப்பேன். யாரோ சொல்லி வைத்தது போல் சட்டம் பேசினாளே எந்த முகத்தோடு நான் அங்கே வருவேன் நீயே சொல்லு" என்று கூறிக் கொண்டு இருக்கும் போதே சுவேதா அங்கே வந்தாள்.

"நீங்கள் என்னை மகளாக நினைக்காவிட்டாலும் உங்களை நான் அப்பாவாக மதித்துத்தான் கூறுகின்றேன். கதைக்குக் கதையாக நானும் ஆத்திரத்தில் கூறியதை மன்னித்து விடுங்கள். நான் அங்கேயிருந்தால் நீங்கள் வர முடியாது என்றால் அம்மா தனியே இருந்தால் வருவீர்கள் தானே? நான் இன்று தொடக்கம் கல்லூரி கொஸ்டலில் சேர்ந்து இருப்பதாகத் தீர்மானித்து விட்டேன். உங்கள் மனம் நோகும்படி பேசியதை மன்னித்து விடுங்கள். என்னைப் பொறுத்த மட்டில் எண்டைக்கும் உங்கள் ஆசியும், அனுமதியுமின்றி யாரையும் கல்யாணம் செய்ய மாட்டேன். அதற்காக உங்கள் சகோதரியின் ஊத்தைவாளியான



மருமகனை எண்டைக்கும் ஏற்கமாட்டேன். நான் உங்கள் பிள்ளை. எண்டைக்கும் இப்படியே இருப்பேன். என் குடும்ப கௌரவத்துக்குப் பங்கம் ஏற்படும்படி எண்டைக்கும் நடந்து கொள்ளமாட்டேன். இது சத்தியம்" என்று கூறிவிட்டுத் திரும்பினாள்.

"சுவேதா நான் சொல்வதைக் கேளடி. நீ எங்கேயும் போக வேண்டாம்" என்று தாய் கூறினாள்.

"அம்மா நீ சொல்லும் இந்த வார்த்தைகளை அப்பா சொல்லியிருந்தால் என் விழிகளில் பெருகும் கண்ணீர் ஆனந்தக் கண்ணீராய் துளிர்த்திருக்கும். என்னைப் பார்ப்பதானால் கொஸ்டலில் வந்து பாருங்கள்." என்று கூறிவிட்டுப் புறப்பட்டுச் சென்றாள்.

"சரி அவள் இனி வீட்டுக்கு வரமாட்டாள். நீங்கள் வாருங்கள்" என்று அவரை அழைத்தாள் பார்வதி.

"நீ போ நான் வாறன்" என்று கூறிவிட்டு அதுவரையில் மடியில் வைத்திருந்த புகையிலைச் சுருட்டை எடுத்துப் பற்ற வைத்தார்.

"நீங்கள் இன்னும் கொஞ்ச நேரத்திலை வீட்டுக்கு வரவில்லை. அப்புறம் நடக்கிறத நான் வாயால சொல்ல வில்லை" என்று கூறிவிட்டுச் சென்றாள்.

கோபம் பாவத்தைத் தேடும் என்று அறியாதவரல்ல அவர். ஏதோ ஒரு ஆவேசத்தில் தான் பேசிய வார்த்தைகளையே மறந்து போயிருந்தார். தமது மகளும் ஒவ்வொன்றையும் கூறக் கேட்டவருக்கு என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் மௌனமாயிருந்தார். இரண்டு மூன்று தடவை புகையிலையின் நிக்கோடின் மூளைக்குச் சென்று சிறிது உசார் கொடுத்த போதுதான் உண்மை நிலையை உணரத் தலைப்பட்டார். அவள் அடிக்கடி கூறினாளே நான் உங்கள் பிள்ளையாய்த் தானிருப்பேன் என்று. அவள் கூறியதில் என்ன பிழையிருக்கும். நான் எப்படிப்பட்டவன் ரோசக்காரன், ஆத்திரக்காரன், கோபக்காரன். அத்தனையும் அவளிடமிருக்கத் தானே செய்யும். எனக்கு உரிமையில்லை என்று கூறியவள் இப்போ அப்பா அம்மாவுடன் இருக்க வேண்டும் என்று கூறிக் கொஸ்டலுக்குப் போகிறாள். அவள் என்னை விட உயர்ந்து விட்டாள். பெற்ற அப்பனென்றாலும் தவறைச் சுட்டிக்காட்டி என் பேராசைப்பட்ட புத்தியை மழுங்கடித்து விட்டாளே. கொஞ்சக் காலத்துக்கு அவள் விருப்பப்படியே இருக்கட்டும் என்று நினைத்தவராய் எழுந்து கிணற்றடிக்குச் சென்று முகம் கழுவிக் கொண்டு வீட்டுக்குச் சென்றார்.

பார்வதி ஆவிபறக்கும் தேநீருடன் காவலிருந்தாள். சுவேதாவின் பட்டமளிப்பு விழா புகைப்படத்தைப் பார்த்துக் கொண்டு நின்றவர் படத்திலுள்ள அவள் உருவத்தைத் தடவிய படி "பார்வதி அவள் ரோசக்காரிதான். என்ர குணம் அவளிடம் இருக்கத்தானே செய்யும். கொஞ்ச நாளைக்கு அப்படியிருந்தால் தான் அவளில்லாத குறை எனக்கு இன்னும் தெரியவரும்" என்று கூறித் தேநீர்க் கோப்பையை வாங்கிக் கொண்டார்.

"நீங்கள் என்ன பேசுகின்றீர்கள் என்று விளங்கித்தான் கதைக்கின்றீர்களா? உங்களை என்ன பிடிச்சாட்டுது. இப்ப சொன்னதை நேற்று இரவு சொல்லியிருந்தால் இத்தனை பிரச்சனையும் வந்திருக்காதே"

"பாரு நவநீதனுடைய கதையில் நான் மயங்கித்தான் போனேன். மரகதம் வாங்கிய சொத்துக்கள் வீடு யாவும் இவள் பெயருக்கு எழுதி வைக்கிறன் என்றான். பேராசை பிடிச்ச என் மனதில் அந்த ஒரு நினைவுதான் ஆழமாகப் பதிந்து விட்டது. மற்றதைப் பற்றி நான் யோசிக்கவில்லை. இவ்வளவு சொத்தும் வருகிறபோது சுவேதா சம்மதிப்பாள் என்று தப்புக்கணக்குப் போட்டுவிட்டன். இவ்வளவு சொத்தும் தான் என் மனதில் நின்றதே தவிர மற்றவை எனக்குச் சரியா பிழையா என்று நினைத்துப் பார்க்கத் தோன்றவில்லை. கண்ணைப் பிடிச்ச மாயத்திரையை அவள் கிழிச்செறிஞ்ச பின்புதான் இரவு பூரா யோசித்தன். தோட்டத்தில் வந்து கதைத்தாளே சுவேதா. அப்ப நான் வாய் திறந்திருந்தால் குழறி அழத்தான் செய்திருப்பேன். அதனால் தான் வாய் திறவாது மௌனம் காத்தேன்."

"ஆண்டவனே நான் கும்பிட்டது வீண்போகவில்லை. இரவு பட்டினியாய் தானே படுத்தீர்கள். வாருங்கள் சாப்பிடலாம்"

"பார்வதி பட்டினி போட்டால் தான் மனிதனுக்கு நல்லறிவு வரும் போலும். பசி, பட்டினி இல்லாமல் வயிறு நிரம்பினால் வேறு ஆசைகள் தானே வரும். ஒரு நேரப் பட்டினி என் மனதையே மாற்றிவிட்டது."

"எமது முன்னோர் வெள்ளிக்கிழமை வாரத்தில் ஒரு நாளாவது விரதம் இருக்கச் சொன்னது உதுக்குத் தான். காலையிலை குளித்து விட்டு மூன்று நேரமும் சாப்பிட்டுவிட்டு விரதம் என்று கூறுபவர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்கள் கதைகளைக் கேட்டு நீங்களும் செய்தீர்கள். ஆண்டவன் நல்லதோர் படிப்பினையைப் படிப்பிச்சுவிட்டார்."

"போதும், பார்வதி நீ இனி தத்துவம் பேச ஆரம்பித்து விட்டாய். எனக்கு மனம் ஒரு நிலைக்குவரவில்லை. அந்தக் கோமாளியும் தாயும் என்ன கோலத்தில் வரப் போகிறார்களோ தெரியாது. அவர்களைச் சமாளித்த பின்பு தான் மனம் ஆறுதலடையும்" என்றார்.

முதல் நாளிரவு அவித்து வைத்த பிட்டைச் சூடு காட்டித் தேங்காய்ச் சம்பலுடன் கொண்டு வந்து அவருக்கு முன் வைத்து விட்டு "ஒரு பிரச்சனையும் வராது. நீங்கள் ஆறுதலாகச் சாப்பிடுங்கள்" என்று கூறிவிட்டு மீண்டும் தண்ணீர் எடுத்து வரக் குசினிக்குள் சென்றாள் பார்வதி.

"சிவனே இன்னும் என்னென்ன கூத்து நடக்கப் போகின்றதோ. நீதான் இவற்றிலிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று கூறியபடி சாப்பிட ஆரம்பித்தார்.

☆ ☆ ☆ ☆ ☆

விஞ்ஞானம் வளர்ச்சியடைந்துள்ள நாட்டில் புகலிடம் தேடி ஓடி வந்தவர்கள் இன்றும் குறுகிய மனநிலையுடன் வாழ்ந்து கொண்டிருப்பதை எண்ணி நண்பர்களோடு தர்க்கம் செய்வான் ஜெபநேசன். ஆனால் பலன் தான் பூஜ்யம் என எண்ணி வேதனைப் படுவான். முதல் நாட் காலையில் சிவா வந்து போனபின்பு அழைப்பு மணி கேட்டு கதவைத் திறந்தவன் கணேசன் நிற்பதைப் பார்த்து அதிர்ந்தான். சில வினாடிகளில் தன்னை சுதாரித்துக் கொண்டு "குட்மோனிங் உள்ளே வா" என்றான்.

அவனுடைய முகத்தில் சோகம் குடிகொண்டிருப்பதைப் பார்த்து வீட்டு விசயம் தெரிந்து தான் வந்திருக்கிறான் என உணர்ந்து கொண்டே, "என்ன கணேஸ் எதுவும் பேசாமல் இருக்கிறாய். என்னுடன் கோபமா? இல்லை ஏதும் பிரச்சனையா?" என்றான்.

"கணேஸ் பணம் வந்தால் குணம் மாறுமா? "சிலர் மாறமாட்டார்கள். அவர்கள் அறிவு பூர்வமாக சிந்திப்பவர்களாய் இருப்பார்கள். நம்மவர்களில் பலர் அப்படியில்லை. குணம் மட்டும் இல்லை ஆட்களே மாறி விடுவார்கள்."

"ஏன் அப்படி என்ன நடந்து விட்டது" .

"அண்ணா வீட்டுக்குப் போனேன். இவர் இங்கே வந்ததாகத் தெரிந்தது. ஆனந்தன் இங்கே வந்தான். ஊருக்குப் போகலாம் என்று தான் வந்தான்"

"ஊருக்கா? என்ன அவசரம்"

"உண்மையில் உங்களுக்குத் தெரியாதா? அண்ணா இங்கே வரவில்லையா? வீட்டில்..." என்று அவன் பேச்சை இடைநிறுத்தும்படி கையினால் கையை காட்டி நிறுத்தினான் நேசன்.

"கணேஸ் பதறாத காரியம் சிதறாது என்று கேள்விப்பட்டிருப்பாய். முழு விடயமும் கேள்விப்பட்டனியா? இன்றைக்கோ நாளைக்கோ பிரச்சனை தீர்ந்துவிடும். நீ ஊருக்குப் போனால் பிரச்சனை விஸ்வரூபமாகிவிடும்"

"அப்பா பிடிவாதக்காரர். அவள் தனியே என்ன பாடுபடுகிறாளோ? அந்த மனிசன் நினச்சதை முடிக்காமல் விடாது" என்று ஆவேசப்பட்டான்.

"கணேஸ் நீ நினைப்பது போல சுவேதா இல்லை. அவள் புத்திசாலி. உன் அப்பா எப்படித் திட்டம் போட்டாலும் ஒரு நொடியில் ஊதித்தள்ளி விடுவாள். பொறுமையாயிரு கணேஸ் எல்லாம் சிவா சொல்லுவான். அப்பாவின் நிலமை தலை கீழாக மாறும் பாரேன்"

. "அப்பா ஏன் எல்லாம் தெரிந்து கொண்டு இப்படி நடந்து கொள்கிறார். நவனீதனைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். அந்த உதவாக்கரையின் செயற்பாடுகள் பற்றி அக்கா சாருலதா ஏற்கனவே கூறியிருக்கிறாள். அது எல்லாம் தெரிந்தும் அப்பாவின் புத்தி ஏன் இப்படியாச்சு"

"கணேசா எல்லாம் பிள்ளைகள் மேலுள்ள பாசம் தானப்பா. நான் சொல்வதை நீ ஆறுதலாக யோசித்துப்பார் உனக்கே புரியும். ஏன் உன் விசயத்திலேயே இதற்கான பதிலும் இருக்கின்றது. அவர் படிப்பறிவு இல்லாதவர் கஸ்ட நிலையில் நேர்மையாக வாழ்ந்தவர். சாருலதாவின் கல்யாணத்துப் போன போது எல்லோரிடமும் கதைத்தனான். சுவேதா உங்கள் எல்லோரையும் விட அறிவு பூர்வமாகச் சிந்திப்பவள். அப்பா கஸ்டத்தில் வாழ்ந்தவர். ஒவ்வொரு பிள்ளையும் பெரும் பணக்காராக வாழ வேண்டும் என்ற ஆதங்கத்தில் நவனீதனுடைய கதையில் மயங்கி விட்டார். மகளுக்கு உள்ளூரிலேயே நிலபுலம் சேரும், வீடுவாசல் சேரும் என்ற ஆர்வம். சகோதரி மகன் தானே அவனைப் புத்திசாலியான சுவேதா திருத்திவிடுவாள் என்ற நப்பாசை. தன் பிள்ளைகள் எல்லாம் நல்ல நிலையிலிருக்கின்றார்கள் என்றால் அவருக்கும் சமூகத்தில் பெரும் அந்தஸ்து கிடைக்கும் என்ற பேராசை. பொருள் பண்டத்தில் பணத்தில் பற்றுவைத்துவிட்டால் மனிதநேயம் அதற்குள் மறைந்து விடுகிறது. மேலும் மேலும் போக நினைப்பார்களேயன்றி

மற்றவர்களின் மனநிலையை மறந்து போய் விடுகிறார்கள். இதுதான் உங்கள் அப்பாவுக்கும் உள்ள பிரச்சனை. ஆனால் சுவேதாவிடம் அவருடைய திட்டங்களோ சட்டங்களோ எதுவும் எடுபடாது. நீ அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வரவேண்டியதில்லை" என்றான்.

"நீங்கள் சொல்வதைக் கேட்க மனம் ஆறுதலடைகின்றது. அங்கே திவ்யாவும் பார்த்திபனும் என்னை உறங்கவிடவில்லை. அதுதான் உங்களையும் அண்ணனையும் சந்தித்து முடிவெடுக்கலாம் என்று வந்தனான்"

"இந்நேரம் சுவேதாவுக்கு போயிருக்கும். அவள் நல்ல முடிவு எடுப்பாள். மிஸ்டர் சுந்தரப்பிள்ளை பெட்டிப்பாம்பாய் அடங்கிப் போயிருப்பார். எதற்கும் நாளைக்கு அல்லது ஈவினிங் சுவேதாவுக்கு போய் சொல்லுவார்."

அவர்கள் கதைத்தக் கொண்டிருக்கும் போதே "வணக்கம் நேசன் அங்கிள்" என்றாள் அழகான தமிழில்

"தாஸ் நன்றாகத் தமிழ் பேசுகின்றீர்கள் எங்கே கற்று கொண்டீர்கள்" என்றான் கணேஸ்.

"எல்லாம் இவர்களிடம் தான். இவர் இங்கே வந்து சைக்கோலஜி படித்தவர். இவரின் செயற்பாடுகள் எதையும் அணுகும் முறைகள் எந்த பிரச்சனையானாலும் ஈசியாய் பாஸ் பண்ணும் திறன் எனக்கு இவரிடம் பிடிப்பு ஏற்பட்டது. சில காலம் பிரண்டாய் பழகினோம். அப்புறம் காதலாகி கல்யாணம் செய்து கொண்டோம். சிலருக்கு எல்லாம் தெரியும். உங்களுக்கு தெரியாது. இவர் அளவுடன் உழைத்து அழகாக வாழ்வோம் என்று கூறுவார். எனக்கு அது பிடிச்சிருக்கு என்றாள். சிரித்துக் கொண்டே நேசன் நீங்கள் கொடுத்து வைத்தவர். இப்படி ஓர் அன்புள்ளம் கிடைத்ததே என்று எனக்கு சந்தோஷமாயிருக்கிறது. என்னுடைய லைவ் அங்கிள் இருக்கும் நல்ல நிலையிருந்தாலும் பிஸ்னஸ் மேலும் மேலும் டெவலப் ஆகவேணும் என்று பறக்கிறார்கள். அவள் கூறிக் கொண்டிருக்கும் போது நேசனின் தொலைபேசி அழைப்பு மணி கேட்டது. அவள் எடுத்து "ஹலோ" என்றாள்.

"நான் சிவா பேசுறன் கணேஸ் வந்தானா?"

"ஆமா இங்கேயிருக்கிறான்"

"நான் வீட்டிலிருப்பதாய் சொல்லி அனுப்பல அவசரக்காரன் நல்ல காலம் இங்கே வந்தான்"

"நான் எல்லாம் சொல்லியிருக்கிறேன் சுவேதாவிடம் தொடர்பு கொண்டியா சிவா"

"நல்லபடி எல்லாம் சொல்லி விட்டன். அவள் ஸ்கூலில் உள்ள கொஸ்டலில் தங்கப் போறாளாம். அப்பா வீட்டுக்கு வராது தோட்டத்தில் தங்கிவிட்டாராம். அம்மா தான் பாவம் தூக்கமின்றி அலைந்ததாம் அப்பாவுக்கு காலையில் நேரடியாகவே சுவேதா சொல்லிவிட்டு மன்னிப்புக் கேட்டதாகக் கூறினாள்"

"வெரிக்குட். எனக்குத் தெரியும் அவள் புத்திசாலி. யாருடைய உதவியுமின்றி தானே பிரச்சனைகளை சுமூகமாகத் தீர்த்து விடுவாள். ஓ...கே பிறகு சந்திப்போம்."

"தாங்ஸ் நேசன்" என்று பேச்சை முடித்துக் கொண்டான்.

ஜெபநேசனிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான் கணேஸ். அண்ணனைச் சந்தித்துக் கொண்டு உடனேயே லண்டனுக்கு திரும்பிவிட வேண்டும் என்று நினைத்துக் கொண்டு சென்றான். சிவநேசனின் வேண்டுகோளுக்குக்கிணங்க அங்கேயே தங்கி மறு நாள் செல்வதென்று முடிவு செய்து கொண்டான்.

இரவு பூரா கொட்டிக் கொண்டிருந்த பனி ஆதவன் வரவால் குறைந்து விட்டிருந்ததாயினும் வெண் பஞ்சுத்துகள்களாகத் தூவிக் கொண்டிருந்தது. இயற்கையின் மாறுபாடான செயற்பாட்டை மனிதன் ஏதோ வழியில் மாற்றி அமைத்து விட்டு தங்கள் வேலைகளைச் செய்து கொண்டுதானிருக்கிறார்கள். விஞ்ஞான வளர்ச்சி மனிதனுக்கு அனுசரணையாக விளங்குகின்றது. எமது நாட்டின் வளங்கள் இயற்கை அழகுகள் மனித முயற்சியால் உரமான கட்டிடங்கள் யாவும் போரினால் சிதைவடைந்து சிதறியதுடன் மக்கள் மனங்களையும் வலுவிழக்க செய்துவிட்ட கொடுமைகளை நினைத்து பெருமூச்செறிந்தான் கணேஸ். காலப்போக்கில் நிலைமை எப்படியிருக்கப் போகிறது என்ற தொலைநோக்கின்றி ஊரில் உள்ளவர்கள், இங்கிருந்து அனுப்பும் பணத்தைப் பெயருக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டு வீடு வாசலை இடித்து நவீன பாஷனில் புதுப்பித்தும் கோயில்களை இடித்துப் புதுப்பித்துக் கோபுரங்கள் கட்டுவதுமாய் செலவு செய்து ஆடம்பரமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்களே என நினைக்கும் போது மனம் வேதனைப்பட்டாலும் காலத்தின் தேவைக்கு ஏற்ப மாறுதல்களும் தேவை தான், எனத் தானே தனக்கு சமாதானம் செய்து கொண்டான். வாசல் அழைப்பு மணி அவன் சிந்தனையைக் கலைத்து விட எழுந்து சென்று கதவைக் திறந்தான். அண்ணன் சிவா சிரித்துக் கொண்டே வந்து அவனைக் கட்டியணைத்துக் கொண்டான்.

☆ ☆ ☆ ☆ ☆

மாலைப்பொழுதின் செம்மஞ்சள் நிறம் வான வீதிக்கு அழகுக்கோலம் போட்டிருந்தது. சுவேதாவின் நினைவில் நீந்திக் கொண்டிருந்தான் நவனீதன். சாப்பாட்டுக்கு பின் அவன் பருகிய விஸ்கி அவனைத் தாலாட்டிக் கொண்டிருந்தது. "அம்மா மிஸ்டர் சுந்தரம்பிள்ளை அங்கிள் இன்னைக்கு வரவில்லை. நான் போய் பார்த்து வரட்டுமா?" என்று கேட்டான்.

"நீ அங்கே போக வேண்டாம். நான் போன் செய்து சொன்னான். அவர் வருவதாகச் சொன்னார்"

"இன்னும் ரூவிக்ஸ் தானே இருக்கு. இந்த மனிசன் சொன்னது எதையும் செய்யாமல் திரியுது"

"அவர் அப்படித்தான் நீ அவசரப்படாதை. நீ நிக்கிற கோலத்தைப் பார்த்தாள் என்றால் சுவேதா கல்யாணமே வேண்டாம் என்று மறுத்துவிடுவாள். அதோ மாமா வந்து கொண்டிருக்கிறார்" என்று கூறி சுந்தரம்பிள்ளையை வரவேற்றாள் மரகதம். அவர் எதுவும் பேசாமல் அமைதியாயிருந்தார். நவனீதன் ஒன்றுக்கொன்று சம்மதமில்லாமல் அலட்டிக் கொண்டிருந்தான்.

"என்னண்ணே பேசாமலிருக்கிறியள் வீட்டில் ஏதும் பிரச்சனையே" என்றாள்.

"அதையேன் கேட்கிறாய் இவன் தம்பி அவளை ஸ்கூலுக்கு போகாமல் நிற்பாட்டச் சொன்னான். நான் அதைக் கூறினேன். சுவேதா பத்திரகாளியாகிவிட்டாள். எனக்கு கோபம் வந்திட்டுது கண்டபடி கதைத்து விட்டேன். அது பெரும் ரகளையாய்ப் போச்சு. நான் இராத்திரி வீட்டுக்குப் போகவில்லை தோட்டத்தில் படுத்திருந்தேன்." என்று நடந்த விடயங்களை ஒழிவு மறைவின்றிக் கூறி முடித்தார்.

"அப்படியாயின் கல்யாணம் நடக்காதா அங்கிள்" என்றான் நவனீதன்.

"அவள் இனி வீட்டுக்கு வரப் போவதில்லையாம்"
"அங்கிருந்து என்ன செய்வாளாம்?" என்றாள் மரகதம்.

"அம்மா நான் அன்னைக்கே சொன்னனான். நீங்கள் தான் கேட்கவில்லை. அவள் ஒருத்தனை லவ் பண்ணுறாள் சம்மதிக்கமாட்டாள் என்று தானே சொன்னான். நீங்கள் அண்ணன் சொல்லை மீறி அங்கே எதுவும் நடக்காது என்றீர்கள். உங்க அண்ணா இப்ப என்ன செய்யப் போறார்?"

"இங்கே பார் தம்பி நீ ஏதோ சொல்லுறாய். சரி இந்தக் காலத்தில் படிக்கிற பிள்ளைகள் வேலைக்கு போற பிள்ளைகள்

அவர்களோடை சகஜமாகப் பழகுங்கள். அதைப் போய் நீ தேவையில்லாமல் கதைக்கக்கூடாது" என்றார் சுந்தரப்பிள்ளை.

"அங்கிள் அவள் யாரோடை போனாலும் பரவாயில்லை எனக்கில்லாத கல்யாணம் வேறு எவரோடும் நடக்கக் கூடாது. நடந்தால் நான் மனிசனாக இருக்கமாட்டன்."

"இங்கே பார் தம்பி என் அனுமதியோ ஆசியோ இன்றி யாரையும் கல்யாணம் செய்ய மாட்டன் என்று சத்தியம் பண்ணியிருக்கிறாள். இதை மீறி நான் எதுவும் கதைக்கலாமா மரகதம்" என்று சகோதரியைத் துணைக்கு அழைத்தார் சுந்தரம்பிள்ளை.

"அது சரி அண்ணா, நானும் கல்யாணம் என்று ஊர் பூரா தம்பட்டமடித்து விட்டன். எப்படி இனி தலை நிமிந்து நடக்கமுடியும்? அது தான் யோசிக்கிறன்" என்றாள்.

"தம்பி அவசர அலுவலாய் கனடா திரும்ப வேண்டியிருப்ப தால் சுவேதாவின் அண்ணன்மாரும் கல்யாணத்துக்கு வரவிருப்பதாக கேள்வி. அதனால் ஆறுதலாகச் செய்யலாம் என்று நிறுத்திவிட்டம் என்று ஒரு பொய்யைத் கூறுவது தானே" என்று சுந்தரம்பிள்ளை கூறினதும் வெகுண்டு எழுந்தான் நவனீதன்.

"பொறுத்தார் பூமியாழ்வார். என்று கேள்விப் பட்டதில்லையா? கோபித்து எதுவும் நடக்கப்போவதில்லை அண்ணா. பொறுத்துதான் பார்ப்போமே"

"நீ தானே அன்னைக்கு ஆறின கஞ்சி பழம் கஞ்சி. உடன் சூட்டோடு சூடாய் கல்யாணத்தை முடித்துக்கொண்டு போடா என்று கூறினாய். பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு கல்யாணம் செய்யமால் இருந்து விட்டால் சுவேதா உயிரோடு இருப்பாள். இல்லையென்றாள் அங்கிள் சுவேதாவும் சரி அவள் முடிக்கபோகும் மாப்பிள்ளையும் சரி இந்த உலகில் எந்த மூலையிலிருந்தாலும் சுட்டுக் கொல்லாமல் விடமாட்டான்" என்று கூறினான்.

"தம்பி இதை நீ பேசவில்லை. உன்னுள் இருக்கிற சரக்குத்தூள் பேசுது. எதையும் யாரிடம் பேசுகிறாய் என்பதை அறிந்து பேசு. மரகதம் என்னை மன்னித்துவிடு உன் பிள்ளைக்கும் சொல்லவில்லை. நான் வருகிறேன்." என்று கூறிப்புறப்பட்டுச் சென்றார்.

மரகதம் செய்வதறியாது திகைத்துப் போயிருந்தாள். நவனீதன் சுந்தரம்பிள்ளை கடும் தொனியில் கூறிய வார்த்தைகளைக் கேட்டு வாயடைத்துப் போனான். போதை இறங்கிவிட்டிருந்ததால்

தாயைப் பார்த்து "அம்மா அங்கிள் கோபித்துக் கொண்டு போகிறாரா?" என்றான்.

"நீ குடிபோதையில் கண்டபடி கதைத்தால் எப்படி அவர் போகாமலிருப்பார் உன்ரை கதையால் அவரும் இனி என்ன முடிவு எடுப்பாரோ தெரியாது"

"நான் போய் சொறி சொல்லட்டுமா"

"இனி நீ அந்த வீட்டுப்பக்கம் போகாதே நான் கதைக்கிறன்" என்று கூறிய மரகதம் தன்னுடைய இனிய கனவு கலைந்து போனதே என்று வருந்தியவளாக எழுந்து உள்ளே சென்றாள்.

நினைப்பது எல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் என்ற ஒன்றை மனிதர்கள் மறந்தே விடுவார்கள். எது நடக்க வேண்டுமோ அது நடந்தே தீரும். இருக்கும் இடத்தைவிட்டு இல்லாத இடம் தேடி அலைவது தான் மனிதர்க்கு உண்டான இயல்பு. இதனை உணர்ந்து நடந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமாகவேயிருக்கும். இதனை உணர்ந்து நடந்து கொள்ளும் தன்மை பெரும்பாலானவர்களிடம் இருப்பதில்லை. இதனாலன்றோ துன்பத்தை வலிந்து வாங்கிக் கொண்டு அலைகின்றனர். இறைவன் வகுத்த விதிக்கு மனித இனம் விதி விலக்காகி விட முடியுமா?

☆ ☆ ☆ ☆ ☆

மூன்று மாதங்கள் எப்படி கழிந்தது என்று சுவேதா ஆச்சரியப்பட்டாள். கையிலுள்ள கடிதம் அவளது மனப்பாரத்தைக் மேலும் குறைத்திருந்தது. அவளுக்கு வவுனியாவுக்கு மாற்றலான கடிதம். இந்த மூன்று மாதத்தில் பார்வதி மகளைப் பார்க்க இடைக்கிடையே வந்து போயிருந்தாள். ஹொஸ்டலில் மற்றவர்களோடு சேர்ந்திருந்ததால் வேறு விடயங்களில் அவள் மனம் செலுத்தவில்லை. டேவிட்டுக்கு மட்டும் நடந்த விடயங்கள் பற்றி கடிதம் மூலம் தெரிவித்திருந்தாள். நடப்பதெல்லாம் நன்மைக்கே என்ற கொள்கையுடையவன் டேவிட். அவன் எழுதிய கடிதம் அவள் மனதைச் சாந்தியடையச் செய்திருந்தது.

வவுனியாவுக்குப் புறப்பட முன்பு அம்மாவைச் சந்திக்க வேண்டுமென்பதால் தொலைபேசியில் விடயத்தைக் கூறி தாயை வரவழைத்தாள். பார்வதியால் எதுவும் கூற முடியவில்லை கண்ணீர் தான் பதிலாக இருந்தது.

"அப்பா நல்லபடியிருக்கின்றாரா? இந்த விடயம் அப்பாவுக்கு தெரிய வேண்டாம். இதுவும் ஒரு விதத்தில் நல்லது

தான். நான் உங்களுடன் போனில் கதைப்பேன். வாழ்க்கை கூட ஒரு நெடும் பயணம் மாதிரித்தான். பல பிரச்சினைகள் வரும் போகும், அதற்காக நாம் எமது கொள்கைகளை மாற்றி விடமுடியாது. அப்பாவின் மனம் மாறினாலும் ஒரு விடயத்தில் அவர் தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று தான் நிற்பார். டேவிட் விடயம் அப்பாவுக்கு பிடிக்காது. நான் அப்பாவுக் வாக்குக் கொடுத்து விட்டன். அது வரையும் நான் பொறுத்திருப்பேன். உங்களை நினைத்தால் தான் எனக்குக் கவலை. உடனிருந்து உங்கள் சுகதுக்கங்களில் பங்கு கொள்ள முடியவில்லையே" என்று தாயை அணைத்துக் கொண்டு அழுது தீர்த்தாள்.

"அழாதே எல்லாம் நல்ல படியாய் நடக்கும். பெரியவள் சாருலதாவும் வருவதாகக் கூறியிருந்தாள். எப்ப என்று கூறவில்லை. உன் கல்யாணம் நடக்கும் போது எல்லோரும் வருவார்கள். சுவேதா நல்ல மனதுக்கு நல்லதே நடக்கும்."

"அம்மா நீங்கள் நல்லா மெலிஞ்சு போனீர்கள். உடம்பைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். தவறாது மருந்து எடுங்கள். எமது கையில் எதுவும் இல்லை. இறைவன் விட்டவழி நல்லதை நினைப்போம் நல்லதே நடக்கும்." என்று கூறி பார்வதியை அனுப்பி விட்டுப் பிரயாணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்தாள்.

"ஏன் ரீச்சர் உங்கள் அம்மாவுக்கு முட்டு வருத்தம் இருக்கா?" என்றாள். சக ஆசிரியை உமா.

"எப்படி உங்களுக்கு தெரியும் ரீச்சர்"

"என் அம்மா பட்டபாடு எனக்குத் தெரியும். உங்களுடன் கதைக்கும் போது அவாவுக்கு மூச்செறியுது. உங்களுக்கு இருக்கும் ரென்சனில் நீங்கள் அதைப் பொருட்படுத்தவில்லை."

"கடவுளே என் அன்னையைக் காப்பாற்று" என்று கண்ணீர் பெருக்கினாள்.

"மிஸ் சுவேதா, திக்கற்றவனுக்கு தெய்வமே துணையாயிருப்பார். என்ன செய்வது? நாம் பெற்றோருடனிருந்து கடைசிக் காலத்தில் கடமை செய்யக் கொடுத்து வைக்கவில்லை. இவர்களாவது சொந்த இடத்தில் சொந்த வீட்டிலிருக்கின்றார்கள். எத்தனையோ பெற்றோர் பிள்ளைகள் நல்ல நிலையிருந்தும் முதியோர் இல்லங்களிலிருந்து கண்ணீர் வடிக்கிறார்கள். டாக்டரின் மருந்தை விட பெற்றோருக்கு கடைசி காலத்தில் பிள்ளைகளின் அரவணைப்பும், அன்பும் தான் சிறந்த மருந்து என்ன செய்வது நாம் கொடுத்து வைத்தது அவ்வளவு தான். இவற்றை நினைத்து துன்பப்படாமல் நீங்கள் புறப்படுங்கள் ரீச்சர்." என்றாள்.

ஒரு மாத காலம் வவுனியாவில் ஒரு கல்லூரியில் உள்ள விடுதியில் தங்கியிருந்தாள். புதிய இடம் புதிய மனிதர்கள், பிள்ளைகள் என்ன இருந்தாலும் பிறந்து வளர்ந்த இடம் போல வருமா? டேவிட் வந்து அவளைச் சந்தித்து ஆறுதல் கூறிப் போயிருந்தான். இரவில் படுக்கையில் படுத்ததும் தாயின் நினைவு. உமா கூறிய வாக்கியங்கள் அவளைத் தூங்க விடாது மனதை அரித்துக் கொண்டிருந்தன.



முதியோர் இல்லங்கள் பற்றி பத்திரிகைகளில் வந்த செய்திகளை அவள் இதுவரை ஒரு பொருட்டாக எண்ணியதில்லை. வயதான தந்தையும் தாயும் இருப்பது கூட ஒருவகையில் முதியோர் இல்லம் தான். ஒரு தாயும் தந்தையும் பிள்ளைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்கி வாழ்வு கொடுத்து ஆனந்தம் அடைவதுடன் முடிந்து போவதில்லையே வாழ்க்கை. பெற்றோரின் இயலாமை வேளையில் அவர்களை பராமரிக்காது தமது சுயநல நோக்கங்களுக்காக முதியோர் இல்லங்களில் கொண்டு சென்று விடுவது நியாயமற்ற மனிதாபிமானமற்ற செயல்தான். ஆனால் எனது அப்பா போன்றவர்கள் எல்லாப் பிள்ளைகளையும் வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்து பணம் சேர்க்க ஆசைப்பட்டால் அவர்களுக்கு இறைவன் கொடுக்கும் தண்டனையாகக் கூட முதியோர் இல்லம் இருக்கலா மல்லவா? என் தாய்க்கு இப்படி ஒரு நிலமை ஏற்படவேண்டுமா? என எண்ணி மனம் குமைந்த வேளையில் நித்திராதேவி அவளை அணைத்துக் கொண்டாள்.

ஐந்து மணிக்கு எழுந்திருப்பவள் மணி ஆறாகியும் எழுந்திருக்கமால் படுத்திருக்கின்றாளே என எண்ணி அருகே சென்று அவளை எழுப்பினாள்.... திடுக்கிட்டு எழுந்தவள் "மணி ஆறாகி விட்டதே. இரவு தூங்குவதற்கு நேரமாகி விட்டது ரீச்சர். நல்லவேளை எழுப்பி விட்டீர்கள்" என்று கூறிக் குளிக்கச் சென்றாள்.

மறுநாட் காலையில் உரிய நேரத்துக்கு எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு கல்லூரிக்குச் செல்லுகின்ற போது தொலைபேசி மணி ஒலித்தது. எடுத்து "ஹலோ என்றாள்"

"சுவேதா நான் பெரியண்ணா சிவா பேசுறன்."

"அண்ணா நீங்களா? உங்கள் குரலைக் கேட்க சந்தோஷமாயிருக்கு"

"அதிருக்கட்டும். உனக்கு இன்னும் விசயம் தெரியாது போலிருக்கு" என்று கூறி விடயத்தைக் கூறியதும்

"உண்மையாகவா? நான் பாவி இதுவரை..." என்று கூறியவள் மயங்கிக் கட்டிலில் சாய்ந்தாள்.

(வளரும்)

# மாணவர் வலுவூட்டற் பகுதி




திருமதி. உதயலதா நவதீசன்
யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை


மாணவர்களே, இதோ!

'தமிழருவியின்' இந்த இதழிலும் மாணவர் வலுவூட்டற் பகுதியில் உங்களுக்கென்று இந்தப் பக்கம்.

க.பொ.த உ/த தமிழ்ப் பாடக் கவிதைப் பகுதியில் உங்களுக்குரிய வினாவிடை.

## க.பொ.த உ/த தமிழ் தனிப்பாடல் திரட்டு கம்பர் பாடல்

### மன்னவனும் நீயோ.....

கம்பரின் 'மன்னவனும் நீயோ..." என்ற பாடலூடாகப் புலவர் வெளிப்படுத்த விழைந்த விடயம் யாது?

சோழ மன்னனுடைய அவையில் சோழனின் நட்பைப் பெற்ற புலவராகக் கம்பர் இருந்த வேளையில் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக சோழன் கம்பரை நாட்டை விட்டு வெளியேறுமாறு கூறிய போது கம்பரால் பாடப்பட்டதாக இப்பாடல் அமைந்திருக்கிறது.

இக் கவிதை ஊடாகச் சொல்ல விழைந்த விடயம் எதுவென நோக்கின், தமிழ்ப் புலவனின் தலை வணங்காப் பண்பு ஆகும். அதாவது, யாராக இருந்தாலும், மன்னனாக இருந்தாலும் கூட, மண்டியிடாத புலவனின் பெருமை சொல்லப்படுகிறது. இன்னும், தன்னுடைய சுய கௌரவத்திற்குப் பாதிப்பு ஏற்படுகின்ற போது ஒரு மனிதனுக்கு, அதுவும் ஓர் உண்மைக் கவிஞனுக்கு இயல்பாகவே ஏற்படக் கூடிய நியாயமான கோபமும் வெளிப்படுத்தப்படுகின்றது. மேலும், தனது கவித்துவத்தில் கவிஞன் கொண்டுள்ள நம்பிக்கையும் தன்னம்பிக்கையுடனான புலமைச் செருக்கும் வெளிப்படுத்தப்படுகின்றன.

மேற்கூறியவாறான விடயங்கள் தான் இப்பாடல் ஊடாக கவிஞர் வெளிப்படுத்த விழைந்தவை ஆகும்.

### புலவர் சொல்ல விழைந்த விடயத்தைச் சொல்லும் விதம்

சோழ மன்னன் என்று கூடப் பார்க்காது தன்னுடைய

எதிர்ப்புணர்வை தலை வணங்காத் தன்மையை முகத்துக்கு நேராகவே சொன்ன முறைமை.

"மன்னவனும் நீயோ? வளநாடும் உன்னதோ?" என்று கோப உணர்வுடன் சற்றுக் கேலி உணர்வும் தென்படக் கேட்கின்றார்.

'உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன்?" என்பதில் தனது கவித்துவத்தை, புலமையை மறைமுகமாகக் கூறும் விதம்.

"என்னை விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ?" எனும் போது அரசனுக்கு (சோழனுக்கு) தன் தேசத்தில் சிறப்பு. கற்றோனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று தன்னை எந்த நாட்டு அரசனும் விரைந்து வந்து ஏற்றுக் கொள்வான் என்றும், அதற்கு உவமை ஒன்றைப் பயன்படுத்தி குரங்கு ஏற்றுக் கொள்ளாத கொம்பு உண்டோ? என்றும் தன் புலமையை வெளிப்படுத்துகிறான்.

இங்கு வினாத்தொகுப்பு முறையை அதிகம் கையாண் டுள்ளார். வினா இறுதி ஓகார இடைச் சொல்லானது எதிர் மறைப் பொருளைத் தருகிறது. அதாவது ஒவ்வொரு வினா விற்குமான விடையும், 'இல்லை' என்பதாக, எதிர்மறையாக அமைந்துள்ளது.

இவ்வாறாகத் தான் கூற வந்த விடயத்தை மேற் கூறிய வாறான முறைமைகளில் வெளிப்படுத்தியிருக்கிறார். இவற்றை விட, இத்தனை காலம் சோழ மன்னனுடன் இருந்தும் தனக்கு இத்தகையதொரு நிலைமை ஏற்பட்டு விட்டதெனும் ஒருவித விரக்தி வெளிப்பாடும் இப்பாடலில் இலேசாக இழை யோடிக் காணப்படுகிறது.

## காளமேகப் புலவர் பாடல் ஓடும் இருக்கும்..

காளமேகப் புலவர் "ஓடும் இருக்கும்..." என்ற பாடலூடாக வெளிப்படுத்த விழைந்த விடயம் யாது?

"இம்" எனும் முன்னே இரு நூறும் "அம்" எனும் முன்னே ஆயிரமும் கவிதை பாடக் கூடிய காளமேகப் புலவர் வசைக்கவி, சிலேடைக் கவிகளில் புகழ் பெற்றவர்.

ஒருமுறை, காளமேகப் புலவர் திருமலைராயன் என்ற சிற்றரசின் அவைக்குச் சென்ற போது அங்குள்ள புலவர்கள் அவரின் வித்துவத்தைச் சோதிக்கும் முகமாக, கேட்ட பல பாடல்களில், நாய்க்கும் தேங்காய்க்கும் சிலேடை கூறுமாறு கேட்ட பாடலும் ஒன்றாகிறது. இப்பாடல் மூலம் அவர் வெளிப்படுத்த விழைந்த விடயம் யாதெனில் நாய்க்கும் தேங்காய்க்கும் இடையிலான ஒற்றுமையைச் சிலேடையாகப் பாடுதல் என்பதாகிறது. ஆனாலும் இதனைவிட எந்தவகைப் பாடலையும், எப்போது கேட்டாலும்

தன்னால் உடனடியாகப் பாடிவிட முடியும் என்பதான வித்துவத் தன்மையைக் காட்டு வதாகவும் அமைந்துள்ளது.

**புலவர் கூற வந்த விடயத்தைக் கூறிய விதம்,** தேங்காய்க்கும், நாய்க்குமான ஒற்றுமையைச் சிறப்பான முறையில் சிலேடை யில் பாடிக் காட்டியி ருக்கிறார்.
ஓடும் இருக்கும் – தேங்காயில் ஓடும் இருக்கும் (அதாவது தேங்காயுடன் ஓடு இருக்கும். நாய் நன்றாக ஓடும் அவ்வாறே ஒரிடத்தில் இருக்கும்.
உள்வாய் வெளுத்திருக்கும் – தேங்காயின் உட்புறம் வெண்மையாக இருக்கும். நாயினுடைய வாயின் உட்புறம் வெண்மையாக இருக்கும்.
நாடுங்குலை தனக்கு நாணாது – தேங்காயானது குலையில் வளையாது இருக்கும்.

நாயானது யாராவது வந்தால் அவரை நாடும் விரும்பி நோக்கிய பின் குலைக்கும் (குரைக்கும்)

இவ்வாறாக நாய்க்கும், தேங்காய்க்கும் அழகிய சிலேடை ஒன்றை உடனடியாகப் பாடிக் காட்டிய விதம் தான் சொல்ல வந்த கருத்தை வெளிப் படுத்தும் முறையைக் காட்டுகிறது.

அத்துடன் உடனடி யாகப் பாடியமையானது தன்னுடைய கவித்துவத்தை உடனேயே மெய்ப்பித்துக் காட்டுவதாயும் உள்ளது.

# ரகசிய முத்திரைகள்

ஆர்ப்பரித்துக் கொட்டுகின்ற
அந்திப் பொழுதின்
மழைத் தூறலில்
என் வண்ணங்கள்
அழிந்து விட்டன.

சிரித்து
சிலாகிக்கும்
உன் உதடுகள்

இரவுகளின்
அந்தக் காரத்தில்
ஏதேதோ
பேசுகின்றன
ஏகாந்த
என் ரகசிய
முத்திரைகளை
வேவு பார்க்கின்றன.

வீழ்ந்து வெடிக்கும் ஆசை
எறிகணைகளின்
சலசலப்பில்
என் கவிதைக் காதலியின்
பாதங்கள்
ஓடி வருகின்றன.

முத்திரைகள்
முத்தங்களால்
முக்தி பெறட்டும்.

நெடுந்தீவு – யோகேஸ்

"பணமில்லாதவன் பிணம்" "பணமென்றால் பிணமும் வாய் திறக்கும்", "பணம் பத்தும் செய்யும்" என்பன பழமொழிகள். இந்த உலகத்தில் பணம் இல்லாமல் எதையும் செய்ய முடியாது. பணம் அவ்வளவு தூரம் மனிதனை ஆட்டிப் படைக்கிறது. பணத்தால் எதையும் சாதிக்க முடியும் என்பதை அடிப்படையாகக் கொண்டே இந்த பழமொழிகள் உருவாக்கப்பட்டன. கவிஞர்கள் கூட காசேதான் கடவுளடா என்று வர்ணித்துள்ளனர்.

ஒவ்வொரு குடும்பமும் சாதாரண வாழ்க்கை, சுகபோக வாழ்க்கை அல்லது ஆடம்பர வாழ்க்கை வாழ்வதற்கு இந்தப் பணந்தான் மூல காரணமாக உள்ளது என்பது அனைவரும் அறிந்த விடயம். வாழ்க்கைக்கு பணம் தேவைதான். ஆனால் "பணமே வாழ்க்கையாக" அமைந்து விடக்கூடாது. அளவான பணம் இருந்தால் அது எங்களைக்



# அளவான பணமும் அளவான பணக்காரரும்

காப்பாற்றும், ஆனால் பணம் அளவுக்கு அதிகமாக இருந்தால் அதை நாங்கள் காப்பாற்ற வேண்டியிருக்கும். மேலும் அதனால் எங்களுக்கு ஆபத்தும் அதிகமாக இருக்கும்.

எவ்வளவு அர்த்தம் நிறைந்த முதுமொழி. இந்த முதுமொழியை ஆராய்ந்து பார்க்கும் போது விடைகாண முடியாத ஒரு கேள்வி எல்லோர் மனதிலும் உருவாகும். அதாவது "அளவான பணம்" என்றால் அது எவ்வளவு? என்பது தான் அந்தக் கேள்வி. அந்தக் கேள்விக்கு எவராலும் சரியான விடைகளைக் கூற முடியாது.

சாதாரண வாழ்க்கை வாழும் ஒருவனுக்கு அளவான பணம் ஆயிரக் கணக்கிலும் ஓரளவு பணக்காரனுக்கு லட்சம் என்ற அளவிலும் கோடீஸ்வரன் ஒருவனுக்கு கோடிக் கணக்கிலும் அளவு கோலாக அமைந்து விடுகிறது. இதனால் அளவான பணத்தின் பெறுமதியை வரையறை செய்து கொள்ள முடியாது போய்விடுகிறது. ஒவ்வொருவரிடமும் உள்ள பணத்தின் அளவைக் கொண்டே அளவான பணத்தைத் தீர்மானிக்க வேண்டியுள்ளது.

கால்நூற்றாண்டு காலத்துக்கு முன்னால், ஒரு சில லட்சத்துக்கு சொந்தக்காரனாக இருந்தவனை லட்சாதிபதி என்று பெருமையுடன்

அழைத்தனர். இன்று லட்சாதிபதி என்ற சொல் மிகவும் சாதாரணமாகிவிட்டது. கணிசமாகி விட்டது. கணிசமான



வடவரணி சி.சபா

பல குடும்பங்கள் சில லட்சங்களுக்கு சொந்தக்காரராக இருந்த போதும் அவர்கள் ஏழைகளாகவே உள்ளனர். அவர்களிட மிருக்கும் சில லட்ச ரூபாய்களினால் ஒரு சாதாரண வீட்டைக் கூடக் கட்டிக் கொள்ள முடியாதுள்ளது. இன்று அன்பு பாசம் மனிதாபிமானம் யாவுமே பணப் பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிலையில் மனிதனுடைய ஒவ்வொரு சிறு நகர்வும் பணத்தையொட்டியே மேற்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு பயணமும் அதற்காகவே தயார் செய்யப்படுகிறது. ஏற்கனவே கொஞ்சம் பணம் சேர்த்துக் கொண்டவன், தன்னைவிடக் கூடுதலாகப் பணம் சேர்த்துக் கொண்டவனுடன் தன்னை ஒப்பீடு செய்து பார்க்கிறான். இதனால் தனக்கு தேவையான பணத்தின் அளவினை அவனால் வரையறை செய்து கொள்ள முடியாது போய்விடுகிறது.

ஆயிரம் வேண்டும். இலட்சம் வேண்டும் என அளவுக்கு அதிகமாக ஆசைப்படாது. தனது தகுதிக்கு ஏற்ப "இவ்வளவும் காணும்" என எதிர்பார்த்து வாழ்க்கையை அமைத்துக் கொள்ப வர்களே அளவான பணக்காரர்கள். இவர் கள் எங்கே, எப்படி இருந்தாலும் நிம்மதியாக இருப்பார்கள்.

அளவான பணத்தினை தீர்மானிக்கும் அல்லது வைத்திருக்கும் "அளவான பணக் காரர்கள்" மிகவும் குறை வாகவே உள்ளனர். இவர்கள் பணம் சேர்க்கும் முறைகள், சேர்த்த பணத்தைச் செலவிடும் வழிவகைகள் மற்றவர்களை விட வித்தியாசமானதாகவே இருக்கும். ஒருவனிடமி ருக்கும் பணத்தின் அளவு என்பது அவன் வங்கி மீதியைக் கொண்டோ, அல்லது அவனிடமி ருக்கும் அசையும்,

> ஒவ்வொரு குடும்பமும் சாதாரண வாழ்க்கை, சுகபோக வாழ்க்கை அல்லது ஆடம்பர வாழ்க்கை வாழ்வதற்கு இந்தப் பணந்தான் மூல காரணமாக உள்ளது என்பது அனைவரும் அறிந்த விடயம். வாழ்க்கைக்கு பணம் தேவைதான். ஆனால் "பணமே வாழ்க்கையாக" அமைந்து விடக்கூடாது. அளவான பணம் இருந்தால் அது எங்களைக் காப்பாற்றும். ஆனால் பணம் அளவுக்கு அதிகமாக இருந்தால் அதை நாங்கள் காப்பாற்ற வேண்டியிருக்கும்.

> எனக்குப் பணமோ வசதியோ தேவையில்லை என்று கூறிக் கொள்ள எவரும் இல்லை. பணத்தைக் தேடிக்கொள்ள நகரும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் எல்லை அல்லது வரையறை இருக்க வேண்டும். அத்துடன் பணம் தேடும் வழிமுறைகள் நேர்மையானவையாகவும், மனிதாபிமான மானவையாகவும் இருக்க வேண்டும்.

அசையாத சொத்துக்களைக் கொண்டோ சமூகம் தீர்மானிக்காது.

அசையாத சொத்துக்களைக் கொண்டோ சமூகம் தீர்மானிக்காது. அவன் பணம், அவன் சார்ந்த சமூகத்துக்கு பயன்படும் விதம் அது பயன்படும் அளவு, அதைத் தேடிக்கொள்ள அவன் பின்பற்றும் வழிமுறைகள் அவனது மனத்தின் அளவு என்பவற்றை அடிப்படையில் கொண்டே சமூகம் தீர்மானிக்கும்.

எனக்குப் பணமோ வசதியோ தேவையில்லை என்று கூறிக் கொள்ள எவரும் இல்லை. பணத்தைக் தேடிக்கொள்ள நகரும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் எல்லை அல்லது வரையறை இருக்க வேண்டும். அத்துடன் பணம் தேடும் வழிமுறைகள் நேர்மையானவையாகவும், மனிதாபிமானமானவையாகவும் இருக்க வேண்டும். இது பிற்போக்கான சிந்தனை என்றும் பழமைவாதிகளின் பல்லவி என்றும் பலர் நினைக்கலாம். ஆனால் மனித நேயமுள்ள அறிவாளி எவனுமே அப்படி எண்ண மாட்டான்.

ஒரு பிரபல திருடன் இப்படிக் கூறுகிறான். "திருடுவது தான் எனது தொழில். இதற்கென ஒரு கூட்டத்தையே நான் வைத்திருக்கிறேன். பணத்தைத் திருடும் எண்ணந்தான் என் மனதில் எப்போதும் இருக்கும். நான் ஒரு கொள்ளைக் கூட்டத்தின் தலைவன். அப்படியிருந்தும் "தன் வெற்றிலைக் கறைபடிந்த காவிப் பற்களைக் காட்டி தன் பச்சிளம் குழந்தையையும் கிழிந்த சேலையையும் தூக்கிக் காட்டி, பத்துப் பத்துச் சதமாகப் பத்து வீட்டில் பிச்சை எடுத்து வந்த பிச்சைக்காரியின் காசைத் திருடும் கேவலமான கள்வன் நானில்லை. அப்படியான பணம் எனக்குத் தேவையில்லை." (இங்கே ஒரு மனித நேயம் தெரிகிறது)

ஒருவன் தன் நண்பனிடம் சொல்கிறான். "நான் வசதியுடன் வாழ்கிறேன்" அவன் நண்பன் அவனை அதிசயமாகப் பார்க்கிறான். அவனைப் பற்றிய சகலதும் அவன் நண்பனுக்கு நன்கு தெரியும். அவனிடம் பெரிய வசதி எதுவும் இல்லை. வீடு கூட ஒரு சிறிய வீடுதான். மீண்டும் அவனை அதிசயத்துடன் பார்த்த போது, அவன் கூறுகிறான். "நீ ஒரு பத்தாயிரம் ரூபா பணந்தா, என்று என்னிடம் கேட்டால் தருவதற்கு என்னிடம் இல்லை. ஆனால்

உன்னிடம் பத்தாயிரம் ரூபா பணம் தா என்று கடன் வாங்காமல் நான் வசதியுடன் வாழ்கிறேன்" என்று. (இங்கு அளவான திருப்தி அவனிடத்தில் காணப்படுவதை அவதானிக்கலாம்)

யாழ் மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் வர்த்தகர் ஒருவர் இருந்தார். ஏதாவது ஒரு பொருளைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் போது, "ஒரு கண்ணியமான" சிறு இலாபத்தை வைத்தே விற்பனை செய்வார். ஏனையோர் வைக்கும் இலாப அளவை விட அது குறைவாகவே இருக்கும். திடீரென அப்பொருளின் விலை சந்தையில் அதிகரித்தால், ஏனையவர்கள் அந்த அதிகரிப்புக்கு ஏற்ப பொருளைக் கூட விற்பனை செய்தாலும் பழைய விலையில் கொள்வனவு செய்த கடைசி ஒரு பொருள் இருந்தால் அதைப் பழைய விற்பனை விலையிலேயே விற்பனை செய்வார். இது அவரின் போதும் என்ற மனநிலையைக் காட்ட உதாரணமாகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஒரு தேநீர்க்கடை உரிமையாளர் தனது கடையில் வந்து யாராவது ஒருவர் ஒரு தேநீர் குடித்தால் நிச்சயமாக அதற்குப் பணம் வாங்க மாட்டார். சரி நீங்கள் போங்கோ என்று கூறி விடுவார். தேநீருடன் சேர்த்து வடை, மோதகம், சூஸியம் ஏதாவது எடுத்தால் எல்லாவற்றுக்கும் சேர்த்துப் பணம் வாங்குவார். இது அவரின் கொள்கை. தனியே தேநீர் குடித்த ஒருவரிடம் எக்காரணம் கொண்டும் பணம் வாங்க மாட்டார்.

மேலே சொன்னவர்களுக்குப் பணத்தில் ஆசையில்லை என்பதல்ல. அளவான ஆசை மட்டுமே உண்டு. இவர்கள் தான் அளவான பணக்காரர்களுக்கு உதாரணமானவர்கள்.

குறைந்த சம்பளம் கொடுத்துக் கூடிய வேலை வாங்கும் கெட்டிக்காரப் புத்தி கொண்ட வர்த்தகர்களும், முதலாளிமார்களும் நன்கொடை, அன்பளிப்பு என்ற பெயரில் கையூட்டு (லஞ்சம்) பெற்றுக் கொள்ளும் அரச உத்தியோகத்தர்களும், செல்வாக்கு என்ற பெயரில் காரியங்களைச் செய்து கொடுத்து அதற்கு ஈடாகப் பணவடிவில் சந்தோசங்களைப் பெற்றுக் கொள்ளும் அரசியல்வாதிகளும் பணக்காரர்களாக இருக்க மாட்டார்கள்.

வாழத்தெரிந்த புத்திசாலிகளாகத் தங்களை நினைத்துக் கொண்டிருக்கும் இவர்கள் ஒருவேளை உணவுக்காக ஒருநாள் முழுவதும் உழைக்கும் குடும்பங்களின் நிலைமையை ஒருநாளும் உணரமாட்டார்கள்.

"போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்று கூறுவார்கள். இந்த மனம் எவருக்குமே இருப்பதில்லை. குறிப்பாக மேலே சொல்லப்பட்டவர்களுக்குக் கொஞ்சம் கூட இது இருப்பதில்லை.

ஆனால் நாள் முழுவதும் ஓய்வின்றி உழைத்து விட்டு மாலையில் தமக்குக் கிடைக்கும் சொற்ப கூலியைத் தம் இரு கைகளையும் நீட்டிப் பணிவுடன் வாங்கும் நாளாந்தக் கூலிகளுக்கு (அன்றாடம் காய்ச்சிகளுக்கு) மட்டுமே இந்த மனம் சொந்தமானதாகும். அவர்களுக்கும் தாம் பெறும் இச் சொற்ப கூலி போதாது தான். இருப்பினும், "இப்போதைக்கு இது போதும்" என்று திருப்திப்படும் நிலையில் உள்ளார்களே, அதுவே போதும். இப்போது அளவான பணத்தையும், அளவான பணக்காரர்களையும் நாம் ஓரளவேனும் புரிந்து கொள்ள முடியும்.

## மருத்துவக் குறிப்புகள்

- வெந்நீரில் வேம்பு இலையைப் போட்டுக் குளித்தால், சொறி, சிரங்கு, ஒவ்வாமை (அலர்ஜி) ஆகியன நீங்கும்.
- எலுமிச்சம் பழச்சாற்றுடன், சம அளவில் துளசிச்சாறு சேர்த்து முகத்தில் தடவி வந்தால் தேமல் துரிதமாக மறைந்துவிடும்.
- வாரம் ஒரு முறை ஒரு மூடித் தேங்காயில் பாலெடுத்துத் தலையில் மயிர்க்காலில் படும்படி நன்றாகத் தேய்த்து ஊறிய பிறகு குளித்து வந்தால் தலை முடி கொட்டாது.
- தீப்புண்களுக்கு முள்ளங்கியை அரைத்துப் போட்டால், நீர் வடிவது நின்று விடும். உள் காயமும் ஆறிவிடும்.
- காய வைத்த வெந்தயத்தைப் பொடியாக்கி வைத்துக் கொள்ளுங்கள். ஒரு டம்ளர் காய்ச்சி ஆறிய தண்ணீரில் ஒரு ஸ்பூன் பொடியைச் சேர்த்துக் கலக்கி அருந்துங்கள். தினமும் பருகி சர்க்கரை நோயை விரட்டுங்கள்.
- கரட், பீற்ரூட் கிழங்குகளை சம அளவு சேர்த்து சூப் வைத்துப் பருகி வர, நோயிலிருந்து மீண்டவர்கள் விரைவாக சுறுசுறுப்படைவார்கள்.
- இஞ்சியைத் துண்டுகளாக்கி, தேனில் ஊற வைத்து சாப்பிட பித்தம் நீங்கும்.
- இரவு உறக்கம் வராமல் தவிப்பவர்கள், ஒரு கப் சூடான பாலில் சிறிதளவு தேன் கலந்து பருக தூக்கம் வரும்.

# ஓவியமும் சிற்பமும், ஒன்றிணைந்த அம்மணமும்

சி.ச.பாரத்தி

ஓவியமும் சிற்பமும் எமது பாரம்பரியக் கலைகளாகும். ஓவியமும், காவியமும் எமது இரு கண்களாகத் திகழ்வது போல, ஓவியமும் சிற்பமும் ஒரு தாயின் இரட்டைக் குழந்தைகள் போலத் திகழ்கின்றன. இவற்றை நிலை நிறுத்தி வைப்பதற்கு உதவியாக இதனுடன் இணைந்து கொண்ட கட்டிடக்கலை காணப்படுகின்றது. கட்டிடக்கலை இவ்விரு இரட்டைக் குழந்தைகளின் தந்தையாகவும் விளங்குகிறது. ஏதாவது ஒரு உருவத்தை அல்லது காட்சியைத் துல்லியமாக வெளிப்படுத்தும் ஒரு உன்னதமான கலையாக ஓவியமும் சிற்பமும் காணப்பட்ட போதும், இரு கலைகளுக்குமிடையில் பல வேறுபாடுகள் இருப்பதை நாம் நன்கு அவதானிக்கலாம்.



ஓவியம் என்பது ஒரு உருவத்தின் அல்லது ஒரு காட்சியின் ஒரு பக்கத்தை மட்டுமே வெளிப்படுத்தும். அதாவது ஒரு பெண்ணின் முன் பக்கத்தை ஓவியமாகத் தீட்டினால் அவளின் பின் பக்கத்தைக் காணமுடியாது. அப்படிக் காணவேண்டுமாயின் அவளின் பின்பக்கத்தை இன்னொரு ஓவியத்தில் வரைய வேண்டும். எனவே காட்சியின் ஒரு பக்கத்தை மட்டுமே ஓவியம் வெளிப்படுத்தும். ஒரு பக்கத்தை மட்டுமே வியந்து கூறுவதினால் தான் "ஓவியம்" என்ற பெயர் கூட ஏற்பட்டிருக்கலாம்.

ஓவியத்தை சுவர்களில் அல்லது மதிலில் வரையலாம். ஆதிகாலத்தில் மதில்களிலும் கற்குகைகளிலும் ஓவியங்களை வரைந்தனர். தற்போது பேப்பர், பலகைகள், காட்போட் மட்டை



கள், உலோகத்தகடுகள், அல்லது புதிய கலவைகளின் சேர்க்கையினால் உருவாக்கப்பட்ட தட்டையான வட்டமான உபகரணங்களிலும் ஓவியங்களை வரைகின்றனர். ஓவியங்களை நீண்ட காலம் நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காகவே கற்குகைகளில் வடித்தனர். இதற்கு ஆதாரமாக இந்தியாவின் "அஜந்தா" குகை ஓவியங்களையும் இலங்கையின் "சிகிரியா" குகை ஓவியங்களையும், குறிப்பிடலாம். இவ்விடயத்தில் அந்த ஓவியங்களில் தமது திறமைகளையும், அதன் கலை அம்சங்களையும் ஓவியர்கள் வெளிப்படுத்தினார்களே, தவிர தமது சுயவிபரங்களை அவர்கள் வெளிக்காட்டவில்லை என்பது பெருமைக்குரிய விடயமாகும். ஏனெனில் அந்த அருமையான ஓவியங்களை வரைந்தவர்கள் அல்லது தீட்டியவர்கள் யார்? என்பது இன்று வரை அறிந்து கொள்ள முடியாதுள்ளதுவே அதற்குச் சான்றாகும்.

ஓவியங்களின் சிறப்புகளுக்கு உலகநாடுகளைச் சேர்ந்த பலவேறு ஓவியங்களை நினைவு கூர் வேண்டியுள்ளது. உலகப்பிரசித்தி பெற்ற "மோனாலீசா" ஓவியத்தை வரைந்தவர் உலகப்புகழ் பெற்ற "லியோ நடோ டாவின்சி" ஆவார். இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த "வான்கா" (VANGOGH) ஓர் பிரபல ஓவியர். இந்தியாவைச் சேர்ந்த "ரவிவர்மன்" ஆகியோரின் ஓவியங்கள் பிரபல்யம் வாய்ந்தவை.

உலகத்தின் "ரட்சகர்" யேசுபிரான் இறுதி இராப்போசன விருந்தின் போது "யூதாஸ்" என்ற சீடனால் காட்டிக் கொடுக்கப்பட்டார். இந்த இராப்போசன விருந்துக்காட்சி கிறிஸ்தவர்கள் மத்தியில் சிறப்பு வாய்ந்தது. இக்காட்சியன் பிரதிபலிப்பைப் பல்வேறு விதமான ஓவிய வடிவில் வரைந்துள்ளனர். இக்காட்சியின் ஓவியத்தை வரைந்து தருமாறு ஒரு அதிகாரி "டாவின்சி" யைக் கேட்டிருந்தார். உரிய காலத்தில் ஓவியத்தை ஒப்படைக்கத் தவறியதால் அதிகாரி கோபமடைந்து அதை வாங்கி வருமாறு தனது ஏவலாளை அனுப்பினார். ஓவியத்தைக் கொடுக்காது டாவின்சி கீழ்வருமாறு பதில் அனுப்பினார்.

"ஓவியத்தின் பெரும் பகுதி முடிந்து விட்டது யூதாஸின் முகம் மட்டும் வரைவதில் தாமதமேற் பட்டுள்ளது. யூதாஸ் யேசுவைக் காட்டிக்கொடுக்கும் துரோகத்தை செய்யப் போகிறான். அவன் முகத்தில் சந்தோஷமில்லை. துரோகமே மேலோங்கியுள்ளது. மேலும் பயம், மரணபீதி, துரோகம், தயக்கம் போன்ற உணர்வுகள் மேலோங்கியுள்ளன. இவை வெளிப்பட்டுவிடக்கூடாது என அவற்றை அடக்கி வைத்திருக்கிறான். இத்தனை உணர்ச்சிகளும் அவன் முகத்தில் பிரதிபலிக்கக் கூடியவாறு அந்த முகம் அமைய வேண்டும். எனவே அவன் முகத்தை வரைய கொஞ்சம் கால அவகாசமே தேவைப்படுகிறது. அப்படியில்லை உடனே ஓவியம் தேவையாயின் யூதாஸின் முகத்துக்குப் பதிலாக உங்கள் அதிகாரியின் முகத்தை வரைந்து தர சம்மதமா? என்று கேட்டுவா"

"ஓவியத்தின் பெரும் பகுதி முடிந்து விட்டது யூதாஸின் முகம் மட்டும் வரைவதில் தாமதமேற்பட்டுள்ளது. யூதாஸ் யேசுவைக் காட்டிக்கொடுக்கும் துரோகத்தை செய்யப் போகிறான். அவன் முகத்தில் சந்தோஷமில்லை. துரோகமே மேலோங்கியுள்ளது. மேலும் பயம், மரணபீதி, துரோகம், தயக்கம் போன்ற உணர்வுகள் மேலோங்கியுள்ளன. இவை வெளிப்பட்டு விடக்கூடாது என அவற்றை அடக்கி வைத்திருக்கிறான். இத்தனை உணர்ச்சிகளும் அவன் முகத்தில் பிரதிபலிக்கக் கூடியவாறு அந்த முகம் அமைய வேண்டும். எனவே அவன் முகத்தை வரைய கொஞ்சம் கால அவகாசமே தேவைப்படுகிறது. அப்படியில்லை உடனே ஓவியம் தேவையாயின் யூதாஸின் முகத்துக்குப் பதிலாக உங்கள் அதிகாரியின் முகத்தை வரைந்து தர சம்மதமா? என்று கேட்டுவா" இந்த செய்தி அதிகாரியின் செவிக்கு சென்ற பின்னர் தான் ஓர் ஓவியத்தை வரைவதிலுள்ள கஷ்டமும் அதன் மகிமையும் அதிகாரிக்கு தெரிய வந்தது. ஒரு பெண் குளித்து விட்டு ஈரம் தோய்ந்த உடையுடன் வெளியே வருகிறாள். ஈரம் தோய்ந்த உடையினூடாக அவளின் அங்கங்கள் தெரிகின்றன. இந்த ஓவியத்தை சாதாரணமாக வரைய முடியாது சிந்தித்துப் பார்த்தால் நன்கு விளங்கும்.

இதில் சிற்பக்கலையை எடுத்துக்கொள்வோம் ஓவியக்கலையில் ஒருபக்கத்தை மட்டும் பார்க்கும் எமக்கு சிற்பக்கலையில் எல்லாப்பக்கத்தையும் பார்க்கும் வாய்ப்பு உண்டு. உதாரணமாக சிற்பத்தில் "சிங்கம்" ஒன்று செதுக்கப்பட்டு அல்லது வடிக்கப்பட்டிருந்தால் சிங்கத்தின் வாய் பின்புறம் வயிற்றுப் பக்கம் என எல்லாப் பக்கத்தையும் பார்க்க முடியும்.

சிற்பம் ஒன்றை ஒரு கல்லில், அல்லது மரக் குற்றியில் ஏனைய உலோகங்களில் செதுக்கலாம், அல்லது வடிக்கலாம்.

பெரும்பாலான சிற்பங்கள் கட்டிடக்கலையுடன் இணைந்தே காணப்படுகின்றன. இதற்கு உதாரணமாக தமிழ் நாட்டிலுள்ள இந்து ஆலயங்களையும், இலங்கையிலுள்ள இந்து ஆலயங்களையும் கொள்ளலாம். இந்த ஆலயங்களின் கோபுரங்களை அவதானித்தால் இதனுடன் இணைந்துள்ள கட்டிடக்கலையின் சிறப்பையும் உணர்ந்து கொள்ளலாம்.



சிற்பக் கலையின் தாய் வீடு இந்தியா என்று தான் கூற வேண்டும். வட தென் நாட்டு ஆலயங்கள் இக்கலையின் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றன. பல்லவர் காலம் சிற்பக்கலைக்கு உயிர் கொடுத்தது. மாமல்லபுரத்து சிற்பங்கள் மலைக்குன்றுகளிலும், மலைக் குகைகளிலும் வடிக்கப்பட்ட சிற்பங்கள். அபூர்வமானவை. மதுரை மீனாட்சி அம்மன் கோயில், ராசராசசோழனினால் கட்டப்பட்ட தஞ்சைப் பெரிய கோவில், அதன் ராஜகோபுரத்தில் அமைக்கப்பட்ட சிற்பங்கள் இக்கலையின் சிறப்பை வெளிக் காட்டுகின்றன.

உலகில் உயரமான ராஜகோபுரங்கள் திருவரங்கத்திலும், (ஸ்ரீரங்கம்) அதனை அடுத்த திருவண்ணாமலையிலும் அமைந்துள்ளன. மிகவும் தொன்மை வாய்ந்த கோபுரம் காஞ்சிபுரம் கைலாசநாதர் ஆலயத்திலும் அமைந்துள்ளது. இது பல்லவர் காலத்தில் கட்டப்பட்டது. திருவரங்கக் கோபுரம் 236 அடி உயரத்தையும் கொண்டது. இக் கோபுரங்களில் கட்டிடக்கலையுடன் ஒன்றிணைந்த சிற்பக்கலையின் சிற்பங்கள் அனைவரையும் கவர்ந்தவை.

கோபுரம் ஒன்றில் காணப்படும் எண்ணற்ற சிற்ப வடிவங்கள் எமக்குப் பல பாடங்களைப் புகட்டுகின்றன. இந்துப் பண்பாட்டினையும் அதன் மரபுகளையும் தழுவிய ஓவியம் சிற்பம், நடனம் போன்ற கலை அம்சங்களை வெளிப்படுத்துவதுடன் பிரபஞ்சத்தில் அடங்கியுள்ள மக்கள் விலங்குகள் மற்றும் உயிரினங்களின் வடிவங்களையும், புராணக்கதைகளையும் வரலாற்றுக் கதைகளையும் அடியொற்றிய தேவர், முனிவர், தவசிகளின் பெருமைகளையும், இறைவன் திருவிளையாடல்களையும் சிற்பங்களில் காணலாம். எமது ஆன்மீக, தெய்வ சிந்தனைகளுக்கு வலுவூட்டுகின்ற இக் கலைகள் அழிந்து விடாது பாதுகாக்கும் இடமாக கோவில் ராஜகோபுரங்கள் விளங்குவதை யாராலும் மறக்க முடியாது.




இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட பல சிற்ப ஓவிய கலைஞர்களின் வண்ணத்தை யொட்டி இலங்கையிலும் தமிழர் வாழ் பகுதிகளில் பல்வேறு கலைஞர்களின் உருவாக்கமும், இன்று கோபுரமாக உயர்ந்து நிற்கும் இந்து ஆலயங்கள் அனைத்திலும், பிரதிபலிப்பதை நாம் கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது.

இதைவிட கட்டிடக் கலையுடன் ஒன்றிணையாத தனித்துவமாக மிளிரும் சிற்ப வடிவங்களையும் நோக்கலாம். மரங்களில் அல்லது எடுக்கப்பட்ட குற்றிகள் பலகையில் சிற்பம் செதுக்குதல், கோவில்களில் காணப்படும். வாகனங்கள் (மயில், காராம்பசு, நந்தி) சித்திரத்தேர்கள் என்பவற்றை உருவாக்கியுள்ளனர்.. இவர்களை நாம் "ஆசாரியார்கள்" என்று அழைக்கிறோம். இவர்களும் மாபெரும் சித்திரக்கலைஞர்களே. பிரபல்யம் வாய்ந்த இந்து ஆலயங்களில் சித்திரத்தேர்களில் அந்த ஆலய வரலாறு, அந்த தெய்வத்தின் மகிமை என்பன சித்திரமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு உதாரணமாக நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் சித்திரத்தேரைக் குறிப்பிடலாம்.

இக்கலைஞர்களின் சிறப்பான உயிரோட்டம் நிறைந்த ஓவியங்கள் சிற்பங்களில் அரைகுரை நிர்வாணமாகவும், முழு அம்மணமாகவும் படைக்கப்பட்டுள்ளமை அனைவராலும், கண்டனத்துக்குட்பட்டும் விமர்சனத்துக்குட்பட்டும் இருக்கும் நிலை அனைவரையும் சிந்திக்கத் தூண்டுவதில் வியப்பில்லை. இக் கலைஞர்கள் "காமுகரசனை" மேலோங்கியவர்கள் என்பதும், அதற்காகவே தங்கள் படைப்புக்களை "அம்மணமாக" வடித்தனர் என்பதும் பலரின் வாதம். மேலும் வழிபாட்டுத் தலங்களில் கூட தெய்வங்களின் சிற்பங்களை நிர்வாணமாக வடித்துள்ளனர் எனப் பலர் குறைப்பட்டுக் கொள்வதை அவதானிக்க முடிகிறது.

இக்கலைஞர்கள் தனித்துவமானவர்கள். திறமை கற்பனா சக்தி மதிநுட்பம் நிறைந்தவர்கள். ஏனையோரால் மதிப்பளிக்கப் பட்டு கௌரவிக்கப்பட்டவர்கள். சுய விளம்பரத்தை எதிர்பாராது தாம் அழிந்தாலும் தமது கலைப்படைப்புக்கள் அழிந்துபோகக் கூடாது என்ற எண்ணக்கருவுடன் வாழ்ந்த உயரிய சிந்தனை யாளர்கள். அப்படியான இவர்கள், ஏன் ஓவியங்களையும் சிற்பங்களையும் அரைகுரை நிர்வாணமாகவும் அம்மணமாகவும் வரைந்தார்கள்? அதற்கு வலுவான காரணங்கள் இல்லாமல் இல்லை.



தாம் வடிக்கும் கலைப் படைப்புக்களை "காலம்" அழித்து விடக்கூடாது என்பது தான் காரணம். நாகரிக மாற்றத்துக்குட்பட்டு அவற்றின் "மகத்துவம்" இழக்கப் படக் கூடாது உதாரணம் "சிவனின்" சிலைக்கு ஒரு வேட்டியையோ "உமையின்" சிலைக்கு குட்டைப் பாவாடையையோ அணிவித்தால் அக்கால உடையின் நாகரிகம் மாறிவிட்டால் அச்சிலைகளை யாரும் திரும்பிப்பார்க்க மாட்டார்கள். நாகரிகத்துக்குட்பட்டு சிற்பங்களின் மகத்துவம் அழியாதிருக்க வேண்டுமாயின் சிற்பங்கள் அம்மணமாகவே வடிக்கப்படவேண்டும். அம்மணம் எந்த மாற்றத்துக்கும் உட்படாதது "அம்மணம் என்றும் அம்மணமே" இதை சற்று வித்தியாசமாக சிந்தித்தவர்கள் இடைக்கச்சை, மார்புக் கச்சை என்பவற்றை அணிவித்து திருப்தி அடைந்து கொண்டனர்.

இப்படைப்புக்களை காமுகரசனையோடு பார்த்தவர் களுக்குத் தான் அம்மணம் அசிங்கமாகத் தெரிந்ததே தவிர கலைரசனையோடு பார்த்தவர்களுக்கு அம்மணமும் அழகாகவே தெரிந்தது. கிராமப் புறங்களில் சொல்லுவார்கள் "கல்லைக் கண்டால் நாயைக்காணோம். நாயைக் கண்டால் கல்லைக் காணோம்" என்று. அதாவது, நாயைக்கல்லால் எறிவதற்கு ஒன்றிருக்கும் போது ஒன்றில்லை என்ற அர்த்தத்துடன் சொல்வார்கள். ஆனால் உண்மையான அர்த்தம் அதுவல்ல. ஒரு நாயின் சிற்பத்தை அழகாக கல்லில் செதுக்கி வைத்திருக்கிறான் ஒரு கலைஞன். கலைரசனை அற்றவன் அதைப்பார்க்கும் போது கல்லைத்தான் காணுவான். நாயைக்காண மாட்டான். ஓர்



கலைரசிகன் அதைப் பார்க்கும் போது நாயை மட்டும் தான் காணுவான் கல்லைக்காண மாட்டான் இது தான் அதன் உண்மையான அர்த்தம்.

எனவே ஓவியத்துக்கும் சிற்பத்திற்கும் அம்மணமே ஒத்துப்போனதே தவிர, அம்மணத்தை வெளிக்காட்ட வேண்டும் என்பதற்காக ஓவியமும் சிற்பமும் வடிவமைக்கப்பட்டவில்லை என்பதுதான் உண்மையான நிலையாம்.



# எங்கெங்கு காணினும்....

பேராசிரியர் மா. சின்னத்தம்பி

## சமுதாயப் பெருஞ்சாலையில்....

சமுதாயம் என்பதும் ஒரு ஓய்வொழிவற்ற பெருஞ்சாலைதான். பெரிய சாலைகளில் பல வகையான மனிதர்கள் பல தேவைகளுடன் பயணிக்கின்றனர். பல இலக்குகளை நோக்கி வேகமாகவும், மெதுவாகவும் செல்கின்றனர். பல மாதிரி வசதிகள், நாட்டங்கள், உணர்வுகளுடன் தொடர்ந்து பயணிக்கின்றனர்.

நெருக்கடியான சந்தை, இறக்குமதி அப்பிள் பழங்கள், மேசை மீது கடதாசி சுற்றிக் கவனமாகக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. எங்கள் உள்ளூர் உற்பத்தியான காய் கறிகள் நிலத்தில், சுத்தமில்லாத ஈரநிலத்தில் குப்பைகள் அகற்றப்படாத நிலத்தில் குவிக்கப்பட்டுள்ளன.

சில சமயங்களில் மிக அதிக நெரிசலும் பரபரப்பும் தென்படுகிறது. சில சமயம் சாலையெல்லாம் ஓய்ந்தது போல் பலவீனமானவர்களும், பாதுகாப்பில்லாதவர்களும் வீதியோரம் உறங்குகின்றனர், ஓய்வு கொள்கின்றனர்.

சில காட்சிகள் தினமும் தென்படுகின்றன. நாம் பார்க்கிறோம், உணர்கிறோம், வெறுக்கிறோம். ஆனால் கருத்தை வெளிப்படுத்த வில்லை. அந்த உரிமை, பழக்கம், துணிவு, சமுதாயப் பொறுப்பு.... நாம் சரியாக எமது பொறுப்புக்களை வெளிப்படுத்துகிறோமா?

நெருக்கடியான சந்தை, இறக்குமதி அப்பிள் பழங்கள், மேசை மீது கடதாசி சுற்றிக் கவனமாகக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. எங்கள் உள்ளூர் உற்பத்தியான காய்கறிகள் நிலத்தில், சுத்தமில்லாத ஈரநிலத்தில் குப்பைகள் அகற்றப்படாத நிலத்தில் குவிக்கப்பட்டுள்ளன.

"ப்ளிச்" ஒருவர் தனது வாயிலுள்ள வெற்றிலைக் கரைசலை அதனருகில் துப்பி விட்டு மிகவும் மகிழ்ச்சியுடன் போகிறார். ஒரு பகுதி நிலத்தையும் மறுபகுதி காய்கறி நிறைந்த உரப்பைப் பொதிகளையும் சிவப்பாக்கி விடுகின்றது. வயது போன வறிய மூதாட்டி வெறுங்காலுடன் அதனை மிதித்து விட்டு அருவருப்புடன் கடந்து செல்கிறார். துப்பியவரும், மிதித்தவரும் இந்த நாட்டின் குடிமக்கள் தான்.



இருவருமே நாட்டுக்கு மறைமுக வரி செலுத்துபவர்கள் தான்.

சந்தைகளின் நடைபாதைகள், சுவர்கள், குறுகிய சந்துகள், வாகன நிறுத்து மையங்கள் இப்படி எங்கெங்கு காணினும் எச்சில் துப்பல்கள், துப்பிய சளிகள், வெற்றிலைச்சாய புரட்சி வண்ணங்கள்.

வீதியில் ஒரு இளைஞர் சைக்கிளில் சரத்துடன் செல்கிறார் சிகரட் புகைத்தபடி. காலைவேளை பள்ளிக்கு பெண்பிள்ளைகள் வெண்புறாக்களாகக் குளித்து பளிச்சென்ற வெள்ளுடைகளுடன் அவர்களின் பின்னால் மகிழ்ச்சியுடன் சைக்கிளில் சாரி சாரியாக செல்கிறார்கள்.

முன்னே சென்ற இளைஞன் திடீரென வீதியின் மையம் நோக்கி "ப்ளிச்" சென்று காறித்துப்புகிறார். சிதறல் நீர்ப்பாசனக்கருவி போல் அவரது வாய் எச்சிலை பலதூரம் பரவச் செய்கிறது. மாணவிகளின் உடையெல்லாம் எச்சில் துப்பல், சளித்திரட்சிகள். அவர்களது முகங்களில் வெறுப்புணர்வுகள், வேதனைகள். இளைஞரோ தனது சமுதாயக் கடமையொன்றை அதிகப் பொறுப்புணர்ச்சியுடன் நிறைவேற்றியது போல மிக நிதானமாக - மகிழ்ச்சியாக - சாவதானமாகச் சென்று கொண்டிருக்கிறார். மாணவிகளின் மனம் வெதும்புகிறது. முகம் சுருங்குகிறது. சைக்கிளால் இறங்கி தமது கைலேஞ்சிகளால் துடைக்கின்றனர். இப்போது யூனிபோம், லேஞ்சி அவர்களது கைவிரல்கள் எல்லாமே எச்சில் பரவல். அவர்கள் வீடு திரும்ப முடியாது. இன்னும் ஏழு மணித்தியாலம் பொறுப்பற்ற தேசியக் குடிமகன் ஒருவரின் துப்பல் பணியின் எச்சங்களுடன் அவர்கள் காலம் கழிப்பர். ஏனெனில் அவர்களும் எமது சமுதாயப் பிரஜைகள்.

பஸ் வண்டியில் பலர் பயணம் செய்கிறார்கள். சந்தியில் நெரிசல் காரணமாகப் பஸ் வண்டியின் வேகம் தணிகின்றது. சன்னல் கண்ணாடியின் கதவைத் தள்ளித் திறந்த நடுத்தர வயது மாது தனது வாயில் குதப்பி வைத்திருந்த வெற்றிலைச் சாற்றையும் குதப்பல்களையும் ஒரு சேர வெளியே துப்பிவிடுகிறார். பின்னே - பஸ் வண்டியின் அருகே ஒரு இளம்தாய் பெண்களுக்கான மோட்டார் வண்டியில் முன்பள்ளிக்குத் தனது நான்கு வயது மகனை ஏற்றிச் செல்கிறார்.

தாயினதும், சிறுவனதும் தலையெல்லாம் சிகப்பு வண்ணத் துப்பல்கள், பஸ் வண்டி வேகமாகச் சென்று விடுகிறது. தாயின் முகத்தில் வெற்றிலைச் சாயமும் கோப உணர்வின் முகச்சிகப்பும் ஒன்றிணைகின்றன. யாரிடம் சொல்வது? யாரிடம் தண்டம் கேட்பது? யாரிடம் நியாயம் கேட்பது?

அப்போது சுகாதார அமைச்சின் வாகனமொன்று ஒலி பெருக்கியில் அதிக சத்தத்துடன் "உங்கள் வீடுகளைச் சுத்தமாக வைத்திருங்கள். டெங்கு பரப்பும் நுளம்பைக் கட்டுப்படுத்துங்கள். நுளம்பைக் கட்டுப்படுத்தாவிடில் ஐம்பதினாயிரம் ரூபா வரை தண்டம் அறவிடப்படும், இது உங்கள் நகரம், உங்கள் வாழிடம், சுத்தமாக பராமரியுங்கள்."

வாகனம் ஒலி எழுப்பியபடியே சென்று மறைகிறது.

நுளம்பு மாத்திரமா எதிரி?

நுளம்பை மாத்திரம் ஒழித்தால் போதுமா?

மனிதர்களின் பொது இடப் பழக்கங்கள், உணர்வுகள், நடத்தைகள் எவ்வாறிருக்கின்றன? சமுதாயச்சாலை அசுத்தமாவதா? இது நாகரிக நடத்தையா?

> நுளம்பு மாத்திரமா எதிரி? நுளம்பை மாத்திரம் ஒழித்தால் போதுமா? மனிதர்களின் பொது இடப் பழக்கங்கள், உணர்வுகள், நடத்தைகள் எவ்வாறிருக்கின்றன? சமுதாயச்சாலை அசுத்தமாவதா? இது நாகரிக நடத்தையா?

பொது இடசுத்தம், சுத்தமான பழக்கம், மற்றவர் பற்றிய உணர்வு, சுய கட்டுப்பாடு, சுயநேர்மை இவை பற்றி யார், யாருக்கு, எப்படிப் போதிப்பது?

தொண்டு நிறுவனங்களும், பள்ளிகளின் மாணவ அமைப்புக்களும் சமுதாய வீதியில் இறங்கினால் என்ன?

பொது இடத்தில் துப்பாதே!

உனது குழந்தைகளை மதிக்கப்பழகு!

சகமனிதனை அசுத்தப்படுத்தாதே!

சுத்தமான பழக்கங்களை வீதியில் பின்பற்று!

இந்த உணர்வுக் கோஷங்களை யார் உரத்துச் சொல்வார்கள்? எப்போது, எப்படிச் சொல்வார்கள்?

# மூலிகைச் சத்துக்கள்

## 1. மிளகுச் சத்து

**தீரும் நோய்கள்** :- சுரம், சளி, கிருமி, அஜீரணம், விடம், வாயு, வாதம், தோல்நோய், தெய்வு நோய் தீரும், பசி அதிகரிக்கும்.

## 2. வேம்பம் பட்டைச் சத்து

**தீரும் நோய்கள்** :- கிருமி, தோல் நோய்கள், விசம், காய்ச்சல், மலேரியா, பாண்டு கரப்பான் குட்டம், தேமல் தீரும்.

## 3. இஞ்சிச் சத்து

தீரும் நோய்கள் :-

வயிற்றுக் குத்து, நெஞ்சுக் குத்து, குத்துளைவு, வாயுபிடிப்பு, அஜீரணம், வாதநோய், கபநோய், சளி முட்டு, இளைப்பு, பித்தநோய், சன்னி, சத்தி, காய்ச்சல், வலி, விக்கல் தீரும்.

## 4. ஏலச் சத்து

தீரும் நோய்கள் :-

பசியின்மை, வயிற்று வாயு, பிரட்டு, பொருமல், சத்தி, ஓங்காளம், பித்த நோய்கள், சளி, இருமல், தலைநோய் தீரும்.

இலங்கையை ஆண்ட இராவணன், இராமனின் மனைவி சீதையைக் கவர்ந்து சென்று சிறைப்படுத்தி வைத்திருந்தான்.

சீதை எங்கே வைக்கப்பட்டிருக்கிறாள் என்பதைக் கண்டுபிடித்து வருவதற்கு ஏற்றவன் அனுமன்தான் என்று இராமன் முடிவு செய்தான்.

அதற்குக் காரணம் அனுமனுக்கிருந்த வீரமும் உடல் வலிமையும் மட்டுமல்ல, அவன் எதையும் முழுமையாக – உளமாரச் செய்யும் குணமும் படைத்தவன் என்பதுதான்.

எந்த நோக்கத்திற்காக அனுமன் அவ்வாறு அனுப்பப்பட்டானோ, அதை அவன் முடித்து விட்டான். ஆம், அனுமன் சீதை இருந்த இடத்தைக் கண்டுபிடித்து விட்டான்.




அவன் திரும்பிச் செல்ல இருந்தபோது, சீதை இருந்த அந்த அசோக வனத்தில் சீதையைக் காவல் புரிந்து கொண்டிருந்த அரக்கிகள், சீதையுடன் உரையாடிக் கொண்டிருந்த அனுமன் வெறும் சாதாரணக் குரங்கு அன்று என்று சந்தேகித்தனர்.

உடனே இது பற்றி, இராவணனுக்குத் தெரியப்படுத்தினர், அனுமன் சிறைப்பிடிக்கப்பட்டு, அவன் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான்.

அனுமனை, இராவணன் விசாரித்தபோது, தான் வந்த நோக்கத்தைப் பற்றி அனுமன் விரிவாக விளக்கியதோடல்லாமல், இராமனின் பெருவீரத்தையும் ஈடு இணையற்ற ஆற்றலையும் எடுத்துச் சொல்லி, சீதையை இராமனிடம் திருப்பியனுப்பிவிடுமாறு இராவணனுக்கு அறிவுரையும் கூறினான்.

இதைக் கேட்டதும் இராவணனுக்குக் கடுங்கோபம் ஏற்பட்டது. இராமனின் வீரம், ஆற்றல் இவை பற்றி அனுமன் கூறக் கேட்டபோதே, இராவணனுக்குக் கடுஞ்சினம் இயற்கையாகவே ஏற்பட்டது. அதோடன்றி, அனுமன் தனக்கு அறிவுரையும் கூற முற்பட்டதனால், இராவணன் கொதித்தான்.

ஒரு குரங்கு, தனக்கு அறிவுரை கூறுவதை இராவணனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனவே இந்தக் குரங்கைக் கொன்றுவிட ஆணையிட்டான்.

அதுபோது, விபீடணன் தலையிட்டுக் கேட்டுக் கொண்டதன் பேரில், கொலைத் தண்டனை குறைக்கப்பட்டது. அனுமனின் வாலுக்குத் தீ வைக்குமாறு ஆணையிட்டான், இலங்கை வேந்தன்.

"கோபம் கொண்ட எவன் தான் பாவச்செயலைச் செய்யாதிருப்பான்? கோபம் கொண்ட ஒருவன் தன் மூத்தவர்களைக் கூடக் கொன்று விடுவானே! அவனால் வசை மொழி எதுவும் கூறாமலும் இருக்கமுடியாதே. எவனொ ருவன் தன் உள்ளத்தில் பொங்கியெழும் கோபத்தை மிகுந்த பொறுமை யினால் விரட்டியடிக்கிறானோ, அவனே உண்மையில் மனிதன் ஆவான்!"

இதைக் கேள்வியுற்ற சீதை, இத் தீயினால் அனுமனுக்கு தீங்கு ஏதும் ஏற்பட்டு விடக்கூடாதென்று பிரார்த் தித்தாள். அதனால் அனுமனுக்கு எதுவும் நேராமல் அந்தப் பிரார்த்தனை, அவனைக் காப்பாற்றியது.


ஆனால், தூதுவனாக வந்த தனக்கு இவ்வாறு செய்யப் பட்டதைக் கண்டு கடுங்கோபம் கொண்ட அனுமன், இலங்கை நகருக்கே தீ வைத்து, அதைச் சாம்பலாக்கி அழித்தான்.

சீதையும் அதே இலங்கையில் தான் இருக்கின்றாள் என்பது பின்னர் நினைவுக்கு வந்ததும், தான் ஆத்திரத்தால் இலங்கைக்குத் தீ வைத்த செயலை எண்ணி அனுமன் மிகவும் வருந்தினான்.

தன் முட்டாள்தனத்தை எண்ணித் தன் மீதே வசைமாரி பொழிந்து கொள்கின்றான். "கோபம் கொண்ட எவன் தான் பாவச்செயலைச் செய்யாதிருப்பான்? கோபம் கொண்ட ஒருவன் தன் மூத்தவர்களைக் கூடக் கொன்று விடுவானே! அவனால் வசைமொழி எதுவும் கூறாமலும் இருக்கமுடியாதே. எவனொருவன் தன் உள்ளத்தில் பொங்கியெழும் கோபத்தை மிகுந்த பொறுமையினால் விரட்டியடிக்கிறானோ, அவனே உண்மையில் மனிதன் ஆவான்!" என்றெல்லாம் தன்னையே பின்னர் நொந்து கொள்கின்றான் அனுமன்.

கோபத்தை அடக்க வேண்டுவது எவ்வளவு இன்றியமையாதது என்பதற்கு மேற்கண்ட நிகழ்ச்சி ஓர் எடுத்துக்காட்டாகும்.


***பற்குணம்***



# உணவு கூடினும், குறையினும் நோய் செய்யும்

இன்றைய உலகில் மனித முன்னேற்றமானது அசுர வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது. உயரிய ஆற்றல்களைக் கொண்டு படைக்கப்பட்ட மனிதன் மகத்தான அறிவு என்ற தளத்திலே எவ்வளவு தூரம் முன்னேறி விட்டான். விண்ணளந்து வெண்ணிலாவைத் தாண்டி விட்டான். காற்றுக்கே கடிவாளம் பூட்டுகிறான். உயிர்களை ஆக்கவும் அழிக்கவும் கூடக் கற்றுக் கொண்டு விட்டான். ஆனால் எத்தனை முன்னேற்றம் வந்திருப்பினும், அன்றும் இன்றும் பசி உணர்வு வந்தவுடன் அனைத்தையும் இழந்தவன் போல் ஆகிவிடுகிறான். இதனைத்தான் "பசி வந்தால் பத்தும் பறக்கும்" என்பார்கள். எனவே, பசியைப் போக்க புசிக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றான். அதற்கு உணவைத் தேடுகிறான். அன்று தன் வெற்றுக் கைகளைக் கொண்டும், கல்லாயுதங்களைக் கொண்டும் விலங்குகளையும், பறவைகளையும் வேட்டையாடியும், காய் கனிகளை பறித்தும் பச்சையாகப் புசித்தான். ஆனால் இன்று அனுபவத்தால் உணவைச் சமைத்துப் பக்குவமாக ருசியுடன் உண்ணப் பழகிவிட்டான்.

ஓர் இயந்திரத்தின் தொழிற்பாடுகளை ஒத்த எமது உடற் செயற்பாடுகளுக்கு நாம் உண்ணும் உணவில் இருந்து தான் சக்தி கிடைக்கப்பெறுகிறது. மேலும் உடல் வளர்ச்சிக்கும், சிதைந்த உடற்கலங்கள் சீர் செய்யப்படுவதற்கும் நோய் எதிர்ப்புச்சக்தியை உருவாக்குவதற்கும் உணவு அவசியமாகிறது. இதனால் நாம் மகிழ்ச்சியாகவும், நோயின்றியும் வாழ வழிகிடைக்கிறது. எனவே எமது வாழ்க்கைக்கும், உடல் நலத்திற்கும் இன்றியமையாத முதற் தேவைகளில் உணவு பிரதானமாக அமைகிறது. உணவின் முக்கியத்துவத்தினால் உணவைத் தரும் உழவனையும் அவன் தொழிலையும் இந்திய தேசியக்கவி பாரதி "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று போற்றினார்.



ஒருவர் உண்ணும் உணவு வயது, பால், அவர் செய்யும் தொழிலின் தன்மை, காலநிலை ஆகியவற்றிற்கு ஏற்றவாறு அமைவதுடன் சகல

போசணைப் பொருட்களையும் உள்ளடக்கிய "சமநிலை" உணவாகவும் அமைதல் அவசிய மாகும். போசணைப் பொருட்கள், தேவையான அளவில் அடங்கியுள்ள உணவு. நாம் உண்ணும் உணவில் காபோவைதரரேற்று, புரதம், கொழுப்பு, விற்றமின்கள், கனியுப்புக்கள், நார்ப்பொருள், நீர் போன்ற போசனைக் கூறுகள் அடங்கியுள்ளன. இப்போசணைக் கூறுகள் எம் உடலினுள் அகத்துறிஞ்சப்படுகின்றன. இலகுவாக அகத்துறிஞ்சப்படக் கூடிய உணவுகளை உண்பதே சாலச்சிறந்தது. உணவு உடலிற்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு அக்கறை நாம் உண்ணும் உணவின் அளவிலும், தரத்திலும் கவனிக்கப் பட வேண்டும். அல்லாவிடின் உணவு குறையின் குறையூட்டத்தினால் வேறுபல நோய்த்தொல்லை களுக்கும் ஆளாக நேரிடும்.

> ஒருவர் உண்ணும் உணவு வயது, பால், அவர் செய்யும் தொழிலின் தன்மை, காலநிலை ஆகியவற்றிற்கு ஏற்றவாறு அமைவதுடன் சகல போசணைப் பொருட்களையும் உள்ளடக்கிய "சமநிலை" உணவாகவும் அமைதல் அவசியமாகும்.

நாம் உண்ணும் உணவு குறைவாக இருப்பின், எம் உடலில் அகத்துறிஞ்சப்படும் போசணைப் பொருட்களும் குறைவடையும். இந்நிலையில் காபோவைதரேற்று குறையின், "மரஸ்மஸ்" நோயும், புரதம் குறையின் "குவாசியக்கோர்" நோயும், கொழுப்பு குறையின் அசாதாரண உடல் மெலிவு, அழகு குறைதல், குளிரைத் தாங்க முடியாமை போன்ற பிரச்சினைகளும் ஏற்படும். மேலும் விற்றமின்கள் குறையும் போது விற்றமின் A குறைபாட்டால் "மாலைக்கண்" நோய், பார்வைக்குறைபாடு என்பனவும், விற்றமின் B குறைபாட்டால் "பெரி பெரி" நோய் குருதி உற்பத்தி குறைதல் போன்றனவும் விற்றமின் C குறையும் போது "ஸ்கேவி" யும், விற்றமின் D குறையும் போது "என்புருக்கி" நோய், என்பு, பல் வளர்ச்சிக்குறைவு என்பனவும், விற்றமின் E குறையும் போது மலட்டுத் தன்மையும், விற்றமின் K குறையும் போது குருதியுறையாநோய் போன்றனவும் ஏற்படும். இரும்பு குறையின் "குருதிச்சோகை" ஏற்படும். பொசுபரசு குறைவதால் பல், என்பு பலவீனமடைதல், என்பு விகாரமடைதல் என்பன ஏற்படும். மேலும், நாகம் குறைவடைவதால் நீர்ப்பீடனக் குறைபாடு (நோயை எதிர்க்கும் ஆற்றல் குறைதல்) தோன்றும் நார்ப்பொருள் குறையும் போது ஜீரணக்குறைபாடு, "மலச் சிக்கல்" என்பவை தோன்றும். நீர் குறையும் போது வரட்டுத்தன்மை,

உணவு கூடின், காபோவைத ரேற்று அதிகரிப்பினால் இரத்தத்தின் குளுக்கோசின் அளவு அதிகரித்து "நீரிழிவு" நோய் ஏற்படுத்துவதற் குரிய சந்தர்ப்பம் உண்டாகும். மேலும் உடற்பருமனும், நிறையும் அதிகரிக்கும் மேலதிக காபோவை தரேற்று கொழுப்பாக மாற்றப்பட்டு உடலில் படியும் கொழுப்பு கூடும் போது குருதியில் கொலஸ்ரோல் அதிகரிப்பு, மாரடைப்பு, உயர்குருதி யமுக்கம், உடல் பருமன், நிறை என்பன அதிகரித்தல் போன்றன ஏற்படும்.

குறை குருதியமுக்கம் என்பன ஏற்படும். எனவே இப் போசணைக் குறைபாட்டு நோய்களைத் தடுக்க, தேவையான போசணைப் பொருட்கள் அடங்கிய "சமநிலை உணவை" (நிறையுணவு) அளவுடன் உண்ண வேண்டும்.

உணவு கூடின், காபோவைதரேற்று அதிகரிப்பினால் இரத்தத்தின் குளுக்கோசின் அளவு அதிகரித்து "நீரிழிவு" நோய் ஏற்படுத்துவதற்குரிய சந்தர்ப்பம் உண்டாகும். மேலும் உடற்பருமனும், நிறையும் அதிகரிக்கும் மேலதிக காபோவைதரேற்று கொழுப்பாக மாற்றப்பட்டு உடலில் படியும் கொழுப்பு கூடும் போது குருதியில் கொலஸ்ரோல் அதிகரிப்பு, மாரடைப்பு, உயர் குருதியமுக்கம், உடல் பருமன், நிறை என்பன அதிகரித்தல் போன்றன ஏற்படும். உடற்பருமன் அதிகரிப்பதால் வேலை செய்ய முடியாமல் களைத்தல், முழங்கால் நோ, சுறுசுறுப்புடன் செயற்பட முடியாமை போன்ற பல பிரச்சினைகள் ஏற்படும். ஆகவே "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" "போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து" போன்ற பொன் மொழிகளைக் கருத்திற் கொண்டு சரிவிகித (சமநிலை) உணவுகளை அளவுடன் உண்ணப் பழக வேண்டும்.



எனவே, உணவு கூடினும், குறையினும் நோய் செய்யும் என்பது "வெள்ளிடை மலை போல" தெட்டத் தெளிவாக எமக்கு உறுதியாகிறது. ஆகையால், "உணவே மருந்தாகும்" என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க சிறுவயதிலிருந்தே சமநிலை உணவுகளை, சீரான உணவுப் பழக்கத்தினால் தேவைக்கேற்ப உரிய அளவுகளில் உண்டு தேவை யற்ற நோய் நிலைமைகளையும் இளவயது மரணங்களையும் தவிர்த்துச் சுக வாழ்வை அனுபவிப்போமாக!

அளவாக உண்போம்! அழகுடன் மிளிர்வோம்!

*செல்வி. காருண்யா பார்த்திபன்*
*யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, 9E*



# சிந்தியுங்கள்....
# செயற்படுங்கள்....

*நா. க. புவனேந்திரன்*



## அறிமுகம்

நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்றால் அதற்குப் பலருக்கு நன்றி கூறவேண்டும். முதலில் நம்மைப் படைத்த கடவுள், அம்மா, அப்பா, குரு, சகோதரர்கள், நல்ல நண்பர்கள், நல்ல சொந்தங்கள், நல்ல மனம் படைத்தவர்கள் என்று அந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகும். அவர்களில் ஒருவராக எழுதுகின்ற நானும் வாசிக்கின்ற நீங்களும் மாறி இப்பகுதியில் இணைய முயல்கிறேன்.

## எதை எழுதுவது?

பலர் பல கோணங்களில் பலவற்றை எழுதுகிறார்கள். இவற்றை வாசிப்பவர் யார்? இதற்கான விடை எவர் வாசிக்க வேண்டுமென்று எழுதுகிறார்களோ? அவர் வாசிப்பதில்லை என்பது தான் உதாரணமாகக் குடிப்பழக்கம் குடியைக் கெடுக்கும் என்று எழுதினால் அதனைக் குடிகாரர்கள் வாசிப்பதில்லை என்பது தான். ஆனால் இப்போது குடிக்காமல் இருப்பவர்கள் தமது முடிவு சரியானது என்று உறுதிப்படுத்த அது உதவுவதால் எழுதுவதில் ஏதோ பயன் உண்டென்று நம்பலாம்.

நான் தொடர்ந்து செய்து வருகின்ற பிழைகளை எழுதப் போகிறேன்.

## மொழி நடை

இயன்றவரை பேச்சு மொழிக்கு நெருக்கமான எளிமையான நடையிலே சுருக்கமாகவும், சுட்டிப்பாகவும் எழுத முயல்கிறேன்.

## முதலில் எழுதுவது

நமது தெரிவுகள் சரியாக இருக்க வேண்டும். அருமையும்,

பலர் பல கோணங்களில் பலவற்றை எழுதுகிறார்கள். இவற்றை வாசிப்பவர் யார்? இதற்கான விடை எவர் வாசிக்க வேண்டுமென்று எழுதுகிறார்களோ? அவர் வாசிப்ப தில்லை என்பது தான் உதாரண மாகக் குடிப்பழக்கம் குடியைக் கெடுக்கும் என்று எழுதினால் அதனைக் குடிகாரர்கள் வாசிப்ப தில்லை என்பது தான்.

தெரிவும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் என்று பொருளியலாளர்கள் கூறுகிறார்கள். ஏனென்றால் வளங்கள் மட்டுப் படுத்தப்பட்டவை. ஆனால் தேவைகளோ எண்ணற்றவை.

## எவற்றைத் தெரிவு செய்ய முடியாது?

பிறப்பைத் தேர்ந்தெடுக்கும்
இறப்பைத் தேர்ந்தெடுக்கும்
உரிமை நம்மிடத்தில் இல்லை.

என்னடா இவன் படையப்பா படப் பாடலை எழுதுகிறானே என்று நீங்கள் யோசிக்கலாம். ஆனால் அதில் உண்மை இருக்கிறது. நமது ஊர், தாய், தந்தையர், சகோதரர், மூப்பு, மரணம் இவை நமக்கு நிச்சயமானவை.

## எவற்றைத் தெரிவு செய்யலாம்?

01. நாம் கற்க வேண்டிய பாடசாலை (நாம், நமது என்பன உளப்பாட்டுத் தன்மைப் பன்மைப் பெயர்கள்)
02. நாம் தினமும் உண்ண வேண்டிய உணவு
03. நாம் புதிதாக அமைக்கவுள்ள வீடு
04. நாம் விளையாட வேண்டிய விளையாட்டு
05. படிக்க வேண்டிய பாடம்
06. செய்ய வேண்டிய வேலை (நியமனம் உட்பட)
07. கைப்பிடிக்க வேண்டிய துணை
08. நமது ஊருக்குத் தலைவர், செயலாளர்
09. நமது கழகங்கள், மன்றங்களுக்குத் தலைவர், செயலாளர்
10. (இதனை இதனால் இவன் முடிக்குமென்று ஆய்ந்து அதனை அவன்கண் விடல்)

இப்படி இப்பட்டியல் தொடரும்

1. நாம் கற்க வேண்டிய பாடசாலை

நாம் ஒவ்வொருவரும் செய்த பிழை என்ன? நமது பெற்றோர் செய்த பிழை என்ன?
(தாரமும் குருவும் தலைவிதிப்படி)
"யாதும் ஊரே யாவருங் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா.."
எல்லாம் எழுதியடிதான் நடக்கும் என்று விதியிற் பழியைப் போட்டு வீணே காலங் கழித்தது தான்.
நன்றாகப் புலமைப் பரிசிற் பரீட்சைக்குப் படித்தால் விரும்பிய பாடசாலை கிடைக்கும். இல்லாவிட்டாற் கிடைக்கிற பாடசாலையை விரும்ப வேண்டியது தான்.

ஒரு மனிதனின் ஆளுமையைக் கட்டி எழுப்புகின்ற மிக முக்கியமான கட்டம் இது. ஆதலால் பெற்றோர் நன்கு திட்டமிட வேண்டும். (பிள்ளைகள் பரிதாபம், கசக்கிப் பிழிந்து விடாதீர்கள்)
முயன்றும் முடியாமற் போனால் அடுத்த கட்டத் தெரிவைச் சரியாக யோசியுங்கள்.

### *எப்படிப்பட்ட பாடசாலையாக இருக்க வேண்டும்?*

1. பாதுகாப்பான சூழல் (பிரயாணம் உட்பட)
2. நல்ல அதிபர், நல்லாசிரியர்கள் (அர்ப்பணிப்பு மிக்கோர்)
3. நல்ல ஒழுக்கம்
4. நல்ல கற்றல், கற்பித்தல் சூழல்
5. நல்ல மொழியாளுமை (தமிழ், ஆங்கிலம், சிங்களம்)
7. சிறந்த பெறுபேறு
8. சிறந்த இணைப்பாட விதானம்

என்று திட்டமிடலாம்.

### *நாம் என்ன செய்கிறோம்*

எந்தப் பாடசாலையிற் படித்தாற் பெருமை என்று எண்ணுகிறோம்? பிள்ளையைப் பழுதாக்குகின்ற பிள்ளைகள் கற்கின்ற பாடசாலையாக இருந்தால் நிச்சயமாக அங்கே நமது பிள்ளையைச் சேர்க்கக் கூடாது. (பன்றியுடன் சேர்ந்த கன்றும் மலம் தின்னும்)

### *ஆசிரியர்கள் பழுதாக்க மாட்டார்களா?*

இல்லை, நிச்சயமாக இல்லை, (நானும் ஓர் ஆசிரியர் என்பதனால் அல்ல)

ஆசிரியர்களுக்குச் சீருடை கிடையாது ஏன் தெரியுமா? அவர்களுக்கு ஒழுக்கம் தான் சீருடை

1. எந்த ஆசிரியரும் திருடுவதில்லை
2. குடிப்பதில்லை (மாணவர் முன்)
3. சிகரெட் பிடிப்பதில்லை (மாணவர் முன்)

(மாணவர்களும் ஆசிரியர் முன் அப்படிச் செய்வதில்லை தானே என்று நீங்கள் யோசிக்கலாம்)

ஆனால் மாணவர்கள் சிலர் பாடசாலை உள்ளேயும், வெளியேயும் பிடிபட்டிருக்கிறார்கள்)

எனினும் ஆசிரியர்களைக் கண்காணிக்க அதிபர், கோட்டம், கல்வித்திணைக்களம் எனப் பல படிகள் உள்ளன.

சில பாடசாலைகளில் சில மாணவர்கள் ஏன் தப்பானவர் களாக இருக்கிறார்கள்.

அம் மாணவரது குடும்பச் சூழலும், சமூகச் சூழலும் தான் காரணம். (“ஒரு பிள்ளையானது பாடசாலைக்கு வரும்போது தனது வீட்டையும் கொண்டு வருகிறது” அறிஞர் ஓடாவே)

பிள்ளையின் மொழிநடை, பழக்க வழக்கம், இதனைக் காட்டும். எனவே நல்ல பிள்ளை இவர்களுடன் சேரக்கூடாது

*(தொடரும்....)*

> எந்தப் பாடசாலையிற் படித்தாற் பெருமை என்று எண்ணுகிறோம். பிள்ளையைப் பழுதாக்குகின்ற பிள்ளைகள் கற்கின்ற பாடசாலையாக இருந்தால் நிச்சயமாக அங்கே நமது பிள்ளையைச் சேர்க்கக் கூடாது.



# பேராசிரியர் மா. சின்னத்தம்பி அவர்களின் செவ்வி

30.01.1948 இல் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த மாரிமுத்து, கோமதி தம்பதி களின் மூத்த மகனாகப் பிறந்தவர் பேராசிரியர் மா. சின்னத்தம்பி அவர்கள். பாடசாலைக் காலத்தின் சிறந்த சமய மற்றும் இலக்கிய பேச்சாளராகவும், இலக்கியப் பட்டிமன்ற பேச்சாளராகவும் விளங்கிய இவர் பல்கலைக் கழக மாணவராயிருந்த காலத்தில் பட்டிமன்ற பேச்சணிகளின் தலைவராகவும் செயற்பட்டவர்.

பட்டம் பெற்றபின் சிறந்த பொருளியல் ஆசிரியராகவும், தேசிய மட்டத்தில் பிரதம பரீட்சகராகவும் செயற்பட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் துறையின் விரிவுரையாளராகவும், அத்துறையின் தலைவராகவும். பின்பு சட்டத்துறையின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். 2006 இல் பேராசிரியராக தமது கல்விச் செயலாற்றங்களினால் பதவியுயர்வு பெற்றதோடு, புதிய இளம் பல்கலைக்கழக விரிவுரையாளர்களைப் பயிற்றுவிக்கும் பதவியர் விருத்தி நிலைய (Staff Development Centre) த்தின் பணிப்பாளராகவும் வளவாளராகவும் இயங்கினார்.

பத்திரிகை எழுத்தாளராகவும், பலநூல்களின் ஆசிரியராகவும் அறியப்பட்ட இவர் தமிழருவியின் ஆரம்ப காலத்திலிருந்தே பல்துறை சார்ந்த கட்டுரைகள் மூலம் தமிழருவி வாசகர்களால் நன்கு அறியப்பட்டவர். அவரது செவ்வி இங்கு தரப்படுகிறது.

நேர்காணல்: தமிழ்வண்ணன்

வினா : உங்களது கல்வியியற்றுறைப் பிரவேசம் எவ்வாறு நிகழ்ந்தது?

விடை : பல்கலைக்கழகத்தில் கற்று முடிந்த பின் 1973 இல் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிப்

பிரிவு விரிவுரையாளராக இணைந்தேன். அந்நிறுவனத்தை அரசு பொறுப்பேற்ற போது என்னை விரிவுரையாளராக்காமல் ஆசிரியர் ஆக்கினார்கள். அதனாற் பல்கலைக்கழகத்திற்கு விரிவுரையாளராகச் செல்ல வேண்டும் என்ற உத்வேகம் என்னுள் எழுந்தது. ஆசிரியராக இருந்த காலத்தில் தொடர்ச்சியாக நூல்களை எழுதினேன். வாய்ப்பு வரும் என்று நம்பிக்கையுடன் காத்திருந்தேன். கல்வியியற்றுறைக்கு வாய்ப்பு வந்தபோது விண்ணப்பித்தேன். அதன்மூலம் கல்வியற்றுறைப் பிரவேசம் நிகழ்ந்தது.

**வினா** : ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற தனியார் கல்வி நிலையங்களிற் கற்பித்த பொருளியல் ஆசிரியர், இப்போது புகழ்பெற்ற கல்வித்துறைப் பேராசிரியர் இந்த இரண்டு துறைக் கற்பித்தல்களுக்குமிடையே எத்தகைய வேறுபாடுகளைக் காண்கிறீர்கள்?

**விடை** : தனியார் துறையிற் கற்பிக்கும் போது இரண்டு அடிப்படை விடயங்கள் காணப்பட்டன. ஒன்று நான் பெற்ற பொருளியல் அறிவை முழுமையாக பயன்படுத்த முடியாத நிலை இருந்தது. இன்னொரு விடயம் நான் கற்பித்த தனியார் பாடசாலையை விட பெருமளவு வருமானத்தை தருவதாக ரியூசன் துறை இருந்தது. "தொடர்ந்து ரியூசன் ஆசிரியராக இருக்கக்கூடாது" என்ற எண்ணம் என்னிடம் இருந்ததால் பல்கலைக்கழக விரிவுரையாளர் நியமனம் கிடைத்த அன்றே அந்தத் தொழிலை விட்டு விட்டேன். ஒரு காலத்திற் பருத்தித்துறை தொடக்கம் காரைநகர் வரை என்னிடம் படித்தவர்கள் தான் இப்போது என்னிடம் பல்கலைக் கழகத்திற் கற்கின்றனர். ரியூசனில் கற்ற மாணவர்கள் கனடா முதலிய நாடுகளிலும் இருக்கின்றனர். ரியூசனில் மாணவருக்குக் கற்பித்தவன் பல்கலைக்கழகத்தில் பட்டதாரி ஆசிரியர்களுக்கு கற்பிக்கிறேன். ஆசிரியர் கல்வி நிபுணத்துவத அறிவு திறன்கள் தொழில் ஒழுக்கம் என்பன ஒன்றிணைந்ததாக பார்க்கிறேன்.

தனியார் கல்வி நிலைய ஆசிரியராக இருந்த போது இளம் மாணவர்களுடன் தொடர்பு. கல்வியியற் துறைப் பேராசிரியரானதும் கல்வி நிறுவனங்களுடன் தொடர்பு. இதுதான் வேறுபாடு. எனது இந்த வளர்ச்சி அதிஷ்டத்தால் ஏற்பட்டதல்ல. திட்டமிட்ட உழைப்பின் காரணத்தாலேயே ஏற்பட்டது. என்னை இச்சமூகத்தில் ஒரு மரம் போலக் கற்பனை செய்து கொள்கிறேன். நிலத்திலிருந்து பசளையை உறிஞ்சும் மரம் கைம்மாற்றாகத்

தனது இலைகளை உதிர்த்து நிலத்திற்குப் பசளையைத் தருகிறது. அது போலவே என்னை வளர்த்த யாழ்ப்பாணச் சமூகத்தில் 41 வருடங்களுக்கு மேலாகக் கற்பித்தற் பணியைச் செய்து வருகிறேன்.



வினா : இதுவரை எவ்வெத்துறை சார்ந்த எத்தனை நூல்களை வெளியிட்டிருக் கிறார்கள்?

விடை : பொருளியல் துறைசார்ந்த 12 நூல்களும் கல்வியில் துறை சார்ந்த 21 நூல்களுமாக 33 நூல்களை வெளியிட்டிருக்கிறேன். "யாழ்ப்பாணத்தில் கல்வி மற்றும் சமூக மாறுதல்" என்னும் தலைப்பிலமைந்த தொடர்கட்டுரைகளின் தொகுப்பு நூல் அச்சிடப்பட்டுக் கொண்டிருக்கிறது. பல சஞ்சிகைகள், மற்றும் பத்திரிகைகளில் 300 கட்டுரைகள் வரை எழுதியுள்ளேன். எழுபத்தைந்துக்கு மேற்பட்ட செயலமர்களுக்கு வளவாளராகவும் கடமையாற்றி யுள்ளேன்.

என்னை இச்சமூகத்தில் ஒரு மரம் போலக் கற்பனை செய்து கொள்கிறேன். நிலத்திலிருந்து பசளையை உறிஞ்சும் மரம் கைம்மாற்றாகத் தனது இலை களை உதிர்த்து நிலத்திற்குப் பசளையைத் தருகிறது. அது போலவே என்னை வளர்த்த யாழ்ப்பாணச் சமூகத்தில் 41 வருடங்களுக்கு மேலாகக் கற்பித்தற் பணியைச் செய்து வருகிறேன்.

வினா : பல்வேறு சஞ்சிகைகளில் தொடர்ச்சியாக எழுதி வருகிறீர்கள். தமிழருவியில் நீங்கள் எழுதிய கட்டுரைகள் வாசகர்களாற் புகழ்ந்து பேசப்பட்டவை தமிழருவியின் தரத்தை உயர்த்தியவை. எழுத்து மூலம் சமூகமாற்றத்தை ஏற்படுத்தலாம் என நம்புகிறீர்களா?

விடை : ஆம், எமது சிந்தனையையும் வாசிப்பையும் மீள் உற்பத்தியாகச் சமூகத்துக்குக் கொடுக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் பத்திரிகைகளிலே தொடர்கட்டுரைகள் எழுதுகிறேன். பரீட்சை நோக்கில் இல்லாமல் காத்திருக்கின்ற சமூகத்திற்காக எழுதுகிறேன். அது எங்காவது ஓரிருவருக்குப் போய்ச் சேர்ந்தாலே போதுமானது. நான் சொல்வதைச் சமூகம் உள்வாங்குமா வாங்காதோ என்ற சந்தேகம் இருக்கக்கூடாது. சொல்வது எமது கடமை அதைப் பயன்படுத்துவதும் விடுவதும் சமூகத்தின் பொறுப்பு. நான் எழுதுவதன் நோக்கம் எனது எழுத்துக்கள்

மூலம் குற்றங்கள் மற்றும் பொறுப்பின்மை குறைந்தால் நாம் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்பதுதான்.

வினா : இன்றைய யாழ்ப்பாண மக்களின் கல்விநிலை தொடர்பாக என்ன நினைக்கிறீர்கள்?

விடை : யாழ்ப்பாணம் கல்வியில் முன்னணியில் நின்றது ஒருகாலம். இன்றோ இங்கு கல்வி என்பது மரியாதையான விடயம் இல்லை. அதிகம் படிக்காதவர்கள் தான் இங்கு பெரும் செல்வந்தர்களாக மதிக்கப்படுகின்றனர். இடை நிலைக் கல்வியுடன் வெளிநாடு சென்றவர்கள். இங்கு பெரும் செல்வந்தர்களாகக் காட்டப்படு கின்றனர். கோயிலுக்கும் ஊருக்கும் அள்ளிக் கொடுக்கின்றனர். அதுமட்டு மில்லை இங்குள்ளவர்களுக்கு உதாரணம் காட்டப் படித்தவர்கள் எவரும் மிகப் பெரிய செல்வந்தர்களாக இல்லை. முன்னர் மணமகன் என்றால் என்ன படித்திருக்கிறார் என்பதே கேள்வி. இப்போது அந்தநிலை மாறி அவர் எந்த நாட்டில் இருக்கிறார்? என்று கேட்கும் நிலை வந்துள்ளது. படிப்பும் பணம் உழைக்காத செல்வம் தராத ஒன்றாக உள்ளது. கொழும்பு பஸ் ஓடும் ஒருவர் மாதாந்தம் 30,000/- உழைக்க நான்கு அல்லது மூன்று வருடப் பல்கலைக்கழப் படிப்பை முடித்த ஒருவர் பலவருடம் காத்திருந்து வேலை பெற்றால் 20,000/- ரூபாவையே சம்பளமாகப் பெறும் நிலை உள்ளது.

நான் சொல்வதைச் சமூகம் உள்வாங்குமா வாங்காதோ என்ற சந்தேகம் இருக்க கூடாது. சொல்வது எமது கடமை அதைப் பயன்படுத்து வதும் விடுவதும் சமூகத்தின் பொறுப்பு. நான் எழுதுவதன் நோக்கம் எனது எழுத்துக்கள் மூலம் குற்றங்கள் மற்றும் பொறுப்பின்மை குறைந்தால் நாம் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்பதுதான்.

நாங்கள் படிக்கும் காலத்தில் செலவுக்கு 5 சதம் தான் தருவார்கள். இப்போது பிள்ளைகள் அதிக செலவாளி களாக உருவாகி வருகிறார்கள். ரெலிபோனிற்கு நாளாந்தம் பலநூறு ரூபாக்களைச் செல வழிக்கிறார்கள். யார் உழைக்க வில்லையோ அவர்கள் தான் அதிகம் செலவழிக்கிறார்கள்.

வினா : யாழ்ப்பாணச் சமூகத்தில் எத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என நினைக்கிறீர்கள்?

விடை : மூன்று வகையான மாற்றங்களைக் காண்கிறேன் ஒன்று கிராமப் புறக்கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றம். முன்னர் கிராமத்துக்குள் ஒருவர் போனால் யார் என்று விசாரிப்பார்கள். இடப் பெயர்வுகள்

இந்நிலையை மாற்றிவிட்டன. இரண்டாவது பணம் பெற்ற அதீத முக்கியத்துவம். பணத்தைத் தேடலாம் அதை எந்த வழியில் தேடினாலும் பரவாயில்லை என்ற சிந்தனை. புலம்பெயர்வாழ்வு எளிய மக்களிடையே நல்ல மாற்றங்களையும் உருவாக்கியுள்ளது. மூன்றாவது நடுத்தர வயதுப் பெண்களின் மன நிலையில் ஏற்பட்ட மாற்றம். அந்த நாளைய தாய்மார் தேவையில்லாமல் வீட்டுக்கு வெளியே வெளிக்கிட மாட்டார்கள். இப்போது ஓட்டோவில் போய் ஐஸ்கிறீமும் றோலும் சாப்பிட்டு விட்டு வருகிறார்கள். சுதந்திரமும் சமூக பரப்பு விரிவடைந்ததும் காரணங்களாகவுள்ளன. இது நல்ல மாற்றமே. முன்னர் ஆலயங்களில் வெளியிற் பொங்கி எல்லோருமாகச் சேர்ந்து உண்டனர். இப்போது பொங்கற் பானையை ஓட்டோவில் ஏற்றி வந்து பிறிட்ஜில் வைத்து மறுநாளும் உண்ணுகிறார்கள். பகிர்ந்து மகிழும் சமூக விழுமியம் தேய்ந்து செல்கின்றது.

குடும்பத்துள்ளும் குழந்தைகளின் பழைய வாழ்க்கை முறைகள் மாறி வருகின்றன. குரும்பட்டி கட்டி விளையாடு வதும் கமுகம் தடலில் வைத்து ஒருவரை ஒருவர் இழப்பதும் இல்லாமற் போய்விட்டன. தாய் மகளுக்குப் பேன் பார்க்க மகள் சகோதரிக்குப் பேன் பார்த்த படி சிரித்துக் கதைக்கும் நிலை இல்லாமற் போய்விட்டது. அம்மா, அம்மம்மாவுடன் சேர்ந்து கோவிலுக்கும் உறவினர் திருமணங்களுக்கும் செல்பவர்களைக் காணமுடியவில்லை. ரியூசன் என்ற தகரக் கொட்டில்கள் இந்த அருமையான நேரங்களை நியாயமின்றிக் கொள்ளையடித்து விட்டன. பாடசாலையிற் படித்ததைத்தான் ரியூசனிலும் படிப்பிக்கின்றனர். அதுமட்டுமா? பிறகு மீட்டல், துரித மீட்டல், வினாவிடை என பலபடிநிலைகள். ஆனால் சித்தியடைந்தோர் சதவீதத்தை ஒருவராலும் உயர்த்த முடியவில்லை.

> நாங்கள் படிக்கும் காலத்தில் செலவுக்கு 5 சதம் தான் தருவார்கள். இப்போது பிள்ளைகள் அதிக செலவாளிகளாக உருவாகி வருகிறார்கள். ரெலிபோனிற்கு நாளாந்தம் பலநூறு ரூபாக்களைச் செலவழிக்கிறார்கள். யார் உழைக்கவில்லையோ அவர்கள் தான் அதிகம் செலவழிக்கிறார்கள்.

**வினா** : நீங்கள் பெற்ற விருதுகள் பற்றிக் கூறுங்கள்

**விடை** : எனது பலநூல்களுக்கு வடகிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் "சிறந்த உயர்கல்வி நூல்களுக்கான"

விருதுகள் கிடைத்துள்ளன. எனக்குக் கிடைத்த மிகப்பெரிய விருதாக நான் கருதுவது உலக தரத்தில் 19 ஆம் இடத்தில் உள்ள ரொரன்றோ பல்கலைக்கழகம் என்னை வருகை நிலைப் பேராசிரியராக அழைத்தமையாகும்.

கலைஞர்களைப் போன்று அல்லது கோவில் பிரசங்கங்களைப் போன்று கல்வி மான்களுக்கு விருதுகள் வழங்கும் அறிவியல் சார்ந்த சமூக பண்பாடு போதியளவில் வளர்ச்சி யடையவில்லை. உன்னதமான பேராசிரியர்கள் பலரை விடவும் சிறந்த பலவிருதுகளை கோவில் பிரசாரங்களிலும் பட்டிமன்ற பேச்சுக்களிலும் பெற்று பலர் வளர்ந்துள்ளனர்.

இவை வெகுசன அறிவூட்டல் மற்றும் குதூகலப் படுத்தலுக் கான சமூக முன்னுரிமையின் வெளிப்பாடுகள் தான்.

வினா : உங்கள் கல்விசார் தேசிய பங்களிப்பு பற்றி சற்று விளக்குவீர்களா?

விடை : ஆம், இது மூன்று நிலைகளில் கூறக்கூடியது. ஒன்று தேசிய உயர் கல்வி நிறுவனங்களான தேசிய கல்வி ஆணைக் குழு, தேசியகல்வி நிறுவகம், கொழும்பு பல்கலைக் கழகம், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் போன்ற வற்றில் பணியாற்றி யுள்ளேன். இப்போதும் பணியாற்றி வருகிறேன்.

> தமிழருவியைத் தொடர்ந்து வாசியுங்கள் அது மிகவும் நல்ல அறிவுப்பழக்கம். உன்னத பண்பாடு நல்ல தமிழறிவு பெறவும், தெளிவாக சிந்திக்கவும் சிந்தித்ததை குழப்பமின்றி பிறருக்கு எடுத்துரைக் கவும் நல்ல வாசிப்பு துணை செய்கிறது. அறிவையும், உணர் வையும் புத்துயிர் மிக்கதாக மாற்றும் ஆற்றல் வாசிப்புக்குண்டு. நூல்களை நம்பிக்கைக்குரிய நண்பராகக் கருதுங்கள்.

இரண்டாவது – 2009 இல் இலங்கைப் பாட சாலைக் கல்வி தொடர்பான புதிய சட்டம் ஒன்று உருவாக்கப்படும் செயல் முறை இடம்பெற்றது. அதில் ஒரு மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்றி அதற்கான தேசிய கல்வி ஆணைக்குழு தொடங்கியது. அதில் ஒரு ஆய்வுக்குழுவில் நிபுணத்துவ வளவாளராக பணியாற்றிக் கொண்டிருக்கிறேன்.

இதற்கான உள்நிறை ஆற்றல்களை உருவாக்கிய எனது பள்ளிக்கூட வாழ்வில் கற்பித்த ஆசிரியர்களை தெய்வங்களாக எண்ணி மனதில் ஆராதிக்கிறேன்.

வினா : செவ்வியின் நிறைவாக தமிழருவி வாசகர்களுக்கு நீங்கள் கூறவிரும்புவதென்ன?

விடை : சுவாசித்தலும், வாசித்தலும் எல்லோருக்கும் அவசியமானவை. உடல் ஆரோக்கியத்துக்கு தூய சுவாசித்தல் துணை செய்கிறது. அறிவும், உணர்வும் உற்சாகமாக புத்துயிர் பெற நிறைந்த வாசிப்பு அவசியம்.

பட்டம் பெறாத பலர் நல்ல பரந்த வாசிப்புப் பழக்கத்தாலும் தாமும் மகிழ்ந்து ஊடகங்களின் மூலமும் பிரசங்கங்களின் மூலமும் கோடிக்கணக்கான எளிய மக்களுக்கு அறிவூட்டுகிறார்கள். ஆனந்தம் கொள்ளச் செய்கிறார்கள்.

தமிழருவியைத் தொடர்ந்து வாசியுங்கள் அது மிகவும் நல்ல அறிவுப்பழக்கம். உன்னத பண்பாடு. நல்ல தமிழறிவு பெறவும், தெளிவாக சிந்திக்கவும் சிந்தித்ததை குழப்ப மின்றி பிறருக்கு எடுத்துரைக்கவும் நல்ல வாசிப்பு துணை செய்கிறது.

அறிவையும், உணர்வையும் புத்துயிர் மிக்கதாக மாற்றும் ஆற்றல் வாசிப்புக்குண்டு. நூல்களை நம்பிக்கைக்குரிய நண்பராக கருதுங்கள்.


பாடசாலைக் கல்வியை எளிமைப்படுத்தக்கூடிய வலிமைப் படுத்தக்கூடிய பேராற்றல் நிறைவான வாசிப்புக்கு உண்டு.

வாசகர்களே, தொடர்ந்து குதூகலத்துடன் தமிழருவியை வாசிப்பீர்கள் தானே!

## அறிஞர்களின் பொன் மொழிகள்

- நம்முடைய மனப்பான்மையே துன்பத்தை இன்பமாகவும், இன்பத்தை துன்பமாகவும் எடுத்துக் கொள்கிறது. - சுபாகூஷ் சந்திரபோஸ் -
- என் அறிவு வளையவோ, குனியவோ ஆக்கப்பட்டதன்று, அவற்றிற்கு ஏற்பட்டவை என் முழங்கால்களே. - மாண்டேய்ன் -
- அறிவு, தன்மானம், தன்னடக்கம் ஆகிய மூவகைப் பண்புகளும் ஒருவனுக்கு அவனது வாழ்க்கையில் தலைசிறந்த ஆற்றல்கள் - டென்னிகன் -
- அழகிலும் சிறந்தவை ஆண்மையும், அறிவுமே. அவைதான் உண்மை அழகுடையவை. - மில்ட்டன் -
- முடியுமானால் பிறரை விட அறிவாளியாக இரு. ஆனால் அதை அவர்களிடம் கூறாதே. - செஸ்டர்பீல்டு -
- நட்புக் கொள்ளும் விகூயத்தில் அவசரப்படாதீர்கள். நிதானமாக இருங்கள். நட்புக் கொண்ட பின்பு நிலைத்து நிற்க வழி தேடுங்கள். - சாக்ரடீஸ் -
- வாழ்க்கையில் கோடை மழையைப் போல் வருகிறது துன்பம். பன்னீர் போல் கிடைக்கிறது இன்பம். - அல்பெயர் -

0 8 SEP 2015



# பயணங்கள் முடிவதில்லை

கைதடியூர் பாரதி

"மதியார்க்கு வல்லினம் நீ! மாதமிழே உன்னை
மதிப்பார்க்கு மெல்லினம் நீ! யாவர்க்கும் என்றும்
இடையினமாம் நீதிநெறி நிற்றலிலே! எண்ணார்
கடையினமாம் கன்னித் தமிழ்க்கு"

தமிழே! நீ உன்னை மதியாதவர்களுக்கு வல்லினமாகவும், உன்னை மதித்து நடப்பவர்களுக்கு மெல்லினமாகவும், என்றும் எப்போதும், எவ்விடத்தும் யாவர்க்கும் நீதி நெறியிலே நடுநிலை வகித்து நிற்பதனால் இடையின மாகவும், விளங்குகின்றாய், அப்படிப் பட்ட பெருமைக்குரிய உன்னை எண்ணாதவர்கள் யாவராயினும் அவர்கள், கன்னித் தமிழாகிய உனக்குக் கடையினமாம். கீழ்ப்பட்டவர்களாகவே மதிக்கப்படு வார்கள் என்பது உறுதி.

தமிழை அதன் செம்மை யறிந்து சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். வேற்றுமொழியாளர் பயன் படுத்தும் போது. விளம்பரப் பதாதைகள் ஆக்கும் போது, அதனைக் குறித்த மொழியைச் சரியாகத் தெரிந்தவர் மூலம் செவ்வை பார்க்க வேண்டும். அதன் பின்னர் தான் அவற்றை வெளியிட வேண்டும்.

தமிழை அதன் செம்மையறிந்து சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். வேற்று மொழியாளர் பயன்படுத்தும் போது, விளம்பரப் பதாதைகள் ஆக்கும் போது, அதனைக் குறித்த மொழியைச் சரியாகத் தெரிந்தவர் மூலம் செவ்வை பார்க்க வேண்டும். அதன் பின்னர் தான் அவற்றை வெளியிட வேண்டும். சென்ற 'தமிழருவி' யில் நான் கூறிய அந்தத் தமிழ்த் தவறு பத்திரிகைச் சான்றாகவே இதோ.

இது யாழ் நல்லூர் ஆலயத்தின் பின் வீதியில் காப்புறுதி நிறுவனம் ஒன்றினால் நிறுத்தப்பட்டுள்ள இடப்பெயர்ப் பலகை இதில் நிலாவரைக் கிணற்றுக்குச் செல்லும் இடக் குறியீட்டில் "நிளாவரைக் கிணறு" என்று பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய விளம்பரப் பலகைகள் பல யாழ்ப்பாணத்து வீதிகளில் உள்ளன. இவை தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் சிங்கள மொழியிலுள்ளதைத் தமிழ் மொழிக்கு மாற்றும் போது ஏற்படும் தவறுகளாக உள்ளன. இவற்றை உரிய முறையில் சரிபார்த்த பின் வீதிகளுக்கு கொண்டு வரலாம் அல்லவா?

"பொங்கும் தமிழுக்கு இன்னல் இழைத்தாரின்
அங்கம் சிதைத்தவள் நீ"

தமிழாகிய உனக்குக் கொடிய துன்பத்தினை உண்டாக்கியவர்களின் உடம்பைச் சிதைக்கும் ஆற்றலை பெற்றவள் நீ!

உனக்கு நடக்கும் கொடுமைகள், சித்திரவதைகளை இன்னமும் எவ்வாறு சகித்துக் கொண்டிருக்கிறாய்?

ஒரு Shampo விளம்பரம் "மேழும் பொடுகிலிருந்து நீங்க" எனத் தொடர்கிறது. 'மேலும்' என்பது 'மேழும்' என்று வருகிறது.

இன்னொரு உணவுப் பொருளின் பொதி செய்யப்பட்ட அட்டையில் அதில் சேர்க்கப்பட்டுள்ள பொருள்களின் உள்ளடக்கம் பின்வருமாறு அமைந்துள்ளது.

"உள்ளடக்கம் – கோதுமை வா, மரக்கரி கெரழுப்பு, கொகொவா படர், ழுழு ஆடைப் பால்பா, செயற்கை சுவையுட்டிகன்"

எத்தனை எழுத்துப் பிழைகள்? இந்தப் பொருள் எத்தனை பேருடைய பார்வைக்குச் செல்லும்? இவற்றைச் சரியாக எழுத வேண்டும் எனும் எண்ணம் ஏன் வர மறுக்கிறது?

சரி வேற்று மொழியாளர் தான் மொழி பெயர்க்கும் போது தவறு செய்கிறார்கள் என்றால் தமிழைத் தாய் மொழியாகவே கொண்டவர்களின் தவறுகளுக்கு என்ன சொல்வது?

தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலய வெளிவீதி வாசலில் இவ்வாறு உள்ளது. "முக்கிய அறிவித்தல்

பாதணி இன்றி உற்செல்லுதல் வேண்டும்" அனுசரனை YMHA

உட்செல்லுதல் – உற்செல்லுதல் ஆகி அனுசரணை – அனுசரனை ஆகிய மர்மம் தான் என்ன?

ஒருவனுடைய உணர்ச்சிகளை உள்ளவாறே வெளிப் படுத்துவதற்கு அவனுக்கு ஆற்றலைக் கொடுப்பது அவனது தாய் மொழியே. கருத்துப் பரிமாற்றங்களுக்கு மட்டுமன்றி கற்பனை வெளிப்பாடுகளுக்கும் தாய்மொழியே கை கொடுக்கிறது. என்னதான் இரண்டாம் மொழியைக் கற்றுத் தேர்ந்தாலும் தாய் மொழிக்கு

ஒருவனுடைய உணர்ச்சிகளை உள்ளவாறே வெளிப்படுத்துவதற்கு அவனுக்கு ஆற்றலைக் கொடுப்பது அவனது தாய் மொழியே கருத்துப் பரிமாற்றங்களுக்கு மட்டுமன்றி கற்பனை வெளிப்பாடுகளுக்கும் தாய் மொழியே கை கொடுக்கிறது. என்ன தான் இரண்டாம் மொழியைக் கற்றுத் தேர்ந்தாலும் தாய் மொழிக்கு இருக்கும் தனித்துவம் வேறெம் மொழிக்கும் வந்து விடாது.

இருக்கும் தனித்துவம் வேறெம் மொழிக்கும் வந்து விடாது பல மொழிகற்றுத் தேர்ந்த வனாய் இருந்தால் கூட ஆபத்தில் அவன் அழுவது அனுங்குவது தன் தாய் மொழியில் தான்.

தாய் மொழியைத் தாயாகவே எண்ணியிருக்க வேண்டிய நிலையில் இப்படியெல்லாம் அதனைச் சித்திரவதைப் படுத்திக் கொலை முயற்சியில் தொடர்ந்தும் ஈடுபடுதல் சரியான செயற்பாடுதானா?

எமது தமிழ் மொழி இயல்பாகவே தோன்றிய இயன்மொழி. அவ்வாறு இயல்பாகத் தோன்றிய இயன்மொழிக்குப் பதினாறு பண்புகள் இருக்க வேண்டும். அப்பதினாறு பண்புகளும் ஒருங்கே கொண்டமைந்தது. தமிழ்மொழி ஒன்று மட்டுமே என்பது தேவநேயப் பாவாணர் கூற்று.

“தொன்மை இயன்மை தூய்மை தாய்மை
முன்மை வியன்மை வளமை மறைமை
எண்மை, இளமை இனிமை தனிமை
ஒண்மை இறைமை அம்மை செம்மை
எனும் பதி னாறும் இன்றமிழ் இயல்பெனப்
பன்னுவர் மொழிவலர் பாவாணர் தாமே”

இன்னும் எங்கு முதன் மாந்தன் தோன்றினானோ அங்குதான் ஞான முதன்மொழியும் தோன்றியிருக்க முடியும் என்பதும் அதுவே, தமிழ் மொழியாம் என்பதும் பாவாணரின் அசைக்க முடியாத கருத்தாகும்.

இத்தகு சீர்மிகு சிறப்புகள் யாவும் நிறைந்த தமிழ் மொழியைச் சிதைப்பதற்கு எவ்வாறு மனம் உடன்படுகிறது?

அன்றாடம் பத்திரிகைகளில் எழுத்துப் பிழைகள் தொடர்ந்து கொண்டு தானே இருக்கின்றன. இவற்றில் சம்பந்தப்பட்டவர்கள் ஏன் அக்கறை செலுத்துவதில்லை? இப்படிப் பாராமுகமாக இருப்பது தமிழுக்கு அவர்கள் செய்யும் துரோகம் அல்லவா?

இப்படியே போனால் பயணங்கள் முடிவதேயில்லையா? எப்பதான் எனது பயணங்கள் முடியப் போகின்றது? “அண்ண சுண்டிக்குளிச் சந்தி இறக்கம் இறக்கம்.... இறக்கம்” நடத்துனருக்கு

ஒரு பிரயாணி ஞாபகப்படுத்தலைச் சற்று அழுத்தமாகவே கொடுத்தார். என் சிந்தனைகளையும் கலைத்தார்.

ஓ! இவரின் பயணம் இப்போது இங்கே முடிகிறது எனது பயணங்கள்....

(தொடரும்....)

## உளச்சார்பு வினாக்கள்

1. சந்திரனில் இருந்து பார்க்கும் போது பூமியில் தெரியும் ஒரே ஒரு கட்டடம் எது? ***சீனப்பெருஞ்சுவர்***
2. ஐரோப்பாவின் போர்க்களம் என்று அழைக்கப்படும் நாடு எது? ***பெல்ஜியம்***
3. மிகவும் அதிக எண்ணிக்கையான பற்களையுடைய பாலூட்டி எது? ***பன்றி (44 பற்கள்)***
4. உலகில் முதன்முதலில் சோதனைக்குழாய் குழந்தையை உருவாக்கி சாதனை படைத்த விஞ்ஞானி யாவர்?
   ***Dr. ஸ்ரெப்ரோ, Dr. எட்வேட்ஸ்***
5. உலக ஓசோன் தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது? ***September 16***
6. தமிழனாக சாகவிரும்பிய ஆங்கிலேயர் யார்? ***ஜி.யு. போப்***
7. பூமி அதிர்ச்சியை அளக்கும் அளவுத்திட்டம் எது? ***ரிச்டர்***
8. பிரான்சில் இருந்து பிரித்தானியாவை பிரிக்கும் நீரிணை எது? ***டோவர் நீரிணை***
9. குளோனிங் முறையில் உருவாக்கப்பட்ட முதலாவது உயிரி எது? அதன் பெயர் என்ன? ***செம்மறி ஆடு, டொலி***
10. உலகிலேயே மிகப் பெரிய பூங்கா எது? ***உப்பபீபல்***
11. தலைகீழான கொடி உணர்த்தும் தத்துவம் எது? ***துன்பம்***
12. மிக உயரத்தில் பறக்கும் பறவை எது? ***டெர்ன்***
13. கர்ப்பம் தரித்த பின்னர் கருவின் இதயத்தசை எத்தனையாம் நாளில் முதன் முதலாக சுருங்கும்? ***25 ஆவது நாளில்***
14. சிப்பியினுள் முத்து விளைய எத்தனை வருடம் தேவை?
    ***ஏறக்குறைய 15 ஆண்டுகள்***
15. மாம்பழத்தின் பிறப்பிடம் எது? ***தென்கிழக்காசியா***
16. கற்களால் தனது கூடுகளை அமைக்கும் பறவை இனம் எது? ***ஜென்ட்டு***
17. யூரோ நாணயம் எப்போது அறிமுகமானது? ***1999 January 1***
18. MAD COW என்ற நோய் மாடுகளுக்கு எங்கு ஏற்பட்டது? ***பிரிட்டனில்***
19. மிக உயரத்தில் வாழும் மிருகம் எது? ***யாக் எருமை***
20. நினைவாற்றல் மிகவும் கூடிய விலங்கு எது? ***யானை***
21. இன்ரநெட்டின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்? ***வின்ட்செர்ப்***
22. உலக திரைப்பட விருது எது? ***ஆஸ்கார்***
23. கம்பியூட்டரின் தந்தை என்றழைக்கப்படுபவர் யார்? ***சார்லஸ் பாப்பேஜ்***



தமிழருவியில் முன்பு வெளிவந்த பிரசுரங்களில் மனித சமுதாயத்திற்கு அத்தியாவசியத் தேவைகளில் மிகவும் முக்கியமானதும் உயிர் வாழ்விற்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் ஆதாரமாகவுள்ள உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் விவசாய வழிமுறைகளை இயற்கை விவசாய முறைகள், பாரம்பரிய விவசாய முறைகள் போன்ற நேற்றைய முறைகளாகவும் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியூடாகப் பெறப்பட்ட பசுமைப்புரட்சி முறையாக விவசாய இரசாயனங்களைப் பயன்படுத்தும்



# விவசாயமும் நாமும்; நேற்று இன்று நாளை

பூமதி யோகநாதன்
விவசாயப்போதனாசிரியர்

இரசாயன விவசாய முறைகளை இன்றைய விவசாய முறையாகவும் குறிப்பிட்டு, இந்த இரசாயன விவசாய முறைகளால் மனித ஆரோக்கியம், குடிநீர்வளம், மண்வளம், பல்வகைமை, காடழிப்பு, சூழல் இவற்றிற்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் பற்றியும் விளக்கி இன்றைய விவசாய முறைகளாகவும் எழுதியிருந்தேன்.

எதிர்காலத்தில் இரசாயனப் பயிர்ச்செய்கை முறையால் ஏற்பட்ட மேற்படிப் பாதிப்புக்களில் இருந்து விடுபட்டு சுற்றுச் சூழலுக்கு பாதிப்பில்லாமலும் மனித ஆரோக்கிய மேம்பாட்டிற்குமான விவசாய முறைகளை நோக்கி நாளைய விவசாய முறைகள் எப்படி இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் விழிப்பூட்டுவதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கமாகும்.

நாம் இன்று எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு நாமும் எமது அடுத்த சந்ததியினரும் நிலைபேறாக ஆரோக்கியமாக இயற்கையோடு இணைந்து இயற்கையின் அரவணைப்போடு சிறப்பாக வாழும்

வழிமுறைகளை தெரிவு செய்வது இன்றைய சந்ததியினரின் மிகவும் சவாலானதும் கட்டாயமானதும் ஆகும்.

இந்நிலையில் நாளைய விவசாய முறைகள் எப்படி இருக்க வேண்டும் என்பதில் தற்போது பல கோட்பாடுகளை அறிவு ஜீவிகளும், சூழலியலாளர்களும், விஞ்ஞானிகளும், விவசாய நிபுணர்களும், முன்னோடி விவசாயிகளும், மருத்துவர்களும் ஆலோசனையாகவும் செய்து காட்டல்கள் ஊடாகவும் விழிப்பூட்டியும் நடைமுறைப்படுத்தியும் வருவதையும் அறிவோம்.

இக்கட்டத்தில் சனத்தொகை அதிகரிப்புக்கு ஏற்றவகையில் உணவுற் பத்தியும் அதிகரிக்க வேண்டும். அதற்கேற்ற வகையில் நாளைய விவசாய உற்பத்தி உத்திகளும் அமைய வேண்டும் என்ற வாதம் ஒருபுறமும்.



உலகளாவிய ரீதியில் இன்றைய சமூகத்தினர் உற்பத்தி செய்யப்படும் உணவைச் சரியாகப் பகிர்ந்து கொள்ளாததாலும் அளவுக்கு அதிகமாக வீண்விரயம் செய்வதாலும் அளவுக்கு அதிகமான நுகர்வாலும், பாரம்பரிய உணவுப் பழக்க வழக்கங்களையும் மாற்றிக் கொண்டதாலும் இன்றைய நிலையில் உடல் ஆரோக்கிய பிரச்சினைகளும், உணவுப் பற்றாக்குறையும், சூழல் மாசடைதல், காலநிலை மாற்றப் பிரச்சினைகளும் ஏற்பட்டு உலக இருப்பே அச்சத்திற்குரிய தாகியுள்ளது என்பது இன்னொரு புறமாகவும் உள்ளது.

எமது நாடு விவசாய பொருளாதாரத்தை மையமாகக் கொண்ட நாடு பெருமளவு நாட்டு மக்களுக்குத் தொழில் வாய்ப்பைத் தரும் தொழில் துறையாகவும் விவசாயத்துறை காணப்படுவதால் சூழல் பாதிப்பிலும், மனித ஆரோக்கிய பிரச்சினைகளிலும் பிரதான பங்களிக்கும் விவசாய இரசாயன பாவனை, மற்றும் காடழிப்பு, மரங்களை வெட்டுதல் அழித்தல் எமது பிரதேசங்களில் மிக அதிகளவாக நடைபெற்று வருவதாலும் பல்வேறு சமூகப் பழக்கவழக்க மாற்றங்களினாலும் விவசாயத்தில் ஏற்படுத்தப்பட்ட பசுமைப்புரட்சியால் எமது நாடும் எமது மக்களும் மிகவும் அதிகளவு பாதிக்கப்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இதுபற்றி முன்பு பிரசுரமான தமிழருவி வெளியீடுகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவற்றிற்கு மேலதிகமாகத் தற்போது இலங்கையில் வடமத்திய, வடக்கு மாகாணங்களில் வசிக்கும் மக்களில் அதிகமானவர்கள் சிறுநீரக பாதிப்பு நோய்க்கு ஆளாவதாகவும் இதற்கு விவசாயத்தில் பயன்படுத்தும்

களைகொல்லி மருந்து காரணமாக இருக்கலாம் என்றும் ஆய்வுகள் தெரிவிப்பதாகவும் அறிய முடிகிறது.

மேலும் கட்டுப்பாடற்ற மரங்கள் வெட்டல், விவசாய இரசாயன பாவனை காரணமாக ஓசோன் படைப் பாதிப்பு. இதன் காரணமாக காலநிலை மாற்றத்தையும் கடந்த இருவருடங்களில் நாம் அடுத்து அடுத்து அறிய முடிந்ததோடு அதாவது கடும் வெள்ளப்பாதிப்பை 2012/ 2013 கால போகத்தில் வெள்ள அழிவும், 2013/ 2014 காலபோகம் கடும் வரட்சி காரணமாகப் பயிர் அழிவுகளும் ஏற்பட்டு விவசாயிகள் பயிர்ச்செய்கையில் பாதிப்படைந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அத்தோடு பொது மக்களும் உணவு விலையேற்றம், வேலைவாய்ப்பின்மை, தொற்று நோய்களுக்கு உட்படல், போசாக்குக் குறைபாடு, குடிநீர்ப்பற்றாக் குறை, அதிக வெப்பம் போன்ற சமுதாயப் பிரச்சினைகளுக்கும் உள்ளாகியுள்ளதை நாம் தற்போது அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.



இப்பிரச்சினை எமது நாட்டில் மட்டுமல்லாது உலக ரீதியாகவும் அடிக்கடி ஏற்பட்டு வருவதை நாம் தொடர்பு சாதனங்கள் ஊடாக அறிய முடிகிறது. ஆதலினால் மக்களாகிய நாம் எமது தற்போதைய நடைமுறைகளையும் பழக்க வழக்கங்களையும் நாளைய தேவைகருதி மாற்ற வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். தவறின் விளைவு பாரதூரமாகிவிடும்.

சரித்திரம் மீளத் திரும்பும் என்ற ஆங்கில முதுமொழிக்கிணங்கவும் எமது மூதாதைகள் எமக்கு அறிவுறுத்திய முதுமொழிகளைக் கவனத்தில் எடுக்க வேண்டியநிலை தற்போது எமக்குக் கட்டாயமாக உள்ளது. பாரம்பரியமாக எமது முன்னோர் வாழ்ந்து காட்டிய முறைகளும் உணவுப் பழக்க வழக்கங்களும் விவசாய முறைகளும் அதாவது நேற்றைய முறைகள் இன்று எமக்கு அவசியமாகிறது என்பதை இங்கு சுட்டிக் காட்டுவதுடன் எமது எதிர்கால சந்ததிக்கு இவற்றை அறிமுகப்படுத்துவதும் இன்றைய எமது சமுதாயத்தின் கடமையாகும்.

கீழைத்தேச பாரம்பரிய எமது உணவுப் பழக்க வழக்கங்கள், விவசாய நடைமுறைகள், மருத்துவமுறைகள் என்பன தற்போது மேலைத்தேய விஞ்ஞானிகள் மற்றும் அறிவு ஜீவிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேலைத் தேசங்களின் நடைமுறைக்கு வந்துள்ளதை நாம் எமது உறவினர்கள், நண்பர்கள், ஊரவர் வெளிநாடுகளில் இருந்து இங்கு

மேலைத்தேய நாகரிகத்தில் மூழ்கியுள்ள நாம் தொடர்ந்து அந்நடைமுறைகளில் இருந்து விடுபடாமலும் எமது பாரம் பரிய முறைகளுக்கு மாறா மலும் வருங்கால சந்ததி யினரை மாற்ற முற்படாமலும் இருந்தால் அழிவு மிக விரைவில் எம்மை நோக்கி வரும் என்பதை ஞாபகப் படுத்திக் கொள்வோமாக.

வந்து போகும் போது, அவர்களின் நடைமுறைகளை அவதானிக்கும் போது நாம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

மேலைத்தேய நாகரிகத்தில் மூழ்கியுள்ள நாம் தொடர்ந்து அந்நடைமுறைகளில் இருந்து விடுபடாமலும் எமது பாரம்பரிய முறைகளுக்கு மாறாமலும் வருங்கால சந்ததியினரை மாற்ற முற்படாமலும் இருந்தால் அழிவு மிக விரைவில் எம்மை நோக்கி வரும் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்வோமாக.

சமுதாய மறுமலர்ச்சிக்கான உயிரியல் ரீதியான செறிவான வீட்டுத்தோட்டம் செய்வது எப்படி?

அதிகமாகக் கதை அளந்து விட்டோம். வாய்ப்பேச்சு வீண் பேச்சாகி விடக்கூடாது. இனிக் களத்தில் இறங்குவோம் வாருங்கள். நானும் என் வீட்டின் முன்னேயும் வீட்டைச் சுற்றிலும் ஆரம்பித்துள்ளேன்.

செய்முறைகளையும், வழிகாட்டல்களையும் என் அறிவுக்கு எட்டிய அனுபவரீதியிலும், கண்டும் கேட்டும், படித்தும் அறிந்தவற்றையும் என்வீட்டுத் தோட்டத்திலும் உங்கள் வீட்டுத் தோட்டத்திலும் அல்லது இனி நீங்கள் ஆரம்பிக்க உள்ள வீட்டுத் தோட்டத்திலும் பின்பற்றிப் பலன் பெற உதவியாக இருக்கும் என்று நம்புகின்றேன். மேலும் நீங்களும் உங்களுக்குத் தெரிந்தவற்றைத் தமிழருவி இதழுக்கு எழுதி அனுப்புவதன் ஊடாகக் கல்வி, அறிவு, திறன், மாற்றத்திற்கு உதவுவீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

## சூழலுக்குகேற்ற உயிரியல் செறிவான வீட்டுத் தோட்டம் ஆரம்பித்தல், திட்டமிடல்

(அ) காய்கறி (மரக்கறி) பாத்திகளை அமைக்கத் தேவையான நிலத்தின் அளவு


20 அடி நீளம் 20 அடி அகலம்

அதாவது ஏறத்தாள 400 - 500 சதுர அடி

(ஆ) உற்பத்தி அளவு

வருடத்தில் ஆகக்குறைந்தது 300 நாட்களுக்கு இப்பாத்திகளில் இருந்து ஒரு நாளைக்கு 1 - 25 கிலோகிராம் காய்கறிகள்

(இ) பாத்திகள் கிழக்கு - மேற்காக அமைக்கப்படல் வேண்டும். பாத்திகளின் அகலம் 1.5 மீற்றர் (5 அடி) பாத்திகளுக்கு இடையில் 0.5m (1முழம்) இடைவெளியும் இருத்தல் விரும்பத்தக்கது.




(ஈ) பாத்திகளின் உயரம் 15 - 30 ச.மீ (1.5 - 1 அடி)

## ஆழமாகக் கொத்திய உயரமான பாத்திகள் அமைப்பதற்கான அடிப்படைக் காரணங்கள்

* ஒரு குறித்த அளவுள்ள நிலப்பரப்பில் (குறைந்த நிலத்தில்) அதிக எண்ணிக்கையான பயிர்களை வளர்க்கலாம்.
* பாத்திகள் அதிகளவு நீரை சேமித்து வைத்திருக்கும்.
* பயிர்களின் செறிவு (நெருக்கம்) காரணமாகப் பாத்தியில் இருந்து நீரானது, ஆவியாகி நீர் இழப்பைக் குறைக்கலாம்.
* கூட்டுப்பசளைப் பாத்தியில் நீர்த் தன்மை ஆகியன பயிர்களுக்கு நன்மை பயக்கும்.
* மண் நுண்ணங்கிகளான நைதரசன் பதிக்கும் (கண்ணுக்குத் தெரியாத) நுண் அங்கிகள், மண்புழுக்களின் தொழிற்பாடு அதிகரிக்கும்.
* மேலதிகமான மழைநீர், வெள்ளம் காரணமாகப் பாத்திகளில் உள்ள பயிர்கள் பாதிப்படையாது.
* இவ்வகையான சூழல் தொகுதியானது பூச்சி பீடைகளைக் கொன்று உண்ணும் பிராணிகளையும் பயன்தரும் உயிர்களையும் அதிகரிக்கும்.

## ஆழமாகக் கொத்திய உயரமான பாத்திகள் அமைப்பதற்கான அடிப்படைக் காரணங்கள்

* தாவர, விலங்குக் கழிவுகளையும், மீதிகளையும் மீளப் பயன்படுத்தல், கூட்டெரு தயாரித்துப் பயன்படுத்தல், பத்திரக் கலவை பயன்படுத்தல், உக்கலாகப் பயன்படுத்தல்.
* பலவகைப் பயிர் வளர்ப்பு (கூட்டுப் பயிர்வளர்ப்பு)

வருடம் பூராகவும் பல்வேறு பயிர்களிலிருந்து விளைவைப் பெறவும், வருமானம் பெறவும், பூச்சி நோய்களின் தாக்கத்தைக் குறைக்கவும் தனியொரு பயிரை வளர்க்காது பல பயிர்களைச் செய்கை பண்ணிப் பல்வகைமை பேணப்படும்.




* சுழற்சி முறைப்பயிர்ச்செய்கை (பயிர்ச்சுழற்சி)

மண்ணில் வளமான சத்துக்களை நிலை நாட்டவும் தொடர்ச்சியாக அவை பயிர்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்யவும் சுழற்சி முறை மூலம் வெவ்வேறு இனங்களைப் பயிடுதல் முக்கியமானது. இது பூச்சி நோய்களைக் கட்டுப்படுத்தவும் உதவும்.

உதாரணம்

* பயிர்ச்சத்துக்கள் மண்ணுக்குத் தரும் பயிர்கள்.
  பயறு, கௌபி, நிலக்கடலை, பயிற்றை, அவரை, கொத்தவரை, போஞ்சி.
* நோய்ப்பீடைகளைக் கட்டுப்படுத்தும் பயிர்கள்
  குரக்கன், தினை, சாமை, வெங்காயம், தக்காளி
* பயிர்கள் நெருக்கமாக நடப்பட்டு நிலப்பரப்பின் அதிகப் பயன்பாடும் நீர் இழப்பைத் தவிர்த்தலும்.
* கலப்புப் பயிர்ச் செய்கை, ஊடு பயிர்ச் செய்கை
* போசாக்கான உணவுக் கூறுகளைப் பெற்றுக் கொள்ளல். புரதம், கனிப்பொருட்கள், விற்றமின்கள், நார்ப்பொருட்கள், கொழுப்பு, மாப்பொருள்.
* உள்நாட்டுப் பாரம்பரிய இனங்களைப் பயிரிடலும் ஒரே பாத்தியில் பல இனப் பயிர்களை வளர்த்துப் பூச்சி பீடைகளைக் கட்டுப்படுத்தலும்.
* பூச்சி பீடைகளை விரட்டவும் குடும்ப மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்யவும் தெரிவு செய்யப்பட்ட மூலிகைப் பயிர்களைப் பயிர்களுடன் கலந்து நடுகை செய்தல்.
  திருநீற்றுப்பச்சை, துளசி, கற்பூரவள்ளி, இஞ்சி, மஞ்சள் போன்றவை.
* ஒவ்வொரு பாத்தியிலும் ஒரு இலை மரக்கறிப் பயிர், ஒரு அவரையினப் பயிர், ஒரு பழ மரக்கறிப் பயிர் மற்றும் மரக்கறி, கிழங்குப் பயிர்கள் எனப் பயிரிடப்படல்.

## பாத்தியமைப்பு



வீட்டுத்தோட்டத்தை அழகுபடுத்தி அலங்கரிப்பதற்காகப் பலவகையான பாத்தி அமைப்பு முறைகள் கையாளப்படுகின்றன.

அத்துடன் வீட்டுத்தோட்டம் அமைந்துள்ள இடத்தின் மண்வகை, மண் ஆழம், மழைவீழ்ச்சி, மண்ணின் நீர் வடியும் திறன், வெப்பநிலை போன்ற காரணிகளின் அடிப்படையிலும் பொருத்தமான பாத்தியமைப்பைத் தெரிவு செய்வது மிகவும் முக்கியமானது ஆகும். பாத்தியமைக்கும் போது ஆழப்பண்படுத்தல் என்பது நவீன விவசாய விஞ்ஞானிகளால் சிபார்சு செய்யப்படுகிறது. இதை நம் முன்னோர்கள் அறிந்து வைத்திருந்துள்ளார்கள். யாழ். குடாநாட்டு பாரம்பரிய விவசாய முறைகளை இன்றும் கடைப்பிடிக்கும் விவசாயிகள் இன்றும் இம்முறையைப் பின்பற்றிக் கூடிய பரப்பளவில் வர்த்தக விவசாயத்தைப் பின்பற்றுவது வியப்பிற்குரியது.

களப்பயிற்சி தொடரும்...

## மனிதர்களின் வகை

**மனிதர்களை நான்கு வகையினராகப் பிரிக்கலாம்.**

1. சந்தனக்கட்டை போன்றவர்கள்
2. பசுப் போன்றவர்கள்
3. மயில் போன்றவர்கள்
4. தேள் போன்றவர்கள்

**1) சந்தனக்கட்டை போன்றவர்கள்**

சந்தனக்கட்டையானது எவ்வாறு தான் தேய்ந்து - தன்னை வருத்தி பிறருக்கு மணம் கொடுக்கிறதோ அது போல தன்னை வருத்தி தியாகம் செய்து பிறருக்காக வாழ்பவர்.

**2) பசுப் போன்றவர்கள்**

பசுவிற்கு நாம் எந்த அளவிற்கு உணவு கொடுக்கிறோமோ அந்த அளவிற்கு அது பால் கொடுக்கும். அதுபோல தனக்கு என்ன ஆதாயம் கிடைக்கிறதோ அந்த அளவிற்கு உழைப்பவர்.

**3) மயில் போன்றவர்கள்**

மயில் தானாக இறகு போடாது. அதைப்பிடித்துத்தான் இறகைப் பிடுங்க வேண்டும். அதுபோல இந்த வகை மனிதரை நாமாகப் பணியாற்ற வைக்கவேண்டும்.

**4) தேளைப் போன்றவர்கள்**

தேளானது நன்மை செய்யாது கொட்டும் தன்மை கொண்டது. அதுபோல இந்தவகை மாந்தர்கள் நன்மை செய்யாமல் தீமையைச் செய்பவர்கள்.

# பனையோலை இராமன் க(ர)தைகள்

## வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் நகைச்சுவைத் தொடர்

## 6. மட்டம் தட்டிற கதை

ம. பா. மகாலிங்கசிவம்

தனக்குக் கணக்குப் பாடத்தையும் கணித ஆசிரியர்களையும் பிடிப்பதில்லை எண்டு பனையோலை ராமன் சேர் அடிக்கடி சொல்லுவார். "ஏன் சேர் அப்பிடிச் சொல்றீங்க?" எண்டு ஒருநாள் கேட்டேன். மாணவர்கள், ஆசிரியர்களையும், மற்றவர்களையும் மட்டந்தட்டுறதுக்கு கணித ஆசிரியர்களே காரணம் எண்டு அவர் சொன்னார்.

"இதென்ன சேர்? மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுறியள்?" நான் வாயைக் கிளறினேன்.

"என்ன தம்பி ஆக ஒரு லொள்ளனா இருக்கிறாய்" எண்டு என்னிலை பாய்ந்தார். (அவரின்ரை அகராதியிலை லொள்ளன் எண்டா மூளை குறைந்தவன் எண்டு அர்த்தம்.)

"தம்பி அவங்கதான் முதலாம் தசமதானத்துக்கு மட்டம் தட்டு. 2ஆம் தசமதானத்துக்கு மட்டந்தட்டு எண்டு மட்டந்தட்டிற கணக்கைப் படிப்பிக்கிறவங்கள். பொடியளும் ஆட்டைக் கடிச்சு மாட்டைக் கடிச்சு கடைசியா ஆக்களிலை வாய் வைக்கிற மாதிரி கணக்கிலை மட்டந்தட்டின பழக்கத்திலை கடைசியா வாத்திமாரை மட்டந்தட்டுறாங்கள்." எண்டு கோபத்தோடை சொன்னார்.

"ஏன் சேர் இப்பத்தைப் பிள்ளையள் வாத்திமாரை மதிக்கிறேல்லையோ?"

"துப்பரவா இல்லைத் தம்பி. மதிக்கிறமாதிரி இருப்பாங்கள். ஆனா மதிக்க மாட்டாங்கள்" எண்டார். "அதென்ன மதிக்கிற மாதிரி இருப்பாங்கள். ஆனா மதிக்க மாட்டாங்கள் எண்டு சொல்லுறியள்?" நானும் விடேல்லை.

"என்ன தம்பி பேந்தும் லொள்ளன் மாதிரிக் கதைக்கிறீர்" உதாரணம் சொல்லுறன். ஒரு நாள் யாழ்ப்பாணம் போக பஸ்ஸில ஏறினன். என்னைக் கண்டதுதான் தாமதம். என்ன்ட்டைப் படிச்ச ஒரு பழைய மாணவன் உடனை எழும்பினான். அவன் படிக்கிற காலத்திலை சரியான குழப்படி. வாத்திமாரை மதிக்க மாட்டான். என்னைக் கண்டு சீற் தர எழும்பின உடனை எனக்கு உச்சி குளிர்ந்து போச்சு. படிக்கிற காலத்திலை பிழை விட்டாலும் இப்ப



திருந்தி மதிக்கிறாங்கள் தானே எண்டு நினைச்சன். வலு புளுகமாய் இருந்தது.

"தம்பி என்னைக் கண்ட உடனை சீற் தர எழும்பினீரே. அதுதான் பெரிய சந்தோசம். அந்தச் சந்தோசம், ஒண்டே எனக்குக் காணும். நீர் இரும். நான் நிண்டு வாறன்" எண்டு சொன்னன்.

"சேர் நான் அடுத்த ஹோல்டிலை இறங்கப் போறன். அதுதான் எழும்பினனான்" எண்டு முகத்திலை அறைஞ்ச மாதிரிச் சொன்னான் தம்பி. அவங்கள் ஆசிரியரை மதிக்கிற மாதிரி இருப்பாங்கள். ஆனா மதிக்கமாட்டாங்கள் எண்டு இதைத் தான் தம்பி சொன்னான்.

"யுத்தத்திலை பயன்படுத்திற விதியளைத்தான் மாணவரிட்டை நான் பயன்படுத்திறனான்" என்று பனையோலை ராமன் சேர் சொன்னார். அப்படியெண்டா என்ன எண்டு கேட்டேன்.

"தம்பி எதிரியைத் தொடர்ந்து தாக்கிக் கொண்டிருந்தா அவன் திரும்பித் தாக்கமாட்டான் என்பது போர் விதி. அது மாதிரி மாணவனைத் தொடர்ந்து மட்டந்தட்டிக் கொண்டே இருந்தா அவனுக்கு வாத்திமாரை மட்டந்தட்டச் சந்தர்ப்பம் கிடைக்காது என்பது என்ரைவிதி" எண்டார்.


பனையோலை ராமன் சேர் நேரடித் தாக்குதல், கரந்தடித் தாக்குதல், முழுப்பலத்தையும் ஒன்று சேர்த்துத் தாக்குதல் எனப் பல யுத்த வியூகங்களை மாணவரை மட்டந்தட்டப் பயன்படுத்தியிருக்கிறார். அதிலை முக்கியமானது கதைகளைச் சொல்லிக் கேள்வி கேட்டு மட்டம் தட்டுதல்.

ஒருநாள் வாயாடியான, திமிர்ப்பிடிச்ச பொம்பிளைப் பிள்ளை ஒண்டை எழுந்து வகுப்புக்கு முன்னே வருமாறு சொன்னார். "நான் ஒரு கதை சொல்லுவன். கேட்டிட்டுப் பதில் சொல்ல வேணும் சரியே."

"சரி சேர்"

"ஒரு சின்னப்பெடியன் றோட்டாலை வந்து கொண்டிருந்தான். அப்ப ஒரு குட்டிக்குரங்கு மரத்தாலை விழுந்தது. இவன் அதைப் பிடிப்பம் எண்டு கலைச்சுக் கொண்டு போனான். அது ஒரு அறைக்குள்ளை புகுந்து கொண்டது. இவன் ஓடிப் போய்க் கதவைப் பூட்டிப் போட்டு ஆக்களைக் கூட்டிக் கொண்டு வரும் எண்டு போனான். அப்ப அந்தக் குட்டிக் குரங்கு எப்பிடித்

தப்பலாம் எண்டு எல்லா இடமும் பாத்தது. ஒரு மூலையிலே ஏணி சாத்தி வைச்சிருக்கு. இன்னொரு மூலையிலே ஓடுகள் உடைஞ்சு பெரிய இடைவெளி இருக்கு. பிள்ளை, உனக்குரிய கேள்வி இதுதான். இந்த ரண்டையும் பாத்திட்டு அந்தக் குட்டிக்குரங்கு என்ன யோசிச்சிருக்கும்."



"அந்த ஏணியை எடுத்துக் கொண்டு போய் மற்ற மூலையிலை சாத்திப் போட்டு ஓடு உடைஞ்ச பகுதிக்குள்ளால தப்பிப்போவம் எண்டு நினைச்சிருக்கும். சரிதானே சேர்?"

"இல்லைப் பிள்ளை. இந்தப் பெரிய குரங்கு யோசிச்ச மாதிரித்தான் அந்தக் குட்டிக்குரங்கும்' யோசிச்சிருக்கும் எண்டு சொல்லேலாது தானே."

மாணவர்கள் பெருஞ்சத்தமிட்டுச் சிரித்தனர். அத்தனை மாணவர் முன்னும் தான் பெரிய குரங்கு ஆக்கப்பட்ட நிலையை எண்ணி அவள் தலை குனிந்தாள். அதுக்குப் பிறகு திமிரா நடக்கிறதில்லை.

*(மட்டந்தட்டிற காதை மிகுதி அடுத்தவாரம் தொடரும்...)*

## ஜோக்ஸ்

**கணவன்** : என்ன விமலா காலண்டரை வைச்சு பாக்கிறாய்?

**மனைவி** : பல்லி விழும் பலன்

**கணவன்** : கொண்டா நான் பார்த்து சொல்றன். ஆமா.... பல்லி எங்க விழுந்தது?

**மனைவி** : நான் வைச்ச சாம்பாரில்.....

---

**கணவன்** : என்ன விமலா திடீர்னு சமையல் பண்ணுறாய்?

**மனைவி** : உங்க சமையல் கைப் பக்குவத்தை பார்த்த விருந்தாளிகள் இரண்டு நாள் கூட இருந்திடுவாங்க அதுதான் பண்ணுறேன்.


---

**நண்பர்** : ஒரு போக்குவரத்துக் காவலரும், பெண் பேருந்து நடத்துனரும் திருமணம் செய்தால் என்னவாகும்?

**மற்றவர்** : நடுவீதியில் நிற்பார்கள்.

# சாதனையாளர் கௌரவிப்பு

## செல்வன் பரமானந்தன் தனுராஜ்



*இவர் கடந்த 2013 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 194 புள்ளிகளைப் பெற்று தமிழ் மொழிமூலம் மாணவர்களில் அகில இலங்கையில் முதலிடம் பெற்ற மாணவர். யா/ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் கல்வி கற்று பாடசாலைக்கும் வடமாகாணத் துக்கும் பெருமை சேர்த்துள்ளார். இவர் இச்சாதனையை புரிவதற்கு அவரது ஊக்கமும் விடாமுயற்சியும் முக்கியமான காரணங்களாகும். சிறுவயதில் இருந்தே வாசிப்பில் ஆர்வம் உடைய இம்மாணவன் பத்திரிகைகள், நூல்களைத் தேடி வாசிப்பதில் அதிக அக்கறை உள்ளவர். பாடசாலை மட்டத்தினுள் கோட்ட வலய மட்டத்திலும் நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றி முதலிடம் பெறுபவர். 2008இல் நடைபெற்ற சைவ வினாவிடைப் போட்டியில் தேவாரப் பாடலில் 1ஆம் இடத்தையும், 2010இல் சைவவினாவிடைப் பேச்சுப் போட்டியில் 3ஆம் இடத்தையும், 2012 வாசிப்புமாத பொது அறிவுப் போட்டியில் 3ஆம் இடத்தையும், 2013 வாசிப்பு மாத பொது அறிவுப் போட்டியில் 3ஆம் இடத்தையும், 2014 இணுவில் பொது நூலக ஆண்டு நிறைவு விழாப் பொதுஅறிவுப் போட்டியில்' கலந்து 1ஆம் இடத்தையும் பெற்றுள்ளார். மேலும் மாகாண மட்டப் பொது அறிவுப் போட்டியில் குழு நிகழ்ச்சியில் பங்குபற்றி 1ஆம் இடத்தையும் பெற்றுள்ளார். இவர் தற்போது யாழ். இந்துக்கல்லூரியில் கல்வி கற்று வருகின்றனர். இவரது சாதனைப் பயணம் தொடரத் தமிழருவி வாழ்த்துகிறது.*

# சாதனையாளர் கௌரவிப்பு

2013ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சையில் 9 பாடங்களிலும் A தரச் சித்தி பெற்ற மாணவர்களின் விபரங்களையும் புகைப்படங்களையும் பிரசுரித்துத் தமிழருவி கௌரவம் அளிக்கின்றது. சாதனை புரியும் மாணவர்கள் கௌரவிக்கப்படும் நிகழ்வுகளின் தொடர்ச்சியாக இது அமைகின்றது. இனியும் தொடரும்....

சாதனையாளர்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள்! க.பொ.த (உ/த) பரீட்சையிலும் உங்கள் சாதனை தொடரட்டும்!

## க.பொ.த (சா/த) 2013
## யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

### 9A ஆங்கிலமொழி மூலம்

01. அபிராமி ரவிதரன்
02. ஜனந்தினி சிவபாலன்
03. லக்ஷிகா உதயகுமார்
04. பிரியங்கா கிறிஸ்ரியன்
05. ராகவி ராகவன்
06. சங்கவி சுதானந்தராஜா
07. சஸ்மீரா ஸ்ரீகணேசன்
08. வினுசியா பத்மநாதன்

### 9A தமிழ்மொழி மூலம்

01. விஸ்ணுப்பிரியா ரவீந்திரன்
02. ரதினி சண்முகலிங்கம்
03. பிரியங்கா நித்தியானந்தராஜா
04. அபிராமி நற்குணம்
05. கஜேந்தினி பாலேந்திரராஜா
06. நிஷானி பூவலிங்கம்
07. சுவேஸ்கா மோகன்ராஸ்
08. ரக்ஷனா ரவீந்திரன்
09. பவதாரணி கோகுலானந்தன்
10. கௌதமி விஜயகுமார்
11. பெனிற்றா அன்ரன் ஜேசுதாஸ்
12. சங்கவி திருச்செல்வம்
13. சுபஸ்திகா ஞானசம்பந்தன்
14. லௌசியா சுந்தர்
15. சயிந்தா ஜீவரட்ணராஜா
16. சாருகா சற்குணராஜா
17. மதுஷா சிவயோகன்
18. சர்மினி ஜெயசீலன்
19. தர்சிகா நவரட்ணம்
20. நிலுஜா மகாதேவன்

## க.பொ.த (சா/த) 2013 - யா/ இந்துக்கல்லூரி

### ஆங்கிலமொழி மூலம்

*01.* பத்மநாதன் மேசிகன்



*02.* சத்தியசீலன் கோகுலன்



*04.* ஆனந்தகுமார் வேதாகுலன்



*03.* சிவயோகம் சரண்யன்



### தமிழ்மொழி மூலம்

*01.* கனகலிங்கம் சங்கீத்



*02.* தேவகுமாரன் ரஜிந்தன்



*03.* சிவபாலன் சங்கீர்த்தன்



*04.* கணேசலிங்கம் பிரசாத்



*05.* யோகேஸ்வரன் சுவஸ்திகன்



## க.பொ.த (சா/த) 2013
## யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி

### ஆங்கிலமொழி மூலம்

*01. கிருஷிகா. மு*



### தமிழ்மொழி மூலம்

*01. யோ.விக்கினேஸ்வரன்*



*02. கவிப்பிரியா.ம*



*03. லக்ஷிகா.ரா*



*04. பிரகாஷினி.பி*



*05. சாவித்திரி. சு.*



*06. தே.லுகீதரன்*



*07. தா.வித்யாசாகரன்*



*08. க.சர்ஜனன்*



*09. க.வாகீசன்*



## க.பொ.த (சா/த) 2013
## யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி

**ஆங்கிலமொழி மூலம்**

*01. கஜீஷியா பேரின்பநாயகம்*



**தமிழ்மொழி மூலம்**

*01. அமிர்தவர்சினி அமிர்தலிங்கம்*



*02. சரணியா நாகராசா*



## க.பொ.த (சா/த) 2013
## யா/ நெல்லியடி மத்திய கல்லூரி

*01. விஜயரட்ணம் தனன்*



*02. லோகேஸ்வரன் விதுர்ஷா*



*03. நேசலிங்கம் உஜானா*



## க.பொ.த (சா/த) 2013
## யா/ வட்டு இந்துக்கல்லூரி

*01. பிறேமகாந்தன் ரிசிகாந்தி*



## க.பொ.த (சா/த) 2013
## யா/ விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி

*01. ஜெஸ்மி புலேந்திரன்*

## க.பொ.த (சா/த) 2013
## யா/ மகாஜனாக் கல்லூரி

*01. சு. சோபிகா*



## க.பொ.த (சா/த) 2013
## யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

**தமிழ்மொழி மூலம்**
*01. பாலச்சந்திரன் நர்மதா*

**ஆங்கிலமொழி மூலம்**
*02. உமாசங்கர் சகானா*

## க.பொ.த (சா/த) 2013
## கிளி/ கிளிநொச்சி இந்துக்கல்லூரி

*01. சிவகுமார் சுஜித்குமார்*



## க.பொ.த (சா/த) 2013
## புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி

01. சுபனேந்திரா. செ.



02. சகானா. க.



# நல்ல உள்ளங்கள் பாராட்டுக்குரியவை

க.பொ.த (சா/த) 9A சித்தி பெற்ற மாணவர்களின் விபரங்களைப் பெற யா/ வட்டு இந்துக்கல்லூரிக்குச் சென்றிருந்தோம். அப்போது ஆங்கில மொழி மூலத்தில் 9A சித்தி பெற்ற மாணவியான பிறேமகாந்தன் ரிசிகாந்தியின் குடும்ப வறுமை பாடசாலை நிர்வாகத்தினரால் எடுத்துக் கூறப்பட்டது. க.பொ.த (உ/த) இல் கற்பதற்கு உதவும்படி கேட்கப்பட்டது. எமது தொடர்ச்சியான முயற்சியின் பயனால் இலங்கை வங்கி சுன்னாகம் கிளையில் கடமையாற்றும் திரு. பத்மநாதன் இரமணகிருஷ்ணா அவர்கள் கல்வி நிதியாக 2 ஆண்டுகளுக்கு மாதாந்தம் 3000 ரூபாவை வழங்க முன்வந்துள்ளார். எல்லாப் புண்ணியத்திலும் "ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தலே கோடி புண்ணியம்" என்ற பாரதியாரின் கருத்திற்கேற்ப உதவியளிக்க முன்வந்த இந்த நல்ல உள்ளத்தைப் பாராட்டுகின்றோம். இவர் போல் இன்னும் உதவியாளர்கள் பலரை எதிர்பார்க்கின்றோம்.

## அறிஞர்களின் பொன் மொழிகள்

- அயலானை நேசி, அதற்காக அவனையும் உன்னையும் பிரித்து வைக்கும் வேலியை பிடுங்கி வீசாதே. - ஜேர்மன் மூதுரை -
- நுண்ணறிவு அன்புடன் சேர்ந்துவிட்டால் அதனால் அடையமுடியாதது எதுவுமில்லை. - கதே -
- நேற்றுச் செய்த தவறுக்கு இன்று பரிகாரம் காணமுடியாது. தவறே நிகழாமல் பார்த்துக்கொள். - ஞானி -
- அறிவே நல்ல ஆற்றலாகும். - றேபஸ் -

# மீளாது தவிக்கின்றது

என்ன இது வாழ்க்கை
எரிகிறது மனம் தணலாய்
உன் மடியில் விழுந்துண்டால்
உளம் குளிரும் என்கிறது
கண் இமைகளை மூடிக்
காலன் வழியேகு முன்னர்
உன் மேனி மண் குளித்து
உயிர் செல்ல ஏங்கிறது

பெண்பூக்கள் தூவி
வான் முட்ட எழுங்கடலில்
கண்பூக்கள் கதை பேசும்
கரையில் மணல் திடலில்
விண்பூக்கள் தங்க
நிலவுப் படகொளியில்
மென்காற்றில் மிதக்கும் சுகம்
மீளாதே தவிக்கின்றது

பனையின் சுவை நீரும்
பனாட்டொடிற் கூழ்பிட்டும்
பிணி தீர்க்கும் தூதுவளை
பொற் சிந்தில் தும்பையென
இனிக்காணும் நாள் வருமோ?
இயமன் தான் வருவானோ?
கனவாய்ப் பழங்கதையாய்க்
காலமுந்தான் பறந்திடுமே?

சூழ் மீனும் கள்ளும்
சுவைத்துப் பெருவெளியில்
ஆல் நிழலில் நிம்மதியாய்
அயர்ந்துறங்க இனி வருமோ?
ஊழ் வினையால் மாசு நிறை
சூழலில் தான் மரணமதோ?
வாழ்வென்ன வாழ்வு இது தான்
உன் மடி கிடந்து சாகலையேல்!

வானுக்கும் நிலவுக்கும்
உள்ள உறமெது
மீனுக்கு நீரன்றி
நெருப்பா துணையிருக்கும்?
போதையும் மதுவும் போல்
பிண்ணிப் பிணைந்த எங்கள்
நேத்தை யார் அறிவார்
யாழே நம் உறவை

நெஞ்சில் நிழலாடும்
நினைவுப் பூ நிஜயாக்கிக்
கொஞ்சத் துடிக்கிறது
கோமளே என் இதயம்
பஞ்சாய் பறக்கு துந்தன்
பாதத்தில் வீழ்ந்து அழ
வஞ்சகக் கூத்தொழியும் நாள்
வாராதே துடிக்கிறது.

எங்கோ இருந்து புலம்புகின்றேன்
எண்ணியெண்ணித்
திங்கள் பலகடந்தும்
திசை பார்த்துக் காத்திருக்கின்றேன்
இங்கு இனவெறியின்
இடவெளியோ நீள்கிறது
கங்குல் விலகாதோ?
கனவுந்தான் பலிக்காதோ?

முழுப்பெயர் - ஞானலிங்கம் விதுஷிகா
வயது – 13, 09E
முகவரி – 02 செட்டித்தெரு
ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.
பாடசாலை – யா/ வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை

## எழுதுங்கள்! வெல்லுங்கள்!

# வெண்பாப் போட்டி

புலவர்மணி அல்ஹாஜ் ஆ. மு. ஷரிபுத்தீன் நினைவாக அவரது மகன் காப்பியப் புலவர் ஜின்னா ஷரிபுத்தீன் அவர்கள் நடத்தும் வெண்பாப் போட்டி "மல்லிகைப் பூ வாசம் வரும்" என்னும் அடியை இறுதியாகக் கொண்டு ஒரு வெண்பா எழுதி அனுப்புங்கள். முறையே 700/-, 500/-, 300/- முதல் மூன்று பரிசில்களாக வழங்கப்படும். வெண்பா அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 30.10.2014 அனுப்ப வேண்டிய முகவரி,

## எழுதுங்கள்! வெல்லுங்கள்!

# பாடசாலை மாணவர் களுக்கான மாதாந்த கட்டுரைப் போட்டி இல - 7

"இளைஞர்களின் ஒழுக்க விழுமியங்களைச் சீர்படுத்துவதில் இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகளின் பங்களிப்புப் போதுமானதா? இல்லையா?" என்பதை மையமாகக் கொண்டு கட்டுரை அமைய வேண்டும். 500 சொற்களுக்குக் குறையாததாக இருக்க வேண்டும். முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவருக்கு முறையே 1000/-, 750/-, 500/- வழங்கப்படும். இந்த ஆக்கம் குறித்த மாணவருடையது என்பதை அதிபர் உறுதிப்படுத்திய பின்னர்,

த.கணேசமூர்த்தி, தமிழருவி இயக்குநர், உதவி ஆசிரியர், சிவகுல வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். ஆசிரியர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. ஆக்கங்கள் கிடைக்கவேண்டிய இறுதித்திகதி 30.10.2014

வெண்பா பற்றிய தெளிவு இல்லாத வாசகர்களுக்காக "வாழ்வதற்கு என்ன வழி?" என்ற இறுதி அடியை வைத்து எழுதப்பட்ட வெண்பா ஒன்று கீழே தரப்படுகிறது.


# வெண்பா

**மண்ணெயுடன் சீனிபால் மாவோ டரிசிவகை**
**விண்ணினையே முட்டும் விலையேற்றம் – எண்ணியெண்ணி**
**நாளெல்லாம் வாடும் நலிந்தோர்கள் இந்நாட்டில்**
**வாழ்வதற் கென்ன வழி?**

இச் சஞ்சிகையானது அதன் நிர்வாக இயக்குநரும் உதவி ஆசிரியரும் வெளியீட்டாளருமான செ. த. கணேசமூர்த்தி அவர்களால் 01.10.2013 இல் ஆனைக்கோட்டை றூபன் பிறிண்டேர்ஸில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



யாழ் மண்ணில் முதன் முறையாக
Duple Side Photo
அல்பத்தினை (Synthetic Album) அறிமுகப்படுத்தியுள்ளோம்.
RESOLUTION - 2800 dpi
12 Colour
LG G PK MK
E LM M LC
Y GN B R
PRINT SIZE - 24" x48"
புத்தம்புதிய தொழில் நுட்பத்தை
யாழில் அறிமுகப்படுத்தும்
ஒரே நிறுவனம்.
Moorthy Lazer Digital Colour Lab
1st Floor,
62/20 Stanly Road,
Jaffna. T:P 021 222 1358
இலகுவாக எடுத்துச்செல்லக்கூடிய எடைகுறைந்த மெல்லிய அல்பம்
200 வருடங்கள் மங்காத தன்மையுடையது
நீரில் பழுதடையாத தன்மையுடையது
பல்வேறு அளவுகள், பரிமாணங்கள்
3D SUBLIMATION
HEAT PRESS MACHINE
Print Available Here


WEL COME
மயில்
பெண்கள் அழகுக்கலை
நிலையம்
Once
Try


மயில்
மொடலிங் ஸ்ரூடியோ
அன்
வீடியோ
Post Box Junction Thiruneveli
Phone no - 0776914123


பிறந்தநாள் வாழ்த்து
கோண்டாவில் வடக்கு கோகுல வீதியை வதிவிடமாகக்
கொண்ட திரு. திருமதி. ஜெயக்குமார் பிறேமினி
தம்பதியினர்ன் செல்வப் புதல்வி
தரணிகா
27.08.2014 தனது இரண்டாவது பிறந்த நாளை கொண்டாடுகிறார்.
அகமகிழ வாழ்த்துவோர்கள்
அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா,
அம்மம்மா, அம்மப்பா, மாமா, அத்தை, மச்சான்மார்,
பெரியம்மமார், பெரியப்பமார்,
சித்தி, சித்தப்பா, அண்ணாமார், அக்காமார், தம்பி

06 JUN 20
3440

வட மாகாணத்தில் முதல் தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

# கிருபா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதி பயிற்சிப் பாடசாலை

மும்மொழிகளிலும் வாகன பயிற்சி அளிக்கப்படும்.

**இப்பொழுது வவுனியாவில்**

இல. 216, A9 வீதி, (வசந்தி திரையரங்கு முன்பாக)

024 222 7777, 077 710 0044

*பெண்களுக்கான நவீன காரில் பயிற்சி வழங்கப்படும்.*

* வாகனப் பயிற்சிகள் சகல கிளைகளிலும் வழங்கப்படும்.
* குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாகச் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
* எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள் வழங்கப்படும்.
* அனுபவம் வாய்ந்த வாகன பயிற்றுனர்களால் வாகனப் பயிற்சிகள் வழங்கப்படும்.
* தாங்கள் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சி வழங்கப்படும்.
* வான், கார், முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், லான்ட்மாஸ்ரர், ரக்டர், பஸ் என்பவற்றுக்குப் பயிற்சியுடன் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
* ரெயலில் சித்தியடையத் தவறின் தொடர்பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.

# KIRUBA LEARNES

*(Govt. Approved A Grade Driving Training School)*

*தலைமைக் காரியாலயம் – 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

T.P : 021 222 4353, 021 492 3200

## எமது கிளைகள்

பருத்தித்துறை
T.P : 021 492 3201
071 454 6958

சுன்னாகம்
T.P : 021 224 2022
071 454 6956

நெல்லியடி
T.P : 021 300 6550
071 454 6957

சாவகச்சேரி
T.P : 021 492 3202
021 227 0700

கிளிநொச்சி
T.P : 021 228 5505
071 454 6955

விசுவமடு
T.P : 021 320 1515
071 454 6955

மன்னார்
T.P : 071 988 7699,
077 847 2732

அச்சுப்பதிப்பு:- றூபன் பிறிண்டேர்ஸ் ஆனைக்கோட்டை. 021 225 5566